# திருப்பங்கள்

(ஒன்பது பெண் எழுத்தாளர்
இணைந்தெழுதிய குறுநாவல்)



பதிப்பாசிரியர் :

## கோகிலா மகேந்திரன்

சோலைக்குயில் அவைக்காற்றுக் கள வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பங்கள்

## ஒன்பது எழுத்தாளர் இணைந்தெழுதிய குறுநாவல்

பதிப்பாசிரியர்
**கோகிலா மகேந்திரன்**

தொகுப்பாசிரியர்கள் :
**மண்டூர் அசோகா**
**கோகிலா மகேந்திரன்**

சோலைக்குயில் அவைக்காற்றுக்கள வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பங்கள்

குறுநாவல்

| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர் | : | கோகிலா மகேந்திரன் |
| தொகுப்பாசிரியர்கள் | : | மண்டூர் அசோகா<br>கோகிலா மகேந்திரன் |
| எழுத்தாளர் குழு | : | இந்திராணி தாமோதரம்பிள்ளை<br>மாவை பாரதி<br>நயீமா சித்தீக்<br>சாரதா சண்முகநாதன்<br>ஆனந்தி<br>மண்டூர் அசோகா<br>கோகிலா மகேந்திரன்<br>அருண் விஜயராணி<br>தேவமனோகரி |


| | | |
|---|---|---|
| பதிப்புரிமை | : | சோலைக்குயில் அவைக்காற்றுக்களம் |
| முதற்பதிப்பு | : | 2023 புரட்டாதி |
| பக்கங்கள் | : | 78 + xxiv |
| பிரதிகள் | : | 200 |
| விலை | : | 600/- |
| ISBN | : | 978-624-5407-03-3 |
| வெளியீடு | : | சோலைக்குயில் அவைக்காற்றுக்களம் |
| அச்சுப்பதிப்பு | : | அம்மா அச்சகம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

வாழ்க்கை என்பதொரு நீண்ட பயணம். வளைவுகள் நெளிவுகள் நிறைந்தது. சீரான நதியோட்டத்தைப் பள்ளங்களும் பாறைகளும் திசை மாற்றுவது போல் வாழ்க்கைப் பயணத் திலும் தடைக்கற்கள் பல்வேறு சம்பவங்களாக வந்து பாதை மாற்றும். இளமையின் இனிய கனவுகள் சுமந்து இல்லறத்தில் இணைந்த முரளியும் ரமணியும் இருவேறு கோட்பாடுகள் கொண்ட சமூகக் கட்டமைப்பில் சிக்கிக் கொள்கின்ற போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் எங்ஙனம் அவர்தம் வாழ்க்கைப் பாதையைத் திசை மாற்றப் போகின்றதென்பதே "திருப்பங்கள்".. தடைகளைக் கடந்து போகலாமா அல்லது அதில் அமிழ்ந்து தொலையலாமா.... காலம் சொல்லட்டும்.

**இந்திராணி தாமோதரம்பிள்ளை**
**(திருமதி இந்திராணி புஸ்பராஜா)**

அன்னைத் தமிழவளை அகத்திருத்தி, ஐயன் முருகையன் தாள் பணிந்து, எந்தன் உள்ளக் கமலத்தில் ஒளிர்கின்ற கதிரொளியால் உணர்வும் அறிவும் ஒத்திழுக்கும் என் கற்பனைக் குதிரையின் கன்னி முயற்சியை நினைவு கூருகின்றேன். 1980ஆம் ஆண்டு ஆழக்கடலின் அலையோசை யின் உயிரோட்டமான பின்னணியில் கீரிமலைக் கடலோர மண்டபத்தில் பெண் எழுத்தாளர் குழுவில் ஒருவராக நானும் அமர்ந்திருந்தேன். திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களின் தலைமையில் கரு ஒன்று உருப்பெறலுக்கான கருத்தேற்றங்கள் ஒன்றுகூடிக் கலந்துரையாடப்பட்டுத் "திருப்பங்கள்" என்னும் நெடுந் தொடரின் படைப்பாக்கம் உருவானது. இதுவரையான ஈழத்து இலக்கிய வரலாற்றில் இத்தகையதோர் சிருஷ்டி இத்தனைபேர் சேர்ந்து உருவானதில்லை என்பதைப் பெரு மிதத்துடன் இன்று குறிப்பிடுகிறேன். அற்புதமான பயணத்தில் ஒரு தரிப்பிடமாக நானும் எனது அத்தியாயத்தை ஏற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அதில் மனமொன்றி, மலையகத்தின் இயற்கையெழில் கொஞ்சும் தோற்றப் பொலிவினுள் மானசீகமாக உள்நுழைந்து, கதாநாயகனின் பயணத்தை என் மனதிற்குகந்த முறையில் பதிவு செய்தேன்.

அது பொற்காலம். எனது வயதோ இருபத்தெட்டு. இலக்கியப் பூங்காவில் அப்பொழுதுதான் முகையவிழும் முல்லைச்சரமாக மனமெல்லாம் தெய்வீக சுகந்தம் என்னை ஆட்கொள்ள நான் புதிதாகப் பிறப்பெடுத்த பெருமையுடன் நடை பயின்றேன். புதிய, புதிய முகங்களின் சந்திப்பு, வெவ்வேறு பிரதேசங்களின் மண் வாசனைகளின் கதம்பப் படைப்பாக உருவான கலைப் படைப்பு இன்று திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்களின் முயற்சியில் நம்மவர்களின் கைகளில் தவழ்கின்ற இந்த நொடி! இது புனிதமானது. நம் இருவருக்கு மிடையிலுமான நட்புறவு; பொன்விழா நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இனிய பயணம் தொடரட்டும்.

இக் கைங்கரியத்தில் இணைந்து கொண்ட அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து நிற்கின்றேன்.

நன்றி - வணக்கம்

**மாவை பாரதி**
**(திருமதி. பாகீரதி கணேசதுரை)**
04-09-2023

பல்லாண்டுகளின் பின்னர் புதையல் வெளிப்படுகின்றது. என்றோ பூமியில் புதையுண்ட வித்து முளைத்து வெளி வருகிறது. இதேபோல்தான் எப்போதோ எழுதிய இந்தத் தொடர்கதை.... ஒன்பது எழுத்தாளர்களால் எழுதப்பட்ட வித்தி யாசமான கதை தசாப்தங்கள் பலவற்றின் பின்னர் வெளி வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதையலை வெளியெடுக்கப் பல்வேறு சவால்கள்.... சிரமங்கள்.

விதை முளைக்க விதையின் கடும் முயற்சி..... இவை அனைத்தையும் கடந்த பெரு முயற்சி - அயராத முயற்சி - சகோதரி கோகிலா மகேந்திரனுடையது... நூலுருவில் வரு வதற்கு இறைவனுக்கும் சகோதரி கோகிலா மகேந்திரனுக்கும் மானசீக நன்றிகள்.

**(திருமதி) நயீமா சித்தீக்**
04-09-2023

மித்திரன் பத்திரிகையில் ஒன்பது எழுத்தாளர்களாகக் கூட்டுச் சேர்ந்து எழுதி வெளியான "திருப்பங்கள்" என்ற குறு நாவல் குறித்து எனது முன்னுரையை மகிழ்ச்சியுடன் இங்கு சமர்ப்பிக்கின்றேன்.

இது நான் எதிர்பாராமல் நடந்த ஒன்று. இதை எழுதிய தருணம் எழுத்துலகில் பிரகாசிக்க முடியாமல் போன ஒரு கற்றுக்குட்டி நான் என்று சொல்வது பொருத்தமானதே! அவ்வேளையில்தானோ, அதற்கு முன்பதாகவோ தெரிய வில்லை; கலைச் செல்வியில் எனது சிறுகதை ஒன்று கனமில்லை என்று தூக்கி எறியப்பட்டிருந்தது. அதற்காகப் பின்வாங்கிச் சோர்ந்து போய்விடவில்லை நான். ஏனென்றால் தமிழ் என் உயிர்மூச்சு. இதை முன்வைத்தே எழுதும் கலையை இன்றுவரை ஒரு தபஸ் போலச் செய்து நிலைநிறுத்தும் மன வலிமை எனக்கானது. அதனால்தான் வயது போன நிலையிலும் இன்னும் எழுதிக் கொண்டிருக்கிறேன். இது இப்படியிருக்க,

எதிர்பாராதவிதமாக, என் கழுத்தில் விழுந்த பூமாலை யாக ஓர் அபூர்வ நிகழ்ச்சி! எனதருமைத் தோழி கோகிலா மகேந்திரன் அவர்களிடமிருந்து ஓர் அழைப்புக் கடிதம்! நான் எழுதுவது அவருக்கு எப்படித் தெரிந்தது? அதிலும் இலை மறை காயாக இருக்கிற என்னை வைத்து இப்படியொரு கடிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் எழுதியிருந்தார். அப்போது ஈழநாடு பத்திரிகையில் வெளியான எனது கதையை அவர் மட்டுமல்ல, அவரது கணவரும் படித்து விட்டு நல்ல கதை என்று பாராட்டியதோடு எப்படியோ என் விலாசத்தைக் கண்டறிந்து கடிதம் வேறு போட்டிருக்கிறாரே! ஒன்பது பேராகச் சேர்ந்து ஒரு குறுநாவல் எழுத என்னையும் சேர்த்துக் கொண்டிருப்பதாகவும் இதுபற்றி ஒரு கலந்துரையாடல் நிகழ இருப்பதாகவும் என்னை வந்து அதில் கலந்து கொள்ளுமாறும் கேட்டிருந்தார். இது எனக்கு ஒரு பொன்னான வேளை! என் எழுத்துத் தபஸ் முழுவதுமாகக் கண்திறக்க ஓர் அரிய சந்தர்ப்பம். எவருடனும் நான் போட்டி போட வரவில்லை. வாழ்க்கையைப் படித்தே வேதம் கற்றுக் கொண்டவள் நான். இதை என் எழுத்திலிருந்தே புரிந்து கொள்ளலாம். இந்த அரியவாய்ப்பை அப்போது எனக்கு அருளியதற்காக இச்சந்தர்ப்பத்தில் எனதருமைத் தோழிக்குத் தலை வணங்கி நன்றி கூறுகின்றேன்.

இன்னும் ஒரு சிறு சம்பவம். என் எழுத்து வாழ்வில் மறக்க முடியாத ஒரு சிரஞ்சீவ நிகழ்ச்சி. அப்போது பெரிய பத்திரிகைகளில் எழுத எனக்கு இடம் கிடைக்காததால், "நான்" என்ற உளவியல் சஞ்சிகையில் நான் எழுதியவை ஏராளம். அவர்கள் அனுமதித்த "புதுவீடு" என்ற குறுநாவலை அதில் தொடராக எழுதினேன். அதன் முதல் அங்கம் ஆண்டு மலரில் வெளியானது. அதன் வெளியீட்டு விழாவை நல்லூர் பிரதேச சபையில் சிறப்பாக நிகழ்த்தினார்கள். அதில் பேசிய காலஞ்சென்ற எழுத்தாளர் "செம்பியன் செல்வன்" அவர்கள், என் குறுநாவல் பற்றிக் குறிப்பிடும்போது என் எழுத்து நடை கைதேர்ந்த எழுத்தாளரைப் போல் இருப்பதாகக் கூறியதை நான் வேத வாக்காக எடுத்துக் கொண்டேன். என் எழுத்து முதிர்ச்சி அப்படித் தொடங்கியது என்பதைக் கூறவே இதை எழுத நேர்ந்தது. எழுதுவது எனக்கு ஒரு மானசீகத்தவம். சைதன்ய இருப்பை மறவாமல், உள்ளார்ந்த ஆத்ம லயிப்புடன் நான் எழுதிக் குவித்தவை கணக்கிலடங்கா. வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டே வாழக் கற்றுக் கொண்ட என் வேத இருப்பை மறவாமலே இன்றுவரை என் எழுத்துப் பயணம் தொடர்கிறது. இம் முன்னுரையை எழுதிச் சமர்ப்பிக்கத் தூண்டிய என் ஆருயிர் நண்பி கோகிலா மகேந்திரன் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு மீண்டும் நன்றி கூறி இம் முன்னுரையை நிறைவு செய்கிறேன்.

**ஆனந்தி**
03-09-2023

ஏராளமான பெண் எழுத்தாளர்கள் வீச்சாக எழுதிக் கொண்டிருந்த எழுபதுகளின் நடுப்பகுதி. சில பரீட்சார்த்த முயற்சிகளில் எம் போன்ற சில எழுத்தாளர்களை ஈடுபடுத்தி எங்கள் எழுத்துக்களுக்குக் களம் அமைத்துத் தந்த வீரகேசரி மித்திரன் போன்ற பத்திரிகைகளுக்கு நன்றி சொல்ல வேண்டிய வர்கள் நாங்கள் - நான் உட்பட நான்கு பெண் எழுத்தாளர் களை ஒன்று சேர்த்துச் சதுரங்கக் கதை எழுத வைத்துப் பிரசுரித்த வீரகேசரியைத் தொடர்ந்து ஒன்பது பெண் எழுத்தாளர்களை இணைத்துத் "திருப்பங்கள்" என்ற இத் தொடர் கதையை எழுத வைத்து "மித்திரன்" வார மலர் பிரசுரித்தது. இத் தொடர் கதைக்கு இணைப்பாளராக மறைந்த எழுத்தாளர் காவலூர் எஸ். ஜெகநாதன் செயற்பட்டிருந்தார்.

இக்கதைப் பிரதிகளை இன்று நூலுருவாக்குவதற்கு முன்வந்த எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரனை நாம் பாராட்ட வேண்டும். யாழ்ப்பாணத்தையும் மலையகத்தையும் இணைக்கும் பாலமாக உருவான இத்தொடரில் அக்கால மலையக மக்களின் அப்பாவித்தனங்களும் அவர்களிற் சிலரின் அறியாமையால் ஏற்படும் முரண்டுபாடுகளும் யாழ்ப்பாணத்துக் குடும்பமொன்றின் வாழ்க்கைப் போராட்டங்களும் எமது அப்போதைய சிந்தனைப் போக்கில் உருப்பெற்றிருப்பதை அறிய முடியும்.

எம்மை நாமே திரும்பிப் பார்க்கும் முயற்சியாக இத் தொடரை நூலுருவாக்கிப் பார்ப்பதில் உவகை கொள்கிறோம்.

**– மண்டூர் அசோகா**
05-09-2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். தீவகத்தின் ஒன்றான காவலூரின் கண்ணே அமைந்துள்ள கரம்பொன் எனது பிறப்பிடம். பெரும்பான்மை யான ஈழத்தமிழருக்கு நேர்ந்தது போலவே நானும் புலம் பெயர்ந்து கனேடிய தேசத்தில் வாழ்கின்றேன். இயல்பாகவே எழுத வேண்டும் என்ற ஆர்வம் இளம் வயதில் தொடங்கியது. இலக்கியவான்களின் அறிமுகம், நட்பு, வழிகாட்டலில் என்னை எளிமையாக ஈடுபடுத்தி, என் அகத்திடை தோன்றியதை, எழுத்துக்களால் படர விட்ட தருணம் எழுதப்பட்டதே இக் குறுநாவல்.

எழுத்தாற்றல் உள்ளவர்களை ஓர் இலக்கிய வட்டத்துக்குள் இணைத்து, குறுநாவல் ஒன்றை உருவாக்க முனைந்தோம். ஒன்பதுபேர் சேர்ந்து ஒரு குறுநாவலை உருவாக்கியும் அதை வெளிக்கொண்டுவர முடியாத கால இடைவெளி நீண்டதாகப்போய் --

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தம், இடப்பெயர்வு, இழப்புகள், மறந்துவிட்டோம்.

பொக்கிஷமாய்ப் பாதுகாத்த என் எழுத்துக்கள் எல்லாம் கரைந்து போனதுபோல், திருப்பங்கள் திசை மாறிவிட்டதோ என்ற எண்ணத் தோன்றல் --!

ஒன்றல்ல, இரண்டல்ல, நாற்பது வருடங்களுக்கு மேலாகி விட்டது. திடீரென்று இரண்டு நாள்களுக்கு முதல் ஒரு திருப்பு முனையாகத் திருப்பங்கள் திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்களின் வடிவில் கண்முன்னே வந்தது. நம்ப முடியவில்லை. அத்தனை மகிழ்ச்சி. திக்கற்றுப் போனவர் களைக் கண்டு பிடித்தது மாதிரி --

இக்குறுநாவலை நினைவு கூர்ந்து பார்க்கையில் ,அன்றைய சமுதாய ஏற்றத்தாழ்வு, சாதியச் சடங்குகள் என்ற பெயரில் உயிரையும் உணர்வுகளையும் உருவிக் கொண்டிருக்கும் அறியாமையில், காதல் வசப்பட்ட உள்ளங்கள் கசங்குவதை ஒவ்வொருவரும் அழகாகக் கொண்டு சென்று முடித்துள்ளார்கள். அன்பும், பேரன்பும், அதன் பிரிதலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்தலும்,என உணர்வுகளால் ஒவ்வொரு செங்கற்களாக எடுத்துக்கட்டி எழுப்பப்பட்ட "திருப்பங்கள்" கைகளில் தவழ முயற்சி செய்த சகோதரி கோகிலா மகேந்திரனுக்கும் சக எழுத்தாளர்களுக்கும் என் வாழ்த்தும் நன்றியும் .

மாறும் உலகில் மாறாதது ஒன்றுமில்லை .மாற்றுவோம் நம் எழுதுகோலால் !

**சாரதா சண்முகநாதன்**
**(திருமதி சாரதா பரநிருபசிங்கம்)**
**16.9.2023.**

மிகநீண்ட காலத்தின்பின் "திருப்பங்கள்" நூலாக வெளிவருவதையிட்டு நான் மகிழ்கின்றேன் .

**தேவமனோகரி**
**(திருமதி தேவமனோகரி ராஜன்)**
21.09.2023.

உள்ளத்திலே உள்ளதுதான் உலகம்!

முதுமையுள் நுழையும் போது "நாம் வாழ்வில் பயனுள்ளதாய் என்னதான் செய்திருக்கிறோம்?" என்று, நின்று திரும்பிப் பார்ப்பது இயல்பு. எனது வாழ்வின் கலைக்கூறுகள், இலக்கியக் கூறுகளைப் பெரும்பாலும் ஆவணப்படுத்தியிருக் கிறேன். எழுதிய குறுநாவல்களில் தான் கொஞ்சம் வெற்றிடம் இருக்கிறதென்பதை அறிவேன். குறிப்பாகப் பலர் சேர்ந்து எழுதிய குறுநாவல்கள்! "சிதைவுகளில் ஓர் உதிப்பு" (12-08-1984 முதல் ஈழநாடு வாரமலர்) திருப்பங்கள் (13-07-80 முதல் 07-09-80 வரை மித்திரன் வாரமலர்) ஆகியவற்றின் முழுமையான வடிவங்களைத் தேடிக் கொண்டிருந்தேன்.

ஜீவநதி சஞ்சிகை 2022 யூலையில் மண்டூர் அசோகா அவர்களின் சிறப்பிதழை வெளியிட்டது. அதைப்படித்து முடித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்நத அனுபவச் சிலிர்ப்பில், அவருடன் தொடர்பு கொண்டு எனது மகிழ்வைத் தெரிவித்தேன். "அந்த நாள் ஞாபகம்" வந்தது. "நாங்கள் நவசிற்பிகள் ஒன்று சேர்ந்தெழுதிய திருப்பங்கள்" நினைவிருக்கிறதா? என்னிடம் அத்தொடரின் ஒரு அத்தியாயம் மட்டுமே இருக்கிறது. அதையும் "கிண்டி" எடுக்க வேண்டும்?" என்று கூறினேன். யுத்த அனர்த்தமும், சுனாமியும் பல எழுத்தாளர்களின் ஆக்கங்களைத் தின்று தொலைத்தமை பரகசியம். அப்போதுதான் அந்தத் "தீரா இன்பச் சுவை" தந்தார் அசோகா. "என்னிடம் ஒரு அத்தியாயம் தவிர மீதி இருக்க வேண்டும் கோகிலா" என்றார். இந்தச் சந்தர்ப்பத்தை இனிப் பிற்போடக்கூடாதென்றது அறிவு. சிறகு விரித்துப் பறந்தது உணர்வு.

அசோகாவின் பலவித வேலைப் பழுக்கள் மத்தியிலும், அவரிடமிருந்து போட்டோப் பிரதிகளைப் பெற்று, எழுத்துப் பிழைகள், மண் வாசனைப் பிரயோகங்கள் ஆகியவற்றில் மட்டும் சிறு மாற்றங்கள் செய்து நூலாக்கும் முயற்சியைத் தொடங்கினேன்.

1980இல் எம்முடன் பயணம் செய்த "அருண்விஜயராணி" மட்டும் இன்று எம்முடன் இல்லை. அவரது கணவருடன் தொடர்பு கொண்டோம். சாரதா சண்முகநாதன், தேவமனோகரி ஆகியோர் புலம் பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தாலும் பிரயாசைப்பட்டுத் தேடி அவர்களைக் கண்டு பிடித்தோம். அவர்களோடு தொடர்பு கொள்ள உதவியோருக்கு எனது முகநூலில் நன்றி தெரிவித்திருக்கிறேன்.

எமது நாட்டில் பரந்து வாழும் ஐவரும் சரிசமமாக நிழல் போலவே என்னுடன் வந்தனர். அவர்களின் ஆதரவுக்கும் ஒத்துழைப்பிற்கும் என் தலை தாழ்ந்த வணக்கமும் நன்றியும் உரியவை.

நூலுக்கான அட்டைப் படத்தைச் சோலைக் குயில் அவைக்காற்றுக்கள மத்தியகுழு உறுப்பினரும் எழுத்தாளரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகிய கந்தர்மடம். அ. அஜந்தன் அவர்கள் செம்மையாகச் செய்து உதவினார். அழகான அந்த ஓவியம் மனக்கண்ணில் ஒரு போதும் மறையாது. அவர் காலத்தால் செய்த உதவி மிகப் பெரிது.

அணிந்துரை எழுதிய இளைப்பாறிய நூலகர் க. சௌந்தர ராஜன் அவர்களுக்கும் நாம் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம். அவர் நூலகம் ஒன்றைப் பேணும் பரப்பும் ஒழுங்கும் அணிந்துரையிலும் பளிச்சிடுகிறது. அணிந்துரையைப் பெறு வதில் உதவிய மாவை. பாரதிக்கும் நன்றி.

நூல் சோலைக்குயில் அவைக்காற்றுக்கள வெளியீடாக வருவதில் மாற்றுக் கருத்தில்லாத களத்தின் மத்தியகுழு உறுப்பினர்களுக்கும் என் மனதில் எப்போதும் இடம் உண்டு.

வழக்கம் போல நூலை அச்சிடும் பெறுப்பைத் தலை மேல் சுமந்த அம்மா அச்சகத்தினர் செய்த உதவியை மறப்பது நன்றன்று. குறிப்பாக அம்மா அச்சக உரிமையாளர் திரு. செ. ஸ்ரீகிருஷ்ணராஜா அவர்களுக்கு மனம் நிறைந்த நன்றி.

நூல் வெளிவர ஆயத்தமாக இருக்கும் இந்தப் பொழுது என் உள்ளம் என்கின்ற வானத்திலே பொன்மேகம் தவழும் கணம்.

எழுதத் தொடங்கிய காலங்களில் என்ன "கிறுக்கி" இருக்கிறோம் என்று இனி நீங்கள் பார்க்கலாம் வாசகர்களே! விழி ஓரங்களில் சில நேரங்களில்.....

**கோகிலா மகேந்திரன்**

முத்துச்சிப்பி, 17-09-2023

விழிசிட்டி, தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருத்துரை

**அளவெட்டி கணேச ஐயர் சௌந்தரராஜன்**
(ஓய்வுநிலை நூலகர்)

1958ஆம் ஆண்டு ஆடி மாதம் "கலைச்செல்வி" முதல் இதழில் ஆசிரியர் "சிற்பி" எழுதிய "ஏன் படைத்தாய்" வெளிவந்து சிறுகதை உலகில் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியது. தொடர்ந்த இதழில் எதுவித திட்டமிடலுமின்றி. கூட்டு ஆக்கம் என்ற கருத்துரு காட்டப்படாமல் "கொழும்பு சிவம்" இதன் தொடராக "ஏமாற்றுக்காரி" என்ற கதையை எழுதினார். தொடர்ந்து "ஓடிவா உயிர் காக்க" எனச் சோமசுந்தரன் தொடர, "உங்களுக்கு மட்டும்" என்ற பதில் படைப்பைத் தந்தார் காவலூர் அம்பி, என்னும் பெண் எழுத்தாளர். இறுதிப்பகுதியாக "வரதர்" "இன்பம் சிரிக்கிறது" என்ற முடிவுக் கதையை வரைந்தார். இவ்வாறான திட்டமிடப்படாத தொடராக ஏற்கனவே "அண்ணா"வை "அல்லி சஞ்சிகை"யில் சிற்பியும் உதயணனும் மாறிமாறிப் படைத்திருந் தனர். கவிதையில் மகாகவியும் முருகையனும் இணைந்து "தகனம்" படைத்தனர்.

எழுத்தாளர்கள் பலர் சேர்ந்து கலந்துரையாடித் திட்ட மிட்டு நாவல்கள், குறுநாவல்கள் மற்றும் இலக்கிய வடிவங்களைப் பத்திரிகைகள். சஞ்சிகைகளில் வெளியிடும் போக்கு தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் 1958 தொடக்கம் காணப்பட்டது.

இவ்வாறு ஈழத்து இலக்கிய உலகில் பல்வேறு படைப் பாளுமைகள் தமது சொந்தப் படைப்புகளாலும், கூட்டுப் படைப்புகளாலும் வாசகர்களை ஈர்த்து வந்த இலக்கியச் சூழ்நிலையில், 1980ஆம் ஆண்டு ஏழாம் மாதம் 13ஆம் திகதி முதல் ஒன்பதாம் மாதம் 07ஆம் திகதி வரையான காலப் பகுதியில் கொழும்பு "மித்திரன்" வாரமலரில் 9 வாரத் தொடராக "திருப்பங்கள்" குறுநாவல் ஒன்பது பெண் படைப்பாளர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுப் படைப்பாக வெளிவந்தது. இற்றைக்கு 43 ஆண்டு களுக்கு முன் இக்குறுநாவலைப் படைத்தவர்கள்,

★ மட்டக்களப்பு கல்லடியைச் சேர்ந்த திருமதி இந்திராணி புஸ்பராஜா அவர்கள். ஆசிரியர், பின்பு அதிபராகப் பணியாற்றி தற்பொழுது ஓய்வு பெற்றுள்ளார்.

★ மாவிட்டபுரத்தைச் சேர்ந்த திருமதி. பாகீரதி கணேசதுரை அவர்கள் (மாவை பாரதி) ஆசிரியர், உளவள ஆலோசகர், நாடகக் கலைஞர், இலக்கியத்துறையில் பல பரிமாணங் களை உடையவர்.

★ திருமதி நயீமா சித்தீக், அவர்கள். கம்பளைப் பகுதியைச் சேர்ந்த இவரும் ஆசிரியர். அத்தோடு பல அமைப்பு களினூடாக மலையகப் பகுதியில் கல்வி மேம்பாட்டுக்காக உழைப்பவர். பெண்ணியவாதி.

★ திருமதி சாரதா பரநிருபசிங்கம் அவர்கள். (கனடா) செல்வி சாரதா சண்முகநாதன் என்னும் பெயரில் எழுதிய இவர் ஊர்காவற்றுறை, கரம்பொன் கிராமத்தவர். இளவயது முதலே பல இலக்கிய முயற்சிகளைச் செய்தவர். இப்போதும் செய்கிறார்.

★ ஆனந்தி என்னும் புனைபெயரால் அறியப்படும் திருமதி. மாதினியார் ஆனந்த நடராசா. ஏழாலையைச் சேர்ந்தவர். பெண்ணிய ஆளுமை. கொழும்பில் வசிக்கிறார்.

★ மண்டூர் அசோகா என்னும் திருமதி அசோகாம்பிகை யோகராஜா அவர்கள். கிழக்கிலங்கையின் மூத்த தலை முறை எழுத்தாளர் மட்டுமல்ல, பெண் எழுத்தாளர்களில் முதன் முதலாக சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர். இவரும் ஆசிரியப் பணியாற்றி இன்று ஓய்வு பெற்றுள்ளார்.

★ கோகிலா மகேந்திரன் என்னும் புனைபெயரில் சலியாது, சளைக்காது பல்வேறு இலக்கிய வகைகளையும் படைக்கும் திருமதி கோகிலாதேவி மகேந்திரராஜா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர், அதிபர், பிரதிக் கல்விப்பணிப்பாளர் எனக் கல்விப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளவர். உளவளத் துணையாளர், பெண்ணியவாதி, நாடக இயக்குநர், நடிப் பாற்றல் மிக்கவர் எனப் பரந்துபட்ட ஆற்றல்கள் திறமைகள் கொண்டவர். இக்குறுநாவலின் உருவாக்குநர், நெறியாளர் என்பதற்கு மேலாக இன்று இதனை நூலாக்கி ஆவணப் படுத்த விளைபவரெனக் குறிப்பிடலாம்.

✶ குறுநாவலின் உச்சக்கட்டப் பகுதிகளை ஆக்குவதில் பங்கேற்றிருப்பவர் வலி. கிழக்கு உரும்பிராயைச் சேர்ந்த படைப்பாளி அருண் விஜயராணி செல்லத்துரை அவர்கள். பெண்ணியஞ் சார்ந்த, வித்தியாசமான கோணத்தில் இலக்கியம் படைக்கும் ஒருவராக இனங்காணப்பட்டவர். புலம் பெயர்ந்து அவுஸ்திரேலியாவுக்குச் சென்றும் இலக்கியப் பணியாற்றி வந்தவர். எதிர்பாராத இவரது அமரத்துவம் இலக்கிய உலகுக்குப் பேரிழப்பு என்பதில் சந்தேகமில்லை.

✶ தேவமனோகரி அவர்கள் இந்நாவலை முற்றுப்படுத்திக் காத்திரமான முடிவைத் தந்து படைப்பின் கலைத்துவத்தை வெளிப் படுத்தியவராக விளங்குகின்றார். யாழ்ப்பாணத்துக் கிராமப் புறங்களில் அன்று நிலவிய பண்பாடு, சூழ் நிலைக்கு ஏற்ப நுணுக்கமாகக் கதாமாந்தரின் உணர்ச்சிப் பாங்குகளுக்கு ஏற்ப உரையாடல்களை வகுத்துக் கதையின் கனதிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இவரும் புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழ்கின்ற அதேவேளையில் இலக்கியம் படைப்பதிலும் ஓய்வை நாடி ஒதுங்கியுள்ளார் என்பது ஒரு தகவலாகக் கிடைக்கின்றது.

நவசரஸ்வதியரும் கூடி நாவல், கருவாக உருவான களம் புனிதபூமியாகிய கீரிமலையிலே கடலோரமாக அமைந்துள்ள மண்டபம். ஆலயச் சூழலில் அழகிய மண்டபத்தில் அலை கடலின் ஆர்ப்பரிக்கும் அலை ஓசையின் பின்னணியில் இந் நவீனத்தில் எது புனைவு ; எது கற்பனை ; எது சுய அனுபவம் ; எது பிறரிடம் கேட்டது ; எது ஊகம் எனப் பிரித்தறிய முடியாத ஒரு முழுமையைக் கொண்டு வரத் தெண்டிக்கும் கோகிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேந்திரனின் ஒருங்கிணைப்பினூடாக அத்தியாயங்களுக்கான அத்திவாரமிடல் அளவாக ; இசைவாக அமைய இறையருளும் இனிதாகக் கிட்டியது.

படைப்பாளிகளில் பெரும்பான்மையோர் கல்விச் சேவை யாளர்கள் ஆசிரியர்கள்; "ஈழத்து இலக்கியப் பரப்பை நோக்கும் போது இலக்கியப் படைப்பாளிகளுள் குறிப்பிடத்தக்க தொகையினர் கல்விப் பணியுடன் தொடர்புபட்டவர்களாகத் திகழ்வதை அவதானிக்க முடியும்" என்னும் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் கூற்றுக்கு அமைய மனித வாழ்க்கையை முழுமைப்படுத்தும் கல்விக்கும் இலக்கியத்துக்குமான நோக்கங்களைப் புரிந்துகொண்டு நாவலின் கட்டமைப்பை அத்தியாயத்துக்கு அத்தியாயம் வலியுறுத்தி வளர்த்துச் செல்வதைக் காண முடிகின்றது.

யாழ்ப்பாணத்துக் கிராமம் ஒன்றின் ஒரு விவசாயத் தொழில் புரியும் தந்தை. பொருளாதாரம் குறைமட்டத்தில் இருந்ததால் வறுமைப்பட்ட சூழ்நிலை இருந்தாலும் கணவனது குணாம்சங்களையும் புரிந்து கொண்டு ஒத்திசைவாகக் குடும்பம் நடாத்தும் மனைவி பார்வதி. மூத்தமகன் முரளி இளமைத் துடிப்பும் சமூக உணர்வும் நவீன சிந்தனைப் போக்குகளும் கொண்டவன். தந்தையின் பழமைவாதச் சிந்திப்புகளுக்கு எதிரிடையான போக்குடையவனாகையால் இருவருக்குமிடை யில் முரண்பாடுகள் அதிகம்.

மரபில் ஊறிய பெற்றோருக்கு மிகவும் இணக்கமான போக்குடையவள் மகள் சுமதி. மணப்பருவம் அடைந்து திருமணத்தை எதிர்பார்த்துக் கனவுகாண்பவளாக இருக்கிறாள். கடைக்குட்டியாள் கௌரி. ஆனாலும் புதுமை விரும்பியாக. அண்ணாவின் கருத்துக்களை ஆமோதிப்பவளாக அமைந் தவள். முரளிக்கு ஆசிரியர் வேலை கிடைத்து மலையகத் தோட்டப் பாடசாலையொன்றில் பொறுப்பேற்கின்றான். அக்கால யாழ்ப்பாணத்து வாழ்வியலின் பொதுமையான வறுமையும் உத்தியோகங் கிடைத்ததால் குடும்பப் பாரத்தைச் சுமக்கும் பணியில் பங்கேற்க வேண்டிய கடமைப்பாடும் முரளிக்கும் தவறாமல் வாய்த்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை எழில் கொஞ்சும் மலையகத்தில் தேயிலைத் தோட்டங்கள் நிறைந்த மாத்தளைப் பகுதியில் தோட்டப் பாடசாலையொன்றில் ஆசிரியராகப் பொறுப்பேற்றுக்கொண்ட முரளியை முதற் கடமை நாளிலேயே ஒரு மாணவி ஈர்த்து விடுகின்றாள். ஏழைத் தோட்டத் தொழிலாளியின் பிள்ளையே யானாலும் படிப்பில் நாட்டமும் ஏனைய கல்விச் செயற் பாடுகளில் ஆற்றலும் திறமைகளும் கொண்டு பங்கேற்று முதன்மை மாணவியாக ரமணி அறிமுகமாகின்றாள்.

பிரதான இக்கதா மாந்தர்களோடு அக்காலத்துச் சமூகத்தின் தனிமனித உணர்ச்சிகளுக்கும் சமூக நிலைப் பாடுகளுக்கும் இடையில் களங்கொள்ளும் பிரச்சினைகளும், கருத்து மோதல்களும் நாவலின் பெயருக்கேற்பத் திருப்பங்கள் பலவற்றைத் தோற்றுவித்து ஒவ்வொருவருக்கும் மனப் போராட்டங்களைத் தந்துவிடுகின்றன. யாழ்ப்பாணத்துக் கிராமியச் சூழலுடன் தொடங்கிய கதை மலையகத் தோட்டச் சூழலுடன் பொருந்தி வளர்ந்து திரும்ப யாழ்ப்பாணச் சூழலில் சுழன்று நிறைவுபடுத்தப்படுகின்றது. இல்லையில்லை. தொடர்ச்சிப்படுத்தப்படுகின்றது. ஆம், இது ஒரு குடும்பத்தின் கதையில்லை. காலங் காலமாக வெவ்வேறு களங்களில் நிகழ்ந்தாலும் இன்றளவும் வேறுவேறு வடிவங்களில் தமிழர் சமூகத்தில் வெளித் தெரிவது உண்மையே.

கதையைச் சுவை குன்றாமல் நகர்த்தவல்ல சம்பவங்கள், உணர்ச்சி வெளிப்பாடுகள் கதையின் சிக்கலை உறுதிப்படுத்தி விடுகின்றன. விட்டுக் கொடுக்க முடியாத ஒரு தயக்கநிலை ஒவ்வொருவரிடமும் நிறைந்து காணப்படுகின்றது. இதில் விசேட கவனத்தில் கொள்ள வேண்டியதென்னவென்றால், இந் நாவலைப் படைத்தோர் அருகருகே இருந்து உரையாடி எழுதிச் செல்ல இன்றைய காலத்து இலத்திரனியல் சாதனங்கள் எதுவும் இல்லாத காலத்தில் கடிதப் பரிவர்த்தனை மட்டுமே கைகொடுத்த ஒரு காலத்தின் சாதனையாக இப்படைப்பு அமைந்துள்ளமையே. தொடர்பாடலுக்கு அனுசரணையாகச் செயற்பட்ட ஆளுமை ஈழத்து இலக்கிய உலகில் சாதனை யாளனாகப் பரிணமித்து அகால மரணத்தால் அகற்றப்பட்ட காவலூர் எஸ். ஜெகநாதன் அவர்களாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம் ஒன்று : திருமதி இந்திராணி தாமோதரம்பிள்ளை**

இவரது கல்வித்துறை அனுபவங்களுக்குத் தீனிபோட வல்ல பாடசாலைக் களத்தினை அறிமுகப்படுத்தியவாறு இக்குறு நாவலின் முதல் அத்தியாயம் அமைக்கப்பட்டுள்ளது. கதையின் நாயக, நாயகி அறிமுகமும் இதனுள் அடங்கியுள்ள தோடு சென்ற நூற்றாண்டின் பின்னரைக்கால இலங்கைச் சமுதாயங்களைப் பிரதிபலித்து நிற்கின்றது. அவ்வகையில் அக்கால வாழ்வியலை ஆவணப்படுத்தும் இலக்கியமாகவும் குறிப்பிட முடிகின்றது. கதை நகர்வுக்குத் தேவையான பாத்திர வார்ப்புகள், நிகழ்ச்சிகள் என்பன கைதேர்ந்த எழுத்தாளராக இந்திராணியை அடையாளப்படுத்துகின்றன. பின்நோக்கு உத்திமூலம் மாத்தளைப் பாடசாலைக் களத்தில், யாழ்ப் பாணத்துக் கிராமப் புறச்சூழலில் நாயகன் முரளியின் குடும் பத்தை அறிமுகப்படுத்துவதோடு ஆசிரியப் பதவி கிடைத்து முரளி புறப்பட்டது வரையான காலத்தை விபரிக்கின்றார்.

ஆலயத் திருவிழாக்களை ஆடம்பரமாகச் செய்யும் அக்கால மனநிலையை முரளியின் தந்தை நமசிவாயம் மூலமாகவும் இந்த ஆடம்பரச் செலவுகளைச் சமூக நலனுக்கு அல்லது மணம் முடிக்கக் காத்திருக்கும் தங்கையின் பொருட்டுச் செலவழிக்கலாம் என்ற முரளியின் கண்ணோட்டத் தையும் நறுக்கென எதிர்வினையாற்றும் சகோதரி சுமதியின் நிலையினையும் பதிவுசெய்கின்றார்.

**அத்தியாயம் இரண்டு : மாவை பாரதி**

அடுத்துத் தொடரும் இவரும் கல்வித்துறையை ஆழமாக நேசிக்கும் ஆசிரியர். உளவளத் துணையாளராகப் பிற் காலத்தில் சேவையாற்றுபவர். ஆனால் இக்குறுநாவலில் விரவிக் காணப்படும் கதாமாந்தர்களது உரையாடல்கள், சம்பவங்களினூடாக உளவியற் சிந்தனைகளை உள்வாங்கிக் கதையை நகர்த்துகின்றார். கடமையேற்கப் புறப்படும் மகனுக்குக் குடும்பப் பொறுப்பை, குல கௌரவத்தை வலியுறுத்துகின்றார் தந்தை. குடும்பச் சுமைகளைத் தான் தனியே சமாளிக்க முடியாத நிலையைக் கூறி மகனுக்கு வீட்டுப் பொறுப்பைச் சுட்டிக் காட்டுகின்றார். அவ்வாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையின் பாசத்தினை மகன் முரளி உணர்வதான கட்டமும் பாசப் பொழிவினை அனுபவித்து உணரும் வேளையும் சிறப்பானவை.

வாழ்க்கைப் பாதையையும் தண்டவாள அமைப்பையும் இணைத்துரைத்து அதனூடாகக் குறுநாவலின் உட்கருத்தை வலியுறுத்துமிடமாகப் பதிவு செய்கின்றார். அறிவுக் குதிரை, இதயபாதம் முதலிய புதிய உருவகங்களைப் பதிவு செய்துள்ளார்.

**அத்தியாயம் மூன்று : நயீமா சித்தீக்**

கதையின் வளர்பருவப் பகுதியைத் திருமதி நயீமா சித்தீக் வரைந்துள்ளார். இவரும் ஆசிரியப் பணியை உவந்து ஆற்றியவர். மலையகவாசி. மலையக மாத்தளைத் தோட்டப் பாடசாலை, அதன் தொழிலாள சமுதாயம், அதன் பண்பாடுகள் மொழிப் பிரயோகம் போன்றன இப்பகுதியை வளர்த்தெடுக்க அவருக்கு அனுசரணையாக இருந்தன எனலாம். மலையகத் தின் பசும்போர்வையை முக்காடு போர்த்தலோடு ஒப்பிட்டதோடு வரண்ட யாழ்ப்பாணத்தில் வாழைமரத்துக்கும் நீர்ப்பாய்ச்ச வேண்டிய நிலையைச் சுட்டி உரைக்கின்றார்.

தோட்டத் தொழிலாளர்களைப் பயன்படுத்தித் தாம் உயரும் ஒரு சிலர் அங்கிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார். இவ்வாறான சூழ்நிலையில் நாயகி ரமணியின் தந்தை சாதாரண தொழிலாளியாக இருந்தாலும் மகளைக் கல்வி கற்க ஊக்கு வித்துள்ளதை ரமணிக்குக் கிடைத்த பேரதிர்ஷ்டம் எனக் கூறி அவளின் திறமைகளை உணர்த்துகின்றார் கதாசிரியை. அதே வேளை இன்னும் பலர் வறுமையால் கல்வி கற்கும் வாய்ப்பை மலையகத்தில் இழந்து போயுள்ளமையையும் சுட்டிக் காட்டு கின்றார். ஒருதலைக் காதலாக மலர்ந்த எண்ணத்தைப் பெரும் மனப் போராட்டத்தின் பின் வெளியிட்ட வேளையில் தயங்கித் தயங்கி ரமணி சம்மதித்ததைக் குறிப்பிட்டுள்ளார். மலையகப் பண்பாட்டை எடுத்துக்கூறச் சுந்தரம் - பாப்பாத்தி உபகதைச் சித்திரிப்பும் இணைகின்றது. அத்தோடு முரளி - ரமணி காதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிமிக்க புரிந்துணர்வோடு இறுக்கமானது என்பதைக் கதையூடாக வெளிப்படுத்தியுள்ளார்.

மாணவியை மனைவியாக்க முனையும் முரளி சந்திக்கும் பல சிக்கல்களை இயல்பாகவும், நளினமாகவும் கதையில் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**அத்தியாயம் நான்கு : *சாரதா சண்முகநாதன்***

சிறுகதை, குறுநாவல், கவிதை, கட்டுரையென எல்லா வகைப் படைப்புகளையும் இளமைக் காலத்திலிருந்தே பிரபல பத்திரிகை, சஞ்சிகைகள், வானொலி ஊடகங்களினூடாகப் படைத்த ஆளுமை இவர் எனலாம். இக்குறுநாவலிலும் "நடுக் கூறை" எழுதும் வாய்ப்பு இவருக்கு அமைந்துவிட, அதனை அழகாக நிறைவேற்றியுள்ளார். கதா மாந்தர்கள் ஒவ்வொரு வரும் இவ்வத்தியாயத்தில் வரிசைகட்டி அணிவகுத்து வந்து செல்கின்றார்கள். சாதக - பாதக அம்சங்களை ஆராய்ந்து உறுதியான முடிவை எட்டும்போது தான் தமது வாழ்க்கைக் கனவுகள் நிறைவேற முடியும் என்பதை முரளியும் ரமணியும் உணர்ந்துள்ளமையைக் காணமுடிகின்றது. ஆசிரியர் வேலை கிடைத்து மூன்றாண்டுகளாகிவிட்டபோதும் முரளியால் குடும்பச் சிக்கல்களுக்கு உரிய முடிவுகளையோ, மாற்றங்களையோ எய்த முடியாத வறுமைப் பிடியில் இருப்பதை முரளியூடாகவே வெளிப்படுத்தியுள்ளார் கதாசிரியை.

இவரது உருவக வருணிப்புகளாக : பொருளாதாரப் பொத்தல்கள், துயரவெள்ளம், சிந்தனைச்சிறை, சமுதாயக் குப்பைகள், பாசப் போர்வை போன்றவை விரவிக் காணப்படு கின்றன.

**அத்தியாயம் ஐந்து : ஆனந்தி**

யதார்த்தப் போக்கில் அமைந்த படைப்புகள் பலவற்றைப் படைத்துள்ள ஆனந்தியைப் பற்றிப் பிரபல எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் குறிப்பிடும்போது "இவரது கதைகளை வாசிக்கும் எவரும் முதலில் உணர்வது ஒரு வித்தியாசமான மொழிநடையையே, ஏதோ சமுதாயத்துக்குப் பெரிய மனதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபதேசம் செய்வது போன்ற பாவனையில்லாத, ஆயினும் சற்றுச் சிக்கலான, கொஞ்சம் கவர்ச்சியான மொழிநடை" என்று சிலாகிக்கின்றார். இதேவேளை மல்லிகை சஞ்சிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா கூறுகின்றார். "இவரது கதைகளின் உள்ளடக்கம் வழக்கமான, இயல்பான பெண் எழுத்துக்களல்ல. பெண் சிந்தனைகளுமல்ல. மாறாக அவை மானுடச் சிந்தனைகள்" என.

இவ்வாறு "தனித்துத் தெரியும் பெண்ணிய ஆளுமை" யாகிய ஆனந்தியின் கைவண்ணத்தில் குறுநாவல் முக்கியமான கட்டத்தை வந்தடைகின்றது.

**அத்தியாயம் ஆறு : மண்டூர் அசோகா**

மீண்டும் ஒரு ஆசிரியரின் கைகளில் அடுத்த கட்டம் நகர் கின்றது. சமூகமட்டத்தில் பல பிரச்சினைகளை உருவாக்கிய படி கலப்புக் கல்யாணம் முரளி - ரமணி இடையே நடைபெறு கின்றது. மனத்தளவில் முரளியை, ரமணியை சமூகவிமர்சனங் கள், ஏச்சுக்கள் கிண்டல்கள் தாக்கின. புதுப்பிரச்சினையாகக் கமலி என்ற மாணவி மீதான முரளியின் கரிசனை, மேலெழு கின்றது. இதனைத் தவறாகக் கையாளும் ஒரு கூட்டத்தால் பாடசாலைக் கடமைகளைத் திறமையாக, முழுமையாக நிறைவேற்ற முடியாத மனரீதியான பாதிப்புக்களை முரளி எதிர்கொள்கின்றான். யாழ்ப்பாணத்துக்கு - தனது ஊருக்கே - இடமாற்றம் பெற்றுச் செல்ல முடிவு செய்கின்றான் முரளி என்று நிறுத்துகிறார் இவர்.

**அத்தியாயம் ஏழு : கோகிலா மகேந்திரன்**

"கோகிலா பல்துறை ஆற்றல் மிக்கவர். அவற்றை யெல்லாம் அவருடைய வாழ்விலும் எழுத்துக்களிலும் அயர்ச்சி யற்ற அவர் பணிகளிலும் காண முடிந்திருக்கின்றது.... எத் துறையில் ஈடுபட்டாலும் எழுத்தைக் கைவிடாமல் தனது அனுபவங்களையெல்லாம் படைப்பு இலக்கியமாக்கிவிடும் ஆற்றலும் மிக்கவராகத் திகழ்ந்துள்ளார்" என இலங்கை - அவுஸ்திரேலியா இலக்கியப் படைப்பாளர் முருகபூபதி ஜீவநதி நூறாவது இதழில் கோகிலா மகேந்திரன் பற்றி எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம், மகாஜனக் கல்லூரி உருவாக்கிய கலை, இலக்கிய ஆளுமையான இவரின் படைப்புக்களில் நம்பகத்தன்மை அதிகமாக இருப்பதாகவும், தேர்ந்த அனுபவங்களைக் கொண்டு எழுதுபவராக இவர் இருப்பதாகவும் பிரபல இலக்கிய விமர்சகர் அமரர் கே. எஸ். சிவகுமாரன் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பின்புலத்தில் இந் நாவலில் இவரது பங்களிப்பை அவதானிக்கு மிடத்து, முக்கியமான பகுதியாக இவ்வத்தியாயம் தீட்டப் பட்டுள்ளதைக் காணலாம். நாவலின் கருவான கலப்பு மணத்தை யாழ்ப்பாணச் சமூகம் எதிர்கொள்ளும் நிலை பற்றி ஆராய்கின்றது இப்பகுதி. நடைபெறும் சம்பவங்கள் கலப்பு மணத்தின் சாதக - பாதக விளைவுகளை மதிப்பிடுவனவாக அமைகின்றன. மலையகச் சூழல் ஏற்காத நிலையை முன் அத்தியாயம் விபரிக்க, யாழ்ப்பாணச் சூழல் எடுக்கும் நிலை எதுவென்பதைக் கோகிலாவின் படைப்புப் பக்கங்கள் விபரிக் கின்றன. வாசித்து உணர வேண்டிய பக்கங்கள் என்பேன்.

**அத்தியாயம் எட்டு : அருண் விஜயராணி**

துணிச்சலான பார்வையூடாகத் தனது எழுத்தாற்றலைத் துலாம்பரமாக எடுத்துக்காட்டும் எழுத்தாளுமையாம் அருண் விஜயராணி தொடர்ந்த இவ்வத்தியாயத்திலே கதாமாந்தரின் மனப்போராட்டங்கள் குறையும் விதமாகச் சுமதியின் கல்யாணப் பேச்சுவார்த்தைகள் இணக்கமாகிவரும் நிலையில் அன்றும் இன்றும் மேலோங்கும் "மறைகரங்களின்" செயற்பாடுகள் சுட்டிக் காட்டப்படுகின்றன. சுமுகமாகிவந்த வீட்டின் சூழ்நிலைகள் மீண்டும் குறைகூறல், திட்டுதல், நோகடித்தல், மனவிரக்தி யுறுதல், மன அழுத்தங் கூடுதல் எனப் பாதிப்புறுகின்றன. தாயின் உடல்நிலை மாற்றம் ஒட்டுமொத்தக் குடும்பத்தின் நிலையையும் திருப்பிப்போட வைக்கின்ற மாதிரியான நுண்ணுணர்வுகளைப் பாத்திரங்களுக்குரிய குணாம்சங்களை யொட்டிச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார்.

மகிழ்வான மனநிலையோடும் நம்பிக்கையோடும் கூடிய நிலையில் நடைபெறும் சம்பவங்களின் சித்திரிப்பும் சிறப்பாக அமைந்துள்ளதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம் ஒன்பது : தேவமனோகரி**

தொடக்கம் முதலே வறுமையின் துன்ப, துயரங்களால் அலைக்கழிக்கப்படும் குடும்பத்தின் மீட்சிக்கான வெளிச்சம் இன்னும் தோன்றாத நிலையில் இருட்டே தான் வாழ்க்கை எனும் படியான சம்பவங்களின் சிகரமாக அமைந்துவிட்ட தாயாரின் மறைவு சிக்கெடுக்க முடியாத சிரமங்களை ஏற்படுத்து கின்றது. கத்தியின் மேல் நடக்கும் சாதுர்யம் தேவைப்படும் நிலைமையைச் சுமுகமாக்க ஏது வழி? விதிவிட்ட பாதையில் நடக்கும் முரளிக்குத் திருப்புமுனைகள் தாமே. ஆற்றுப்படுத்தி அழைத்துச் செல்கின்றன! பயணங்கள் சுமுகமாக, பாதைகளும் சுலபமாக இருக்க வேண்டுமே! அதுதான் "திருப்பங்கள்" வழங்குகின்ற பாடமாக - நீதியாக - தேவமனோகரியின் ஆற்றல்மிகு திறமையோடு எழுத்தில் வடிக்கப்பட்டுள்ளது. பலருக்கும் பட்டால்தான் அனுபவம் வரும். ஆனால் இவ்வாறான பட்டறிவுக் கதைகள் மூலமும் எழுத்தாளர்கள் வரலாற்றை வடிவமைக்க முடியும். திருப்பங்கள் குறுநாவலாக இருந்தாலும் பெருநாவலின் பணியைச் செய்து நிற்கின்றது.

★★★

குறுநாவல் மித்திரனில் வெளிவந்து நாற்பத்துமூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. நாட்டின் இன மோதல் காரணமாக அழிவுற்றுப்போன எத்தனையோ எழுத்தாக்கங்கள், நூல்கள் மற்றும் சேகரிப்புகள் போன்று இதுவும் போய்விடாமல் திருமதி கோகிலா மகேந்திரனின் விடாத தேடலின் விளைவாக நூலுருப் பெற்றுப் படைத்தவர்களுக்கும் படிப்பவர்களுக்கும் நிறைந்த மகிழ்வையும் திருப்தியையும் தருமெனப் பெரிதும் நம்பு கின்றேன். திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களுக்கும் இதில் பங்கேற்ற எழுத்தாளுமைகள் யாவருக்கும் பாராட்டுகளும் வாழ்த்துக்களும்.

"இலக்கியத்தின் சமூகப் பணி, ஒரு சமூகம் எப்படி இருக்கின்றது என்று சித்திரிப்பதோடு நின்று விடுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி ஒரு சமூகம் இருக்க வேண்டுமெனச் சித்திரிக்காவிடினும் எப்படி ஒரு சமூகம் இருக்கக் கூடாதென்றாவது சுட்டி நிற்க வேண்டும்"

**– செங்கை ஆழியான் க. குணராசா**

செந்தணல் (2000) நாவல் முன்னுரையில்

மேற்படி கூற்றுக்கு இணக்கமாகத் "திருப்பங்கள்" அமைந்துள்ளமை கவனிக்கத்தக்கது. "புதிய பாதை" ; புதிய பயணம் நோக்கிய... நிச்சயமாக ஏணியை நோக்கித்தான்....." என்ற முத்தாய்ப்பே நாவலின் பண்பும் பயனும் ஆகின்றது.

"வெறும் பொழுதுபோக்குக்காக மட்டுமன்றிச் சமுதாய முன்னேற்றத்தையும் கருத்திற் கொண்டு படைக்கப்படும் இலக்கியம் என்றும் நிலைத்து வாழும் என்பது எல்லோரும் ஒப்புக் கொண்ட உண்மையே".

**அன்னலட்சுமி இராசதுரை**

கொன்றைப் பூக்கள் (1976) நாவல்
(ஒரு பார்வை பகுதியில்...)

"திருப்பங்களு"க்கும் இது பொருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

## இந்திராணி தாமோதரம்பிள்ளை

"குட் மோர்ணிங் சேர்"

இனிய காலை வந்தனம், முப்பது வாய்களின் சொற்பிர வாகத்தின் பிரதிபலிப்பாய் எதிரொலிக்கின்றது. புதிய ஆசிரியரை வரவேற்கின்ற குதூகலம் வார்த்தையில் வெளிப்பட ஆசிரியரை மாறி மாறிப் பார்க்கின்ற பார்வைகள்!

"குட் மோர்ணிங், சிட்டவுண்..." அழுத்தமாக, ஆனால் அழகாகப் பதில் வந்தனம் செலுத்திவிட்டு, அமர்ந்து கொண்டிருப்பவர்களை அவதானிக்கிறான். சின்னஞ்சிறு சிட்டுகளாய் நம்பிக்கைளைத் தேக்கிக் கொண்டிருக்கும் விழிகள். புதிய ஆசிரியரை அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலினால், நெடுங்காதை கேட்பது போல் ஆர்வத்துடன் அண்ணாந்து பார்க்கும் முகங்கள்!

"நான் உங்களின்ர பள்ளிக்கூடத்துக்குப் புதிசா வந்திருக்கிற மாஸ்டர். என்ரை பேர் முரளி...." வார்த்தைகளை இடைநிறுத்தி வகுப்பில் மீண்டும் பார்வையை ஓட விடுகிறான். மௌனம் ஆட்சி புரிகின்றது.

"என்னை நீங்கள் அறிஞ்சு கொள்ளுறதைப் போல... உங்கள் ஒவ்வொருத்தரையும் நான் அறிஞ்சு கொள்ள வேணும்... ஒவ்வொருத்தரா .... ஒழுங்கா ... எழும்பி உங்களின்ரை பேரைச் சொன்னீங்களெண்டால் போதும்"

கதிரையை இழுத்து மேசையின் முற்புறத்தில் போட்டுக் கொண்டு அமர்கிறான்.

"என்ரை பெயர் இராஜேஸ்வரி...."

"என்னோடை பேர் சகுந்தலா...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவராக எழுந்து பெயரை ஒப்புவித்துவிட்டு அமர்கின்றனர்.

"என்னோடை பேரு ரமணி"

கணீரென்று ஒலித்த குரலுக்குரியவளைப் பார்த்ததுமே மனதின் உள்ளே சில்லிடுகிறது. அதே போன்ற வட்டமான கரிய விழிகள். பக்க வகிடெடுத்து வாரிவிடப்பட்ட சுருண்ட கூந்தல். புருவங்களை அசைத்துப் பதில் சொல்லும் பாவம். ரமணி நின்ற இடத்தில் அவனது அன்பிற்குரிய சுட்டித் தங்கை நிற்பது போன்ற பிரமை.

"அண்ணை மற்ற முறை போகேக்கை நானும் வருவன்...."

அவனுடைய சேர்ட்டை மடித்துப் பெட்டியில் வைத்துக் கொண்டே சொன்ன அந்த உருவம் "கௌரி". "நீ இப்ப என்ன செய்து கொண்டிருப்பாய்..." அவன் தனக்குள் முணுமுணுக் கிறான். அவனது உள்ளம் மாத்தளையின் பசிய பரப்புக் களைக் கடந்து சில நூறு மைல்களுக்கு மேல் நீண்டு கிடக்கும் புகையிரதத் தண்டவாளங்களின் மீது தாவி, யாழ்ப்பாணத்து மண்ணில் தவழ்ந்து வீட்டு வாயிலில் போய் நிலைக்கின்றது.

ரோஜாச் செடிகள் பூத்துக் குலுங்கி அலங்கரிக்கும் முற்றம், பழைய காலத்தின் கோலத்தைப் பறைசாற்றும் சிறிய ஓட்டு வீடு! இடது புற மூலையில் காய்களின் பாரம் தாங்காது முறிந்து விடுவேனோ எனச் சொல்லாமல் சொல்லும் பப்பாசி மரம். அந்தச் செம்மண் பரப்பில் ஓடிவிளையாடிய சின்னஞ்சிறு பராயம்.... பின்புறத்தில் பரந்து கிடக்கும் தோட்டத்தரை... கத்தரியும், தக்காளியும், மிளகாயும் தமக்கே உரிய பசுமையுடன் தலையசைக்கும் கோலம். கரை தட்டி நிற்கும் குலை தள்ளிய வாழைகள். "இவை ஒவ்வொன்றிலும் என் உழைப்பின் வியர்வைத் துளிகள் சிந்தியுள்ளன...." என்ற பெருமிதப்போடு சுறுசுறுப்பாக இயங்கும் இரண்டு கரங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் திடமான கரங்களுக்கு உரியவர் நமசிவாயம். உழைப்பையே தன் உயிராகக் கொண்ட உருவத்தின் உதிரத்தில் உதயமானவன் தான் முரளி!

இடுப்பில் வரிந்து சுற்றப்பட்ட நாலு முழவேட்டி, தலையில் வெம்மையும் குளிரும் தாக்காமல் சுற்றிக் கட்டிய துண்டு. நெற்றியில் பட்டை பட்டையாய் வெண்மையான திருநீறு... இத்தனையுடன் வலிமையான கரிய உடலமைப்போடு ஓர் ஐந்தடி மனிதரைக் கற்பனை செய்தால் நமசிவாயம் கண் முன்னே நிற்பார். வயது அறுபதை நெருங்கிக் கொண்டிருக்கும் போதும் உழைப்பால் உருவான திடமான தேகம். முதுமையின் வளைவு நெளிவுகளைக் காட்டத் தயங்கிக் கொண்டிருக்கிறது.

"இது அந்தக் காலத்து உடம்பு பாருங்கோ.... இப்ப உள்ள பெடியங்களுக்கு மண்வெட்டி தூக்கப் பெலனிருந்தால் தானே!" என அடிக்கடி அவர் சொல்லிக் கொள்வதிலும் தவறு இல்லைத்தான். அதிகாலை மூன்று, நான்கு மணிக்கே பார்வதியின் கையால் கோப்பி வாங்கிக் குடித்துவிட்டுத் தோட்டத்தினுள் நுழைந்து விட்டால் உலகே மறந்து போகும்.

"ஏனப்பா பசிக்கயில்லையே... வந்து சாப்பிட்டுப் போட்டுப் போங்கோவன்!" பொறுமையின் எல்லை மீறிய நிலையில் தோட்டத்திற்கே வந்துவிடுவாள் பார்வதி. முப்பது வருடத் தாம்பத்திய வாழ்வில் மூன்று குழந்தைகளுக்குத் தாயாகி அவர்களை வளர்த்துப் பெரியவர்களாக்கிவிட்ட நிலையிலும் கூட இன்னும் அவர் அவளுக்கு ஒரு குழந்தைதான்.

"பொறு பார்வதி. இந்தக் காலத்திலை மண்ணெண்ணை விலை உனக்குத் தெரியுந்தானே! இறைக்கிற ஒரு சொட்டுத் தண்ணீரையும் வீணாக்கக்குடாது..."

அவர் நிமிர்ந்து பார்க்காமலே பாத்தி கட்டி நீரை ஓடவிடுகிறார்.

"உங்களோடை கதைச்சு வெல்ல முடியுமே. உங்களைப் போலத்தான் உங்களின்ர பிள்ளையளும்..." அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுத்துக் கொள்வாள். ஆனால் அவரை விட்டுவிட்டுப் போக மனமிராது. கத்தரிக் கன்றுகள் ஒவ்வொன்றிற்கும் மண்ணை வட்டமாகக் கிண்டி விட்டு நிமிர்கின்ற போதில் எல்லாம் பார்வதியின் முகம் அவர் பார்வையில் படும்.

"என்னதான் வயசு போனாலும் பார்வதியின்ரை பார்வையும் முகமும் அப்படியேதான் இருக்குது..." அவரது மனம் சொல்லிக் கொள்ளும்.

"என்னப்பா அப்பிடிப் பாக்கிறியள் - வைச்சகண் எடுக்காமல்"

"இல்லைப் பார்வதி, அந்த நாளிலை உன்னை முதல் முதல் பாத்த ஞாபகம்...."

அவர் சொல்லி முடிக்க முதலே போலிக் கோபம் கொப்பளிக்கும் அவள் முகத்தில்.

"ஓம்... ஓம்... கலியாணம் கட்டுற வயசிலை பிள்ளையளை வைச்சுக்கொண்டு, நீங்களும் உங்களின்ர கதையும்...."

முரளி தனக்குள்ளே சிரித்துக் கொள்கிறான். அப்புவும் ஆச்சியும் பேசிக்கொண்டதை ஒரு முறை கேட்க நேர்ந்த போது, அவர்களுள் உருவாகியிருந்த அன்புச் சாம்ராஜ்யத்தை நினைத்து அவனே வியந்ததுண்டு. அப்புவுக்கு முந்தி ஆச்சி சாப்பிட்டு அவன் கண்டதில்லை. அவனது வேலை நியமனக் கடிதம் வந்தபோது கூட அந்த முகத்தில் தெரிந்த பெருமிதத்தை அவன் கண்ணாரக் கண்டவன். "ஒரு படியா என்ரை கஷ்டங்களுக்கு முடிவு வந்திட்டுது" என அவர் வாய்விட்டே சொன்ன வார்த்தைகள் செவியில் மோதுவது போன்ற பிரமை. ஆச்சி எதைக் கஷ்டம் என்று குறிப்பிடுகிறார் என்பது அவனுக்குத் தெரியும். பெண்மையின் பூரண பொலிவோடு கல்யாணத்திற்குத் தயாராக நிற்கும் தங்கை சுமதி! சராசரியான வருமானமுள்ள அந்தக் குடும்பத்தைப் பொறுத்த வரையில் கல்யாணம் ஒரு பெரிய பிரச்சினைதான். கல்யாணச் சந்தையில் மாப்பிள்ளையின் "மார்க்கெட்டை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டிப்பிடிக்கக் குடும்பத்தின் பொருளாதாரம் என்ற ஏணியால் முடியாவிட்டால், சமூகத்தின் பேச்சுகளுக்கு ஈடுகொடுக்க வேண்டிய பிரயத்தனம்....

அப்பப்பா!

குழந்தைத் தனமான பிடிவாதமும் பழைய தலை முறையின் நம்பிக்கைகளும் சேர்ந்து வளர்ந்தவள் சுமதி. அவளைப் பார்க்கும் போது சில வருடங்கள் முந்தியே அவள் இச் சமூகத்தில் பிறந்திருக்கலாம் என எண்ணத் தோன்றும். அம்மாவின் அரவணைப்பும் அப்புவின் போதனைகளும் அவளை நன்றாகப் பின்னிப் பிணைத்திருந்தன. இதனால் பாதையில் நடக்கும் போது கூடத் தயங்கித் தயங்கிக் குனிந்து கொண்டே நடப்பாள். பாவாடை, தாவணி அல்லது புடவை தவிர்ந்த ஏனைய உடைகளில் அவளைக் காண்பதே கடினம். புடவை அணிந்தால் கூட முந்தானையால் போர்த்திக் கொண்டே நடப்பாள். இத்தனை செய்தும் கூட அன்னையைப் போல் அவளிடம் ஒரு புதுவிதமான கவர்ச்சி இருக்கத் தான் செய்தது.

காதளவோடிய அந்த விழிகளை அவள் அன்னையின் சொத்தாய்ப் பெற்றிருந்தாள். வரைந்துவிட்டது போன்ற சிறிய உதடுகள். வட்டமான கற்றோடுகளுடன் வாரிவிட்ட கூந்தலின் கீழ் குடையென விரிந்த செவிகள். சுமதி உண்மையிலேயே கர்ப்பக் கிருகத்தின் அம்மன் சிலைபோல அழகாகத்தான் இருந்தாள்.

ஆனால் அவள் வெளியே செல்கின்றபோது "ஆளைப் பார்த்தால் பதினாறு வயதினிலே ஸ்ரீதேவி மாதிரி இருக்குது" என இளவட்டங்களின் விமர்சனம் கிடைத்ததே ஒழிய, திருமணம் என்றதும் யாழ்ப்பாணத்தில் புரையோடிக் கிடக்கும் சீதனப் பிரச்சினை தலைகாட்டித் தடை செய்து கொண்டே இருந்தது. மணத்திற்குப் பணம் தடையாய் இருந்தால். பருவமும் வயதும் காத்திருக்குமா? காலத்தின் ஓட்டத்தோடு அவையும் முன்னேறிக் கொண்டேதான் இருந்தன.

அன்று ஞாயிற்றுக்கிழமை - முரளி அறை மூலையில் கிடந்த கதிரை ஒன்றிலிருந்து ஏதோவொரு நாவலை வாசித்துக் கொண்டிருக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடத்தில் பெற்றோர் பேசிக்கொள்வது துல்லியமாகக் கேட்கின்றது அவனுக்கு!

"ஏனப்பா!.... இன்னும் எத்தினை நாளைக்கு இப்பிடியே இருக்கப் போறியள்..." ஆச்சியின் குரலில் பொறுப்புணர்வின் பிரதிபலிப்பு.

"ஏன், என்ன செய்யிறது நான்..?" அப்புவின் வழமையான அசிரத்தையான குரல்.

"சுமதிக்குக் காலாகாலத்திலை ஒண்டும் செய்யிற தில்லையே"

"எல்லாம் செய்யலாம். ஆனால்... காசு....?"

"காசு காசெண்டு எத்தினை நாளாத்தான் சொல்லிக் கொண்டே இருக்கிறியள். நாங்கள் என்னத்தையும் சொல்லி எங்களைச் சமாதானப்படுத்தலாம். ஆனா ஊர் உலகம் சும்மா இருக்குமோ" பெற்றவள் என்பதினால் அவளது உள்ளம் பிள்ளையின் எதிர்காலத்துக்காக ஏங்கிப் பெருமூச்சு விடுவதை அவனால் உணர முடிகின்றது.

"ஊர் உலகம் சொல்லப் போகுது எண்டதுக்காக எங்கையாவது பிடிச்சுத் தள்ளச் சொல்லுறியோ?"

"உங்களுக்கு என்ன சொன்னாலும் விளங்கு தில்லையே"

விளங்குதப்பா... நல்லா விளங்குது. ஆனால் உனக்கு எங்களின்ர ஊர் நிலவரம் நல்லாத் தெரியுந்தானே. நானும் எத்தினையோ சம்மந்தங்களைப் பேசிக் கொண்டுதான் வாறன். எல்லாம் நேரமும் காலமும் வரவேணுமப்பா..." அவரிடமிருந்து நீண்டபெரு மூச்சொன்று வெளிப்படுகிறது.

சுமதி இடையில் குறுக்கிட்டு,

"கௌரி இன்னும் வரேல்லையே! அப்பு அவளை வேளைக்கு வரச்சொல்லி நீங்களெண்டாலும் கண்டிப்பாச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுங்கோவன் அப்பு... ஆச்சிக்கு எப்பிடிச் சொன்னாலும் விளங்காது..." என்றுவிட்டு உள்ளே செல்கிறாள்.

"ஓமோம்... என்னிலை பிழை ஒண்டு கண்டுபிடிக்காட்டி.... அக்காவுக்கு நித்திரையே வராது..." வாசலில் கேட்ட குரலைத் தொடர்ந்து எல்லோரும் திரும்பிப் பார்க்கின்றனர். அங்கே கௌரி....

தனக்கேயுரிய கம்பீரத்தோடு உள்ளே வருகிறாள் கௌரி. சுமதி அம்மன் சிலை என்றால் கௌரி சினிமா போஸ்டர்களில் உள்ள கதாநாயகி. பளிச்சென்று இருப்பாள். இயற்கை அவளுக்கு அளித்திருந்த அழகு அவளது கைவண்ணத்தால் மேலும் மெருகூட்டப்பெற்று, ஒரு தனிக் கவர்ச்சியைக் கொடுக்கும். காதுகளின் ஓரத்திற் சுருண்ட குழற்கற்றைகள், ஜிப்சி வளையத்தின் ஊடே அவளது முக அசைவிற்கேற்ப அசையும் வட்டமான கரியவிழிகள், அதில் கணத்திற்குக் கணம் தோன்றி மறையும் குறும்புகள்! அவள் எப்போதுமே அண்ணா கட்சிதான்! இதனால், முரளியும் சந்தர்ப்பங்களில் கை கொடுத்துதவ மறுப்பதில்லை.

"பிள்ளை வேளைக்கே வீட்டுக்கு வரவேணுமெண்டு எத்தினை தரம் தான் நான் சொல்லியிருக்கிறன்" நமசிவாயத்தின் குரலை இடைமறித்துக் கொண்டு அவள் பதில் சொல்கிறாள்.

"வகுப்பு முடிஞ்சால்தானே நான் வீட்டுக்கு வர .... அக்கா சொல்லுற மாதிரி நான் கண்ட இடமெல்லாம் அலைஞ்சு திரியிறன் எண்டு நினைக்கிறீங்களே..." அவள் சீற்றத்துடன் சுமதியைத் திரும்பிப் பார்க்கிறாள். சுமதி பார்வையை வேறுபுறம் திருப்பிக் கொள்கிறாள்.

"ஏனப்பா வந்ததும் வராததுமாய்ப் பிள்ளையைப் பேசுறீங்கள். நீ போ பிள்ளை... போய் கை, கால், முகம் கழுவிக் கொண்டு வா!" எப்போதும் பார்வதி இப்படித்தான்! பெற்ற வளுக்குத் தானே பிள்ளையின் அருமை தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று பிள்ளையார் கோயிலில் தேர்த் திருவிழா. வீடு ஒரே பரபரப்பில் ஆழ்ந்து கிடக்கின்றது. தேரிழுக்கும் நிகழ்ச்சியில் முக்கிய பங்கு நமசிவாயத்தாருக்குத்தான்! தரையில் கால் படாமல் தாவிக் கொண்டிருந்தார் அவர்! அடிக்கொருதரம் "கற்பூரம் எங்கையப்பா...? ஊதுவத்தி எங்கையப்பா...?" என்று அவர் போடும் கூப்பாடுகளுக்குப் பதில் சொல்லியே பார்வதிக்குப் போதும் போதுமென்றாகிவிட்டது. சுமதியின் அன்றைய பொழுது சுவாமிக்கு மாலை கட்டுவதில் கழிந்து கொண்டிருந்தது.

"எங்கையப்பா முரளியை இன்னும் காணேல்ல!"

"ஆரும் சிநேகிதப் பெடியளோடை கதைக்கப் போட்டானாக்கும்"

"இண்டைக்குத் தேர் சிறப்பாயிருக்க வேணும் எண்டு நான் ஓடியோடிக் கஷ்டப்படுறன். உவன் என்னடாவெண்டால் கதைக்கப் போட்டான்"

தன் கொள்கைகளில் மகன் காட்டும் அலட்சியத்திற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று நினைத்துக் கொள்கிறார் நமசிவாயம்.

"இந்தமுறை எப்பிடியும் அவனைத் திருவிழாவுக்கு இழுத்துக்கொண்டுபோய் அவன்ரை மனதிலை இருக்கிற பிழையான எண்ணங்களை இல்லாமல் செய்ய வேணும்"

இடையிடையே நரை மயிருடன் கூடிய தனது மீசையை மெல்ல நீவிவிடுகிறார். வாசலில் ஒரு நிழல்! பார்வை நிமிர்த்திய திக்கில் அவன்! - அவரது ஒரே மகன் முரளி!

"என்னடா! இண்டைக்கொரு நாளைக்கெண்டாலும் வீட்டிலை நிக்கக் கூடாதே...."

"அப்பு" அவசரமா ஒரு "கரக்டர் சேர்டிபிக்கட்" எடுக்க வேணும்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் எங்கோ பார்த்தபடி பதில் சொல்கிறான். "என்ன வெண்டாலும் இண்டைக்கு விஷேசமான தேரெல்லே!"

அவன் உறுதியாக நிமிர்ந்து தந்தையைப் பார்க்கிறான். ஏதோ ஒன்றைச் சொல்லிவிடவேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் எழுவது முகத்திலேயே தெரிகிறது. "அப்பு... இண்டைக்குத் தேருக்கு எவ்வளவு செலவாகும்?"

"ஒரு மூவாயிரத்துக்கு மேலை வேணும் தம்பி... பழைய காலத்திலையிருந்து பரம்பரை பரம்பரையாச் செய்து வந்த ஒண்டு.... எத்தினை ஆயிரம் செலவழிச்சாலும் நாலு நாளைக்கு ஊரெல்லாம் அதே கதையாப் பாராட்டிக் கதைக்க வேணு மெல்லே...."

முரளி சிரித்துக் கொள்கிறான்.

"ஏன் அப்பு? உப்பிடிச் செலவழிக்கிற ஆயிரங்களைச் சேத்து வைச்சா.... சுமதிக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைச்சுக் குடுக்கலாமெல்லே...."

"முரளி.... நீ என்ன கதைக்கிறாய்? உனக்கென்ன மூளை பிசகிப் போச்சே....?

அவர் வெலவெலத்துப் போகிறார்.

"அப்பு லட்சக் கணக்கிலை தேர் அலங்காரம் செய்து இழுக்கச் சொல்லி ஆண்டவன் கேக்கிறானே!.... இல்லை இந்தக் காசைக் கொண்டு ஒரு நேரச் சாப்பாட்டுக்குக் கஷ்டப்படுற சனங்களுக்குச் சாப்பாடு போட்டால் கூடப் புண்ணியம் கிடைக்கும்".

நமசிவாயம் திடுக்கிட்டுப் போய் நிற்கிறார்.

"ஓம்... நீங்களெல்லாம் படிச்சுப் பெரியாக்கள் ஆகிட்டியள்.... சொல்லுவியள்தானே... நான் உயிரோடை இருக்கு மட்டும் இந்தத் திருவிழா சிறப்பாய் நடக்கத்தான் வேணும்... ஓம்.... சொல்லிப் போட்டன்...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது உரத்த குரலால் வீடே திடுக்கிடுகிறது. "இப்ப அண்ணை என்ன சொன்னவர்? இந்தக் காசை அக்காளின்ர கலியாணத்துக்குச் செலவழிச்சால் என்ன எண்டுதானே...."

கௌரி அறையில் நின்றபடி அதே போன்ற உரத்த தொனியில் சொல்கிறாள்.

"அப்பு...! ஆண்டவனுக்கு நாங்கள் செய்தால்தான் எங்களுக்கு எதுவும் கிடைக்கும். அந்தக் காசிலை எனக்குக் கலியாணம் வேணுமெண்டு நான் ஒண்டும் அழேல்லை".

சுமதியின் குரல் எல்லோரையும் அதிர வைக்கிறது.

"நான் இருக்கட்டுமா சேர்?"

தன்னையே இமைக்காமல் நோக்கும் ஆசிரியரிடம் பொறுமை இழந்து கேட்ட ரமணியின் குரல் நினைவுத் திரையை அறுக்கிறது.

அவன் மெல்லச் சிரித்துக் கொள்கிறான். நினைவுகளின் மீட்டல் சுவையானதுதான்! சிலவேளை சுமையானதும் கூட! அது அறைக்குப் போன பின்பும் தொடர்ந்தது. வேலை கிடைக்காமல், வீட்டுக்குப் பாரமாக இருந்த அவன் ஆசிரிய நியமனம் கிடைத்த போது உலகே தன் ஆட்சிக்கு உட்பட்டது போல் அல்லவா துள்ளிக் குதித்தான்? புதிய பயணத்தின் புறப்பாட்டு நாள் அப்படியே மனதில் இருக்கிறது - இப்போது தான் நடந்தது போல....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

## மாவை பாரதி

"டாண்... ண்... ண்.." என்ற எதிரொலியின் சிதறல்கள் எங்கும் தெறித்து அவளது மயிர்க் கால்களைச் சிலிர்க்க வைக்கின்றன. இது முருகன் கோயில் மணி. அந்த இனிய கோபுரமணி ஓசையின் ஆதிக்கத்தில் அதன் சுற்றுவட்டாரத்தில் உள்ளவர்கள் எல்லாம் துயில் நீங்கி எழுந்து விடுவார்கள். அந்த மணியோசை செவிப்பறை மென்சவ்வைத் தாக்கியதும். வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து சமையற் கூடத்தை நோக்கி விரைந்தாள் சுமதி. முதல் நாள் இரவு நீண்டநேரம் அடுப்பில் வேலை நடந்ததை அறிவிப்பது போல் தீப்பிழம்புகள் பாளம் பாளமாக நீறு பூத்துப் போய் இருந்தாலும் சிறு பொறிகள் மின்மினி போல் அவளை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தன. அந்தச் சாம்பல் குவியலைப் பார்த்துக் கொண்டேயிருந்தவளின் விழிகள் திடீரென்று குளமாகின்றன.

"அண்ணையும் இண்டைக்குப் பயணம் - இனி ஆருக்கு இஞ்சை பலகாரம் சுடுறது - சுட்டாலுந்தான் ஆர் சாப்பிடுறது..."

நெஞ்சின் அடியிலிருந்து புறப்படுகின்ற நீண்டதோர் பெருமூச்சுடன் சாம்பலை நீக்கி விறகைப் புகுத்தி உலையை அடுப்பில் ஏற்றுகிறாள். பின்னர்...

"அண்ணை எழும்புங்கோ - கோப்பியைக் குடிச்சிட்டுப் பயணத்துக்குத் தேவையான அலுவல்களைப் பாருங்கோ, எழும்புங்கோ...."

கோப்பிக் கிண்ணமும் கையுமாகச் சுமதி அருகில் வந்து வழக்கம் போலத் திருப்பள்ளி எழுச்சி பாடும்போதுதான் உடலை மூடிப் போர்த்திருந்த சேலைக்குள்ளிருந்து தலையை வெளியே இழுத்துக் கனக்கின்ற விழி மடல்களைத் திறக்க எத்தனிக்கிறான் முரளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமதியின் கையில் இருந்த கோப்பியை வாங்கி ஒரே முறையில் விழுங்கிவிட்டுப் பாயைச் சுருட்டி ஒரு மூலையில் வைக்கிறான்.

இவர்களுக்கு முதலே துயில் கலைந்து எழுந்துவிட்ட கௌரி பயணத்துக்கென்று புதிதாக வாங்கப்பட்ட சூட்கேசில் முரளியின் உடுப்புகளை அடுக்கினாள்.

மாலை ஐந்து மணி வரை ஊரில் உள்ள ஒவ்வொரு வீடாக ஏறி ஏறி இறங்கிப் பயணம் சொல்லிக் கொண்டான் முரளி. திரும்பி வந்தவன் உடைமாற்றிக் கொண்டு புறப்பட ஆயத்தமானபோது, மகனுக்குச் சொல்ல வேண்டியதை யெல்லாம் ஒரு முறை மனதிற்குள் உருப்போட்டுக் கொண்ட நமசிவாயம், கதிரையில் நிமிர்ந்து உட்கார்ந்தார். அவர் குரலைக் கனைத்துக் கொள்ளும்போதே தனக்கு நிறையவே சொல்லி அனுப்ப ஆயத்தமாகிறார் என்பதைப் புரிந்து கொண்ட முரளி, காலுக்குச் சொக்ஸ் போடுகிற சாட்டில், பக்கத்தில் இருந்த இன்னொரு கதிரையில் அமர்ந்து கொண்டான்.

'தம்பி நான் புத்தி சொல்லி அனுப்பிறதுக்கு நீ குழந்தைப் பிள்ளை இல்லை. வளந்து, படிச்சு இப்ப ஒரு வேலையும் கிடைச்சிட்டுது. "வாத்தியார் வேலை எண்டாச் சும்மா விளையாடிப்போட்டு இருபதாம் திகதி வந்த உடனை காசை எண்ணிறது" எண்டுதான் இண்டைக்கும் பெடியள் நினைக் கிறாங்கள். நீ மாத்திரம் அப்பிடி நினைச்சுப் போடாதை. உன்ரை கையிலை வாற பிள்ளையளை வடிவாப் படிப்பிச்சுவிட வேண்டியது உன்ரை கடமை, அதை மறந்து போகாதை. உன்ரை உணர்ச்சியளுக்கு இடம் குடுத்து மனச்சாட்சிக்கு மாறுபாடா நடந்து போடாதை'.

அப்பு சொல்லி முடித்துவிட்டார் என்ற நினைவில் சப்பாத்து லேசைக் கட்டி முடித்துவிட்டுச் "சரி அப்பு" என்று நிமிர்ந்தான். ஆனால் அப்புவின் மனதில் கருத்தரித்த எண்ணங்கள் இன்னும் பிரசவமாகி முடியவில்லை என்பது போல அவர் தொடர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கடை வீட்டின்ரை நிலையை நான் உனக்குச் சொல்லத் தேவையில்லை. குதிர் போலை இரண்டு குமர் உன்னை நம்பித்தான் நிக்குதுகள். அதுகளை ஒரு நல்ல வழியிலை கரை சேக்கிறதும் உன்ரை பொறுப்புத்தான். ஓட்டு வீட்டிலை ஆயிரம் ஓட்டைகளை வைச்சுக் கொண்டுதான் சீவிக்கிறம். மாரி வந்தா முழங்காலைக் கட்டிக்கொண்டு மூலைக்கொரு சீவனா ஒடுங்கிப் போயிருக்கிற இந்த நிலையை நீதான் மாத்த வேணும்"

உணர்ச்சிக் கொந்தளிப்பில் இமையோரம் கரை கட்டி நின்ற கண்ணீர்த் துளிகளைச் சால்வைத் தலைப்பால் தட்டி விட்டுக் கொண்டே அவர் தொடர்ந்தார்.

"உன்னை நம்பி உன்னைப் பெத்தவளின்ரை கழுத்தை யும் வெறுமையாக்கி உன்னை அனுப்பிறன். எந்தச் சந்தர்ப் பத்திலையும் நாணயக் குறைவா நடந்து போடாதை. ஏழையளாய் இருந்தாலும் ஒரு கௌரவம் இருக்கவேணும். எங்கடை குடும்பத்தின்ரை மரியாதையை நீதான் காப்பாத்த வேணும். அவ்வளவுதான் நான் சொல்லுவன். நீ போட்டு வா...."

ஒரு பெரிய மழை பெய்து ஓய்ந்தது போல் நமசி வாயத்தார் தன் எண்ணக் குவியல்களைக் கொட்டித் தீர்த்த போது, இவன் சூட்கேசைத் தூக்கிக்கொண்டு "சரி அப்பு நேரமாகுது. ஆச்சி நான் வரட்டே" என்று கூறிக்கொண்டு முற்றத்திற்கு வந்தான். அவனைப் பின்தொடர்ந்து சில அடிகள் வந்த பார்வதி தன்பங்கில் குறை வைக்காமல் "என்ரை ராசா, கவனம் தம்பி, சனிக்கிழமையிலை மறந்திடாமல் எண்ணை வைச்சு முழுகு. கண்ட கண்ட பெடியங்களோடை சிநேகிதம் வைச்சுக் கொண்டு திரியாதை....." என்று சொல்லிக் கொண்டாள்.

"சரி... நான் போட்டு வாறன்..." என்று எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு பஸ்தரிப்பை நோக்கி விரைந்து நடக்கிறான் இவன். நமசிவாயம் அவனைத் தொடர்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைக்காலப் பூஜை தொடங்குவதற்கு அறிகுறியாய் .முருகன் ஆலய மணிஓசை பல தடவை ஒலித்து ஓய்கிறது. மூன்று பெண்களின் விழிகளில் பெருகிய பாசத்தின் வெளிப் பாட்டை அந்த இருண்ட .......வீடு தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொண்டு, மௌனப் பெருமூச்செறிந்தது.

"ஓ....! வாழ்வில்தான் எத்தனை திருப்பங்கள்" முரளியின் அலைபாயும் பாச நெஞ்சத்தைப் பொங்கி எழும் கடமை நெஞ்சம் அடித்து மூடிவிட அவன்தலை நிமிர்ந்து நடந்தான்.

"வாழ்க்கையில் ஒரு கதவு திறந்து கொண்டால் இன்னொன்று மூடிக்கொள்கிறது". யாரோ சொன்ன வாக்கியத்தை எங்கோ எப்போதோ வாசித்தது அவன் நினைவில் வந்து ஒருமுறை சுழலாட்டம் போடுகிறது.

படித்துவிட்டு வேலை கிடைக்காமல் அலைந்து கொண்டிருந்தபோது ஏதாவது ஒரு வேலை எப்படியாவது கிடைக்காதா என்ற ஏக்கம் பெருமலையாய் வளர்ந்து உள்ளத்தை அரித்துச் சல்லடையாக்கிக் கொண்டிருந்தபோது, அதுவே ஒரு குறையாய், அது மாத்திரமே பெரிதாய், அது கிடைத்து விட்டால் எல்லாமே நிறைவு பெற்றுவிடும் போலத் தோன்றியது. இந்த நியமனக் கடிதம் வந்தபோது இரண்டு நாள் அந்தக் குதூகலம் அவனுள் நிறைந்துதான் கிடந்தது. அவனது உயிரின் ஒவ்வொரு அணுவும் புல்லரித்து மலர்ந்துதான் கிடந்தது.

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் வழமை போலவே திமுதிமுவென்று ஒரே கூட்டம். சூட்கேசை ஒரு இடத்தில் வைத்துவிட்டுத் திரும்பிய முரளி சற்றுத் தொலைவில் வந்து கொண்டிருந்த நண்பர்களை நோக்கிக் கை அசைத்தான். கேலிப் பேச்சுகளும், சிரிப்பொலிகளுமாக இவனுடன் வந்து சேர்ந்து கொண்டவர்களில் ராமுதான் முதலில் பேச ஆரம்பித் தான்.

"முரளி.... எங்களையெல்லாம் யாழ்ப்பாணத்திலை விட்டிட்டு, மாத்தளைக்குப் போறாய்... அங்கை போய் எங்களை மறந்திடாதை மச்சான்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முரளி அடிக்கடி சொல்லிறவன். தொழில் எண்டா வாத்தித் தொழில்தான் நல்லதெண்டு. அவன்ரை ஆசை நிறை வேறிட்டுது. இனி என்ன? அவன் பெரிய ஆள் தானே...."

எங்கோ பார்த்துக் கொண்டு பிளாட்போமில் அசைந்து வந்து கொண்டிருந்த ஒரு மலர்க் கூட்டத்தை ரசித்துக் கொண்டிருந்த நண்பன் ராஜ் தன் பார்வையை விலக்கிக் கொள்ளாமலே, இவர்களின் பேச்சில் கலந்து கொண்டான்.

இவர்களின் பேச்சுக்கெல்லாம் புன்னகையையே பதிலாகத் தந்து கொண்டிருந்தான் முரளி.

புகைவண்டி வரப் போவதற்கான அறிவித்தல்கள் ஆரவாரங்கள், முண்டியடிப்புகள்!

இதுவரை இவர்களிடமிருந்து சற்றே விலகித் தூரத்தில் நின்று கொண்டிருந்த நமசிவாயம் அருகில் வந்து மகனை அழைத்து,

"தம்பி, சுகமாப் போட்டுவா. பிக்பொக்கற் காறங்கள் திரிவாங்கள். காசு, பணம், ரிக்கற்றுக்கள் கவனம். போய்ச் சேந்தவுடனை கடிதம் போடு" என்று கூறினார்.

புகைவண்டியின் ஊதல் ஓசையுடன் எழுந்த இரைச்சலில் வண்டியின் குலுக்கலும் சேர்ந்து பெரியதோர் ஓலமாக மாறி, ஒரு பயங்கரமான உருவம்போல அது வந்து நின்றது.

சனக்கூட்டத்தின் நெரிசலிடையே புகுந்து ஒரு மாதிரி உள்ளே நுழைந்துவிட்ட முரளியிடம் சூட்கேசை எடுத்துக் கொடுத்த நமசிவாயம்,

"வாசலிலை நிக்காதை. யன்னல் கரையிலை மணிக் கூட்டுக் கையை வைச்சுக்கொண்டு இருக்காதை...." என்று இறுதிநேர அறிவுரைகளையும் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைவண்டியின் உள்ளே ஒரு பெட்டியின் நடை பாதையில் வெளவால் தூங்கலாய்த் தொங்கிக் கொண்டு எல்லோரையும் நோக்கி முரளி கையசைப்பது தெரிகிறது. பிறர் காணாமல் விழிநீரைத் துடைத்துக் கொண்ட நமசிவாயம். "போட்டுவா மோனை. கவனம்" என்று சூழ்நிலையை மறந்து பலத்த குரலில் கூறியது முரளியின் செவிகளை ஊடுருவி உயிரோடு ஒன்றி அவனுள் ஐக்கியமாகிறது.

"அப்பு என்னிலை எவ்வளவு பிடிப்பு வைச்சிருக்கிறார்" இதயம் நழுவி அடிவயிற்றினுள் விழுவது போலப் புரிந்து கொள்ள முடியாத ஓர் உணர்வு அவனை உறுத்தி வேடிக்கை பார்க்கிறது. பாசம் என்பது மிகவும் பயங்கரமான வலைதான். அந்த வலையின் சிக்கலில் இருந்து அவனால் இலகுவில் மீள முடியாது என்பதை மனத்திற்குள்ளே நினைத்துக் கொண்டு, விழிகளை அகல விரித்து அவன் வெளியே பார்த்தபோது புகைவண்டி கொடிகாமத்தை நெருங்கிக் கொண்டிருந்தது.

சாளரத்தினூடாக மெல்லத் தலையை நீட்டி இருள் மண்டிக் கிடந்த அந்த வெளியுலகத்தைத் திரும்பி நோக்கிய போது அந்த வளைவான, சமாந்தரத் தண்டவாளத்தில் புகைவண்டி சரியாகவே சென்று கொண்டிருப்பது தெரிகிறது. அந்த அவதானத்தில் பெரியதோர் தத்துவமே புதைந்திருப் பதாகத் தோன்றுகிறது அவனுக்கு. வாழ்க்கையின் வளைவு. நெளிவுகளில் சென்று திரும்பும் போதுதான் வாழ்க்கைப் பாதையின் கஷ்டம் நிறைந்த தன்மையும் நமது அறிவுக் கண்ணுக்குப் புலனாகிறது!

வானத்தில் சிரித்துக் கொண்டிருந்த நட்சத்திரங்களைப் பார்த்துப் புகைவண்டிப் பாதையின் கம்பங்களில் இருந்த விளக்குகள் கண்ணடித்துக் கொண்டன. என்ன புதுமை இது? இயற்கையைப் பார்த்துச் செயற்கை கேலி செய்கிறதே!

முரளி தன் அறிவுக் குதிரையின் கடிவாளத்தைப் பற்றியிழுத்துத் திசை திருப்பினான். அவன் வரையில் இதுவரை நடந்து வந்த பாதை, மிகவும் கடுமையானது தான்! வறுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் முட்புதர்களும் ஏழ்மை எனும் சிறு கற்களும் இல்லாமை என்ற மேடு பள்ளங்களும் நிறைந்தது அந்தப் பாதை. அதில் நடந்து வந்தமை இதய பாதத்தைக் கன்றிச் சிவக்க வைத்திருக்கிறது. அதன் தடங்களும் வடுக்களும் இந்த நிமிடம் வரை கூட மாறவில்லை. மறையவுமில்லை. அவன் இதுவரை கற்ற கல்வி மட்டுமே அவனுக்கு வழிகாட்ட, அந்த இருளிலும் அவன் ஒளியைத் தேடிக்கொண்டிருந்தான்.

இதோ! ஒரு ஒளிக்கீற்றுக் கிடைத்திருக்கிறது. இப்போது அந்தச் சுடர் காட்டப்போகும் பாதை வழியே அவன் வாழ்க்கை திசை திருப்பப்பட்டு விட்டது. புதிய ஓர் ஒளியைத் தந்திருக்கிற இந்தத் தீச்சுடர், தெய்வீக ஒளியாக, கோபுர விளக்காக, குன்றிலிட்ட தீபமாக இருக்க வேண்டுமே ஒழிய அவனது வாழ்வைச் சுட்டுப் பொசுக்கி எரித்துவிடக் கூடிய மயான தீபமாக மாறிவிடக்கூடாது என்பதே அவனது பிரார்த்தனையாக இருந்தது.

இடையிடையே தூக்கத்தில் ஆழ்ந்து போவதும், இடையிடையே எழுந்து தன் சிந்தனைகளைத் தொடருவதுமாக இருந்த முரளி, சிந்தனைக் கோவைகள் ஒரு முடிவுக்கு வந்தபோது, உறுதியாகத் தன் உடலை நிமிர்த்தி உட்கார்ந்து கொண்டான்.

யாழ்ப்பாணத்தில் வந்து ஏறியபோது தண்ணீர் ஓடுவது போலச் சலசலவென்று சிங்களத்தில் உரையாடியபடி புகை வண்டியில் ஏறி இவனுக்கு முன்னால் நின்று கொண்டிருந்த அந்தச் சோடி, ஒரு சிங்களச் சோடி என்பதில் இவனுக்கு இவ்வளவு நேரமாய் எதுவித ஐயப்பாடும் தோன்றவில்லை.

இப்போது நடைபாதையில் வந்த இன்னொரு பெண்... இவன் சிங்களப் பெண் என நம்பியிருந்த அவளை "திருமகள்...! எங்கை போறீர்? ஹஸ்பண்டும் வந்தவரோ?" என்று கேட்டு நிறுத்த அவள் நல்ல தமிழில்... யாழ்ப்பாணத் தமிழில் பதில் சொல்வதைத் தற்செயலாகக் கவனித்தவன்... ஒரு விநாடிப் பொழுதின் சிந்தனையின் பின்னர், அது ஒரு கலப்புத் திருமணச் சோடி என்பதைப் புரிந்து கொள்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ! ஒரு சிங்கள வாலிபன் துணிந்து ஒரு யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டிருக்கிறான். இந்தச் சமூகம் இதை எப்படி வரவேற்கப் போகிறதோ!

கற்பனையில் அவர்களின் வாழ்க்கையை ஒரு கதை போலவே நினைத்துக் கொண்டு தூங்கிப்போனவன்... கண் மடலைத் திறந்தபோது பொல்காவலை வந்து விட்டிருந்தது. இவன் பதறித் துடித்து எழுந்து சூட்கேசைத் தூக்கிக் கொண்டு இறங்கி அடுத்த புகைவண்டிக்காகக் காத்து நின்றபோதும் அந்தக் "கலப்புத் திருமணச் சோடி" பற்றிய நினைவு நெஞ்சை விட்டு நீங்கவில்லை.

அவனது பயணம் மாத்தளையை நோக்கித் தொடர்ந்த போதும் அவன் ஏனோ அவர்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

நயீமா சித்தீக்

ஒளி தந்த பாதையில் வந்து எத்தனை நாட்கள் கழிந்து விட்டன...

இயற்கை அன்னை தன் எழிற்பிரவாகத்தை எல்லாம் அள்ளிக் கொட்டிய தன்மை கொண்ட சூழ்நிலை. பார்க்கும் இடமெல்லாம் பசிய மரங்கள். கோப்பியும்,கொக்கோவும் பாக்கும், மிளகுமாய்... ஓ....

வாழைக்கும் நீர் இறைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் பச்சையை ஒரே "முக்காடாய்ப்" போர்த்திக் கொண்டிருக்கும் இந்த மாத்தளைக்கும் தான் எத்தனை வித்தியாசங்கள்?

ஆற்றோரம் இருந்த ஒரு கருங்கல்லில் உட்கார்ந்து கொண்டான் முரளி. ஆள் நடமாட்டம் குறைந்த இடம் அது. பக்கத்தில் இருந்த தோட்டமொன்றில் தொழிலாளர்கள் சிலர் மாத்தளை டவுணுக்குப் போய் ஏதேதோ வாங்கிக் கொண்டு திரும்புகின்றனர்.

பாவங்கள்... மாடுபோல் உழைத்து,உழைத்ததை ஒழுங்காகச் செலவிடக்கூடத் தெரியாத பிறப்புகள்... இவர்களை வைத்தே எத்தனை பேர் காரும் பங்களாக்களுமாகப் பெரிய வாழ்க்கை வாழ்கிறார்கள்.

தொடர்ந்து ரமணியைப் பற்றிய நினைப்பு....

"ஓ... ரமணி, நீ தான் எத்தனை அழகு! உனது மனந் தான் உன்னைவிடப் பலமடங்கு அழகானது."

"உள்ளமும் உடலும் அழகான உன்னைப்போன்ற உயிர்கள் உலகில் மிகவும் அபூர்வமே!" முரளி மானசீகமாகச் சொல்லிக் கொண்டான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமாம்... இப்போதெல்லாம் முரளி இப்படி ரமணியோடு மானசீகமாக உரையாடுவது எவ்வளவோ அதிகரித்துவிட்டது. அவனுக்கே அவனைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத ஒரு நிலைமை... புது வகையான நினைவுகள்... அவனுக்கே வேடிக்கையான நினைவுகள்,.. ஆசைகள்....

அவனது கிராமத்துப் பாடசாலையில் படித்தபோது.... பின்னர் உயர்தரப் பரீட்சைக்காகக் கல்லூரியில் படித்தபோது... அங்கு அழகும், படிப்பும், கல கலப்பும் நிறைந்த நூற்றுக் கணக்கான பெண்கள் அவனை வளைய வந்தபோதெல்லாம் கலங்காத அவனது மனம் ரமணியைக் கண்டபோது கலங்கியது ஏன்? ரமணியில் அவன் என்ன விஷேசத்தைக் கண்டான்?

இந்த எண்ணத்தைத் தொடர்ந்து முரளியின் இதழ்க் கடையில் ஓர் இளமுறுவல் இயல்பாக இழையோடி மறைகிறது.

ர.... மணி!

அவன் படிப்பிக்கும் மாத்தளைக் கல்லூரியின் மாணவி களுள் ஒருத்தி. மாத்தளையை அடுத்துள்ள தேயிலைத் தோட்டமொன்றில் சாதாரண தொழிலாளி ஒருவரின் அன்பு மகள். அந்தத் தோட்டப் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரை படித்துப் பின் இந்தக் கல்லூரியில் படித்துக் கொண்டிருப்பவள்.

பாடுபடும் அவளது பெற்றோர்களுக்குப் படிப்பில் இவ்வளவு சூட்டிக்கையான பெண் கிடைத்தது அதிர்ஷ்டம் என்று தான் சொல்ல வேண்டும். தமக்கிருக்கும் எண்ணிப் பிடிக்க முடியாத பிரச்சினைகளுக்கிடையே, தங்களது பொருளாதாரக் கஷ்டத்துக்கு ரமணியின் படிப்பைப் பலியிடாது அவளைத் தொடர்ந்து படிக்க அவளது பெற்றோர் அனுமதித்தது ரமணியின் சாதாரண அதிர்ஷ்டமல்ல! பேரதிர்ஷ்டம்.

ரமணியை விடவும் எவ்வளவோ கெட்டிக்காரப் பிள்ளைகள் உழைப்புக்காகத் தமது திறமையை, ஆற்றலை, இளமையை எல்லாம் குழிதோண்டிப் புதைத்து விடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமணியின் வகுப்பில் முரளிக்கு மூன்று பாடங்கள். முரளியின் விளக்கங்களை ஆர்வத்துடன் கண்கள் விரியக் கேட்டுக் கொண்டிருப்பாள் ரமணி.

அவளையே இடைக்கிடை அளந்து கொண்டிருக்கும் அவனது கண்கள்!

தமிழ் வினாக்களுக்கு விடை என்றால் நிச்சயம் ரமணியின் விடைகளுக்கே முதலிடம். அவ்வளவு ஆழமாகவும், விளக்கமாகவும், அழகாகவும் எழுதுவாள் அவள். நிச்சயமாக அது "முதல் மார்க்ஸ் ....." "கயஸ்ற் மார்க்ஸ்" வாங்கும். அந்த விடைகளை அவள் வகுப்புக்கு வாசித்துக் காட்டும்போது, அவளது குரலின் இனிமையிலும் அந்தக் குரல் ஏறி இறங்கும் இலாவகத்திலும் முரளியின் மனம் குதூகலிக்கும்.

பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி! பெண்களுக்கான பல போட்டிகளில் பரிசுக்குரியவளின் பெயராய் ரமணியின் பெயரே உச்சரிக்கப்பட்டு, பல பரிசுகளை அவள் சில வருடங்களாகத் திரும்பத் திரும்ப எடுத்து.. இப்போது உயர்தரப் (சீனியர்ஸ்) பெண்கள் பிரிவுச் சாம்பிய னாக அவள் தெரிவு செய்யப்பட்டு, வானைப் பிளக்கும் கரகோஷ ஒலிக்கிடையே வெற்றிக் கிண்ணத்தைப் பெற்று... தனக்குத் தெரிவித்த ஆதரவுக்காக எல்லோருக்கும் நன்றிகளைத் தன் கையசைவினால் தெரிவித்த போது அவளது திறமையைக் கண்டு அவன் மனம் ஆனந்தமடைந்தது.

பாடசாலைச் செஞ்சிலுவைச் சங்க இயக்கம் என்றால் என்ன? பெண் சாரணர் - வழிகாட்டிகள் இயக்கம் என்றால் என்ன? எங்கும் ரமணி... ரமணி!

இந்தப் பிஞ்சுக்குள் இத்தனை திறமைகளா? ரமணியின் மனம் நினைப்பதை அவளது கண்கள் பேசும்.. அவளது பேசும் கண்களில் முரளியின் மனம் பேசும்.

இந்தப் பேச்சு... ஊமை கண்ட கனவாய்த்தான் பல நாட்கள்... பல மாதங்கள் இருந்து வந்தது. தன் மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுவதை வாயால் சொல்லித் தீர்த்துக் கொள்ள முடியாது முரளி தவித்த தவிப்பு... ஓ... அது அவனுக்கே புரியாத ஒன்று!

ஊரில் தகப்பனும், தாயும், சுமதியும், கௌரியுமாக அவனது உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த அந்த இடத்தை இப்போது இந்த ரமணி எப்படித்தான் ஆக்கிர மித்தாளோ!

இத்தனை நாட்களும் அவனது உள்ளத்தில் வேறு எவரும் இத்தகைய ஒரு ஆக்கிரமிப்பை நிகழ்த்தியதில்லை. எத்தனை நூறு மைல்களுக்கப்பால், எங்கோ ஒரு தோட்டத்து லயனில் பிறந்த இந்த ரமணியால்...

மீண்டும் தானாகவே சிரித்துக் கொண்டான் அவன். ஓ... ரமணியிடம் தன் மனக்கிடக்கையைக் கூறி, அவளது மனத்தையும் அறிந்து கொள்ளும்வரை அவன் பட்டபாடு.... அவளிடம் கூறியபோது அந்தக் கண்கள் பட்ட அவஸ்தை.... படபடப்பு... எவ்வளவோ....

விவாதத்தின் பின்னர் அவள் இரத்தக் குழம்பாய் சிவப்பேறிய முகத்துடன் ஓடிவிட்டது... அவளது சம்மதத்தின் அறிகுறியாய் அதை நினைத்த அவன் ஆனந்தித்தது... இப்போது அவற்றை மீண்டும் அசை போடுவதில் கூட.... அளவற்ற இன்பம். காலம் மனித மனங்களில் பதியவிட்டுச் செல்லும் அடிச் சுவடுகள் பல காலம் காலமாய் அழிக்க முடியாதவைகளாகி விடுகின்றன. சில, சில காலங்களுக்கு மட்டும் நின்றாலும் மனதை உலுப்பிப் பிடிக்கின்றன. இன்னும் சில உடனடியாகவே மறைந்து விடுகின்றன.

முரளிக்கு ரமணி நினைவூட்டிய காலத்தின் பதிவு இரண்டாம் வகையைச் சேர்ந்ததே.

அவள் வாழ்ந்த அவளுக்குத் தெரிந்த காலத்தில் நடந்த அந்தச் சம்பவம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது அந்தச் சமுதாய மக்களின் மனங்களில் பெரிய பாதிப்பை மிக ஆழமாகப் பதித்துச் சென்றுள்ளது. நிச்சயமாகச் சில காலத்திற்காவது இருக்கத்தான் செய்யும்.

ரமணியின் பேச்சில் இருந்து இந்த உண்மையை முரளியால் உணர முடிந்தது.

ரமணியின் தோட்டத்திற்குப் புதிதாக மூன்று "பீல்ட் சுப்ப வைசர்கள்" வந்தார்கள். முன்னர் கங்காணி என்ற பெயரில் தொழிலாளர்களை மேற்பார்வை செய்தவர்களே இப்போது இந்தச் சுப்பவைசர்களாக மாறி இருக்கிறார்கள். கண் காணிப்பைத்தான் சுப்பவைசர்களும் செய்கின்றனர். பெயர் தமிழில் இருந்து ஆங்கிலமாக மாறியதைப் போல இவர்களது கோட்டும், வேட்டியும், தலைப்பாகையும், பெரிய மீசையும், கையில் கம்பும், தோளில் குடையும் போய், அரைக் காற் சட்டையும், சேட்டும், "சைட்பேன்சும்" சிறிய அளவிலான "வாக்கிங் ஸ்டிக்" ஒன்றுமாக மாறிவிட்டிருந்த உடை!

மற்றும்படி தொழிலாளர்களை விரட்டி விரட்டி வேலை வாங்குவதில் சற்றும் குறைந்தவர்களில்லை.

இத்தகைய தொழிலுக்காக வந்த யாழ்ப்பாணத்து, இளைஞன் சுந்தரம்... மலையிலே கொழுந்தோடு கொழுந் தாகத் தெரிந்த தளிர்விரல்களை உடைய ஒரு "இளசை"ச் சற்றே இரக்கத்துடன் நடத்தினான். அவளது கொழுந்து பறிக்கும் வேகத்தில் அவன் குறை காணவில்லை. கொழுந்து நிறுக்கும் போது. "முத்தல்" இலைகளைக் காட்டி அவளைக் கண்டபடி ஏசவில்லை. அவளுக்கு அவன் இளநகை காட்டி னான்... அவளும் பதிலுக்கு முறுவலித்தாள். கன்னங் கரேலென்ற அவளது முகத்தில் வெண்மையான ஒழுங்கான பல்வரிசை பளிச்சிட்டது. அதில் சுந்தரம் உலகத்து அழகினையே கண்டதாகக் காட்டிக் கொண்டான்.

அவள்.... பாப்பாத்தி....

அவளுக்கும் சுந்தரத்துக்குமான உறவு இரகசியமாக இருந்து, சிலருக்குத் தெரிந்து, அந்தச் சிலர் மூலமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலருக்குப் பரவி.... தோட்டமெல்லாம் கசமுசவென்று பேச்சுக்கள் அடிபட்டு..... சமுதாய உணர்ச்சி மிக்க சில தோட்டத்து இளைஞர்கள் பாப்பாத்தியை எச்சரித்து... அதையெல்லாம் அவனோ, அவளோ கணக்கில் எடுக்காது... கண்ணை மூடிக்கொண்டு காதல் சிறகை விரித்துப் பறந்து, திடீரென்று அவள் மட்டும் கீழே... கீழே... படுபாதாளத்தில் விழுந்து... சிறகொடிந்து.... அவள் கண்ணை விழித்துப் பார்த்தபோது...

ஆமாம்! அவனைக் காணவில்லை. அவன் போய் விட்டான். இந்த உலகைவிட்டல்ல. இந்த இலங்கைத்தீவை விட்டு....

உலகின் எங்கோ ஒரு இடத்தில் ஏதோ ஒரு பெரிய வேலை கிடைத்து... திடீரெனத் தோட்ட நிர்வாகத்திற்குத் தான் வெளிநாடு போவதாகவும் தன் வேலையை இராஜினாமாச் செய்வதாகவும் எழுதிக் கொடுத்து விட்டுப் போய்விட்டான்.

தன்னோடு ஒன்றாகத் தன்னையே இணைத்திருந்த பாப்பாத்திக்கு ஒரு வார்த்தை கூடச் சொல்லிக் கொள்ளாமல் போய்விட்டான்.

அவன் போனதுக்காக அவள் அழுது புலம்பிக் கதற வில்லை. விரக்தியான பார்வையை மூன்று நாட்கள் செலுத்திக் கொண்டிருந்த பாப்பாத்தி ஒரு நாள் திடீரென மரக்கறித் தோட்டத்திற்குத் தெளிக்க வைத்திருந்த கிருமி நாசினியைத் தஞ்சமடைய.... பிரேத பரிசோதனையின் போது வெளிவந்த உண்மை....

அவள் நான்கு மாதக் கர்ப்பிணி என்பது! பாப்பாத்தியின் மரணத்தால் அந்தத் தோட்டத்து இளைஞர்கள் கொதிப் படைந்ததில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது!

இந்த அதிர்ச்சியால் கலங்கிப் போயிருந்த அந்தத் தோட்டத்து மக்களும், அதனை அடுத்திருந்த தோட்டத்தின் மக்களும் யாழ்ப்பாணத்து இளைஞர்களை நோக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையில் ஒரு தனித்தன்மை தெரிந்தது. அதில் ஒரு வகையான அருவருப்பே இருந்தது.

ரமணியும் முரளியை இப்படியான நோக்கில் பார்த்து அவன் தன் மனக்கிடக்கையைக் கூறியபோது அச்சம் கொண்டதில் தவறு எதையும் முரளியால் காண முடியவில்லை.

"ரமணி...! நீர் சொல்வதும் உண்மைதான். சுந்தரம் செய்தது தவறுதான்.... இதே தவறை உம்மட தோட்டத்து இளைஞன் ஒருத்தன் செய்திருந்தா... நீங்க பாக்கிற பார்வையே வேறை தானே...!"

"ஆமாங்க சேர்... இது வேற பிரச்சின.... இங்க இரண்டு பிரச்சின இருக்குதில்லை.... இங்க உள்ள இளைஞன் இந்தக் குத்தத்தைச் செய்தாக்கா... அவனை மத்தவங்க இழுத்திட்டு வந்து, அவட கழுத்தில தாலியையே கட்டவைச்சிரிக்க மாட்டாங்களா என்ன...?"

ரமணி இப்படி அவனிடம் கேட்டபோது, ஒரு கணம் முரளிகூட அவளது பார்வையின் தீர்க்க தரிசனத்தையும், ஆழத்தையும் கண்டு திகைக்கத்தான் செய்தான்.

முரளி - ரமணி உறவு இப்படியாக ஆரம்பித்து... இன்று மிகவும் நெருக்கமாகிவிட்டது. ஆயினும் வெறுமனே சாதாரண உறவாக அந்தக் காதல் வளரவில்லை.... அதிலே ஒரு தனித் தன்மை மிளிர்ந்தது. இலட்சியம் இழையோடியது.... வெறுமை யான நினைவுச் சரங்களால் தோரணம் அமைத்துப் பகட்டால் அலங்கரித்துப் போலித்தனமான செய்கைகளால் உருவாக்கப் பட்ட கோட்டையாக அல்லாது.... மனிதனின் அடிப்படைப் பிரச்சினைகளை அடித்தளமாகக் கொண்டு அமைக்கப்பட்ட அழகான மிகவும் உறுதியான கட்டடமாக அது கட்டி எழுப்பி விடப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

## சாரதா சண்முகநாதன்

முரளி ஊர் வந்து இன்றோடு நான்கு நாளாயிற்று. இத்தனை வயதில், இத்தனை காலத்தில் அனுபவித்தறியாத ஒரு துயரவெள்ளம், வெளியில் தெரியாத இரத்த ஓட்டம் போல உடலெங்கும் வியாபிக்க, சிந்தனைச் சிறையில் வெந்து போனவனாய் வீட்டிலே முடங்கிக் கிடந்தான்.

அவன் என்றும் அப்படிக் கிடந்தவனல்ல. வந்து இறங்கியதும் கிண்டலும் கேலியுமாகத் தங்கைமாரைச் சீண்டி இழுப்பதும் "வேண்டாம், வேண்டாம் அண்ணா..." என்று தடுத்தாலும் அவர்கள் செய்யும் வேலையில் தானும் பங்கு கொண்டு பளுவைக் குறைப்பதும், சட்டையை மாட்டிக் கொண்டு நண்பர்களைச் சந்திக்க என்று வெளிக்கிட்டால் "நேரங்காலந் தெரியாமல் என்னத்தைத்தான் கதைச்சுத் தள்ளுறாங்களோ.." என்ற தகப்பனின் முணுமுணுப்பைத் தாங்கிக் கொள்வதும், ஒரு மாதிரியாக விடுமுறையைப் போக்கிவிட்டு மீண்டும் மாத்தளைக்குப் பெட்டி கட்டும் போது முகம் கறுக்க... கண் கலங்க நிற்பதும்... இப்போது என்ன பிடித்துவிட்டது இவனுக்கு? எல்லோரையுமே யோசிக்க வைக்குமளவுக்கு மாறிப் போய்த் தான் கிடந்தான்.

"என்ன தம்பி உடம்புக்கு ஏதும் சுகயீனமோ? அரைவாசியாப் போச்சு உடம்பு?"

இயல்பான தாயன்பின் கருணையில் இதுவரை பத்துத் தடவை கேட்டுவிட்டாள் பார்வதி.

"ஒண்டுமில்லை. இந்த வெயிலுக்கை மனிசர் எங்கை வெளிக்கிடுறது? இஞ்சை இப்பிடி ஒரே அகோரமாயிருக்கும் எண்டு நான் நினைக்கயில்லை..."

தன் மனப்புழுக்கத்திற்கு ஈடாகத்தான் வாழ்கின்ற சூழ்நிலையைக் கோடுகாட்டி நம்ப வைக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சைப் பசேலென மலையில் பள்ளி கொண்ட தேயிலைக் கன்றுகளின் அழகிலும், அதற்கும் மேலாக ரமணியின் அபரிமிதமான காதலிலும் அருவிபோல் கொட்டும் அவளது பேச்சிலும் மயங்கித்தன் எதிர்கால வாழ்க்கைக்குக் களம் அமைக்கும் இடம் இதுதான் என்று இருந்து விட்டவனுக்கு இங்கு வந்த பின்புதான் வீட்டு நடப்பும் அதன் தாக்கமும் நெஞ்சை ரம்பம் கொண்டு அறுப்பது போலிருக்கிறது.

இங்கே வெறுமை... மூன்று வருடமாக உழைக்க வெளிக்கிட்டும் வீட்டின் பொருளாதார நிலைமையில் ஒரு முன்னேற்றமும் இல்லாதது அவனை ஆழ்ந்து சிந்திக்க வைத்தது.

ஐயாவின் உழைப்பில் எப்படி வாழ்க்கை வண்டி ஓடியதோ... அதே பாதையில்தான்! உடையிலோ, உருவத் திலோ, உணவிலோ ஒரு மாற்றமுமேயில்லை. பொருளாதாரப் பொத்தலோடு பலப்பரீட்சை நடத்த முடியாதவர்கள் போலப் பழைய ஆடைகளையே தோய்த்தும், தைத்தும் போடும் தங்கைகளையே இன்னும் காண்கிறான்.

அவர்கள் வசந்தத்தை எதிர்நோக்குகிறார்கள். சராசரி மனிதருடைய ஆசைகள் தாமே அவைகள்? "அவர்களது மனச்சிறையில் பூத்த சின்னச் சின்ன ஆசைகளைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாத நான் எப்படி அவர்களின் பெரிய எதிர்பார்ப்பை நிறைவேற்றி வைக்கப் போகிறேன்?"

வாயைக்கட்டி, வயிற்றைக் கட்டி, அரைவாசிச் சம்பளத்தை மிச்சம் பிடித்து...

"அப்பு! நான் அனுப்பிற காசு சீட்டுப்பிடிக்க அல்ல. நீங்கள் மூண்டு நேரமும் நல்லாச் சாப்பிடவேணும். உடம்பைக் கவனமாப் பாருங்கோ" இப்படித்தான் முரளி படித்துப்படித்து எழுதுவான்.

நினைவு தெரிந்த காலத்தில் இருந்து வேலை கிடைத்து வெளிக்கிடும் வரை... வயிற்றுப் பிரச்சினை பெரிதாகவே இருந்தது அவனுக்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புவின் உழைப்பில் விடியாக் கோலங்களாய் இருந்த இருள் மண்டிய கோரங்களை அகற்றுவதுதான் அவனது முதற் குறிக்கோள். அதற்கு ஒரு விடிவை ஏற்படுத்த நினைக்கும் வேளையில்.... புதுப்புதுப் பிரச்சினைகள்!

எப்படித்தான் இந்த நான்கு தூண்களுக்கும் மேல் ஒரு கூரையாய், நிலையாய் நிற்கப் போகிறானோ... ஏக்கப் பெரு மூச்சு நெஞ்சைச் சுமையாய் அழுத்தியது முரளிக்கு.

தங்கைகளோடு கூடப் பிறந்ததில் அவர்களது பாசத்தைப் பரிவர்த்தனை செய்வதில் அவர்களுக்குத் துணையாக நிற்பதில் - தெரியாத பாரம் - வளர்ந்துவிட்டபின்... ஏன் நெஞ்சில் பாறையாய்க் கனக்க வேண்டும்?

சிந்தனைகள் சமுதாயக் குப்பைகளைச் சபித்துக் கொண்டு மேலெழும் வேளை...

"தம்பி எழும்பு... எவ்வளவு நேரமாயிட்டுது இதிலை படுத்து.... எழும்பி முகத்தைக் கழுவிட்டு வா சாப்பிட..." தட்டி எழுப்பிவிட்டுப் போகும் தாயை உற்று நோக்குகிறான்.

"ஆச்சியும் எவ்வளவு கோலம் கெட்டுப் போயிற்றா... என்ன மாதிரி இருந்த உடம்பு...."

"அண்ணா நீங்க எங்களை விட்டு விலகிப் போவது போல ஒரு பிரமை... ஆச்சிகூட அதைத்தான் சொல்லிக் கவலைப் பட்டா..."

தங்கைமார் இன்னும் சின்னப் பிள்ளைகளல்ல. பேதையாய்ப் பெதும்பையாய், மங்கையாய், மடந்தையாய்... .ஒவ்வொரு பருவத்தையும் இயற்கையாகத் தாண்டுவார்கள் பெண்கள்.

"என்ன ஆச்சி சொன்னவ....?"

"மகனே! அதுதான் நான் தின்னுற சோறு கூட என்ரை உடம்பிலை ஒட்டாமல் கரைஞ்சு போகுது..." எனப் பார்வதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும் இந்தச் சமுதாயத்தின் சரிந்து போன நோக்கில் "பெண்களின் பிறப்பைப்" புருஷனுக்குப் பொறுப்புணர்ச்சியுடன் எடுத்துக் கூறும்போது, அதை முரளியின் காதுபடக் கேட்கும்படியே கூறுவாள். முரளிக்கு நேரே சொல்ல மாட்டாள்.

இந்தக் காலத்து ஆண் பிள்ளைகள் "எங்களை நம்பியா பொம்பிளைப் பிள்ளையளைப் பெத்தனீங்கள்?" என்று எதிர்க் கேள்வி கேட்டுவிட்டால்....

அப்படிக் கேட்க மாட்டான் முரளி என்றும் தெரியும். ஏனெனில் அவனுடைய இலட்சியக் கொள்கைகளைப் பற்றி நன்கு அறிந்திருந்தாள் அவள். அந்த ஆச்சியே மகன் விலகிப் போவதாக உணர்ந்தால்....

"சே... நான் ஏன் அப்படி நடந்து கொண்டேன்?" "அவர் களைச் சுற்றியே வளைய வருவதில்.... அந்தப் பாசப் போர் வைக்குள் என்னைப் புகுத்துவதில் அவர்களுக்கு ஒரு ஆத்ம சுகம் என்றால், என்னை ஏன் நான் விலக்கிப் பார்ப்பான்...?"

கூடுமானவரை ரமணியின் நினைவுகளை நெஞ்சில் நிழலாட விடாமல் எப்பொழுதும் போலவே வீட்டில் கலகலப்பாக இருக்கப் பார்த்தான். ஆனால் எதை மறக்க நினைத்தானோ.... அந்த நினைவே விஸ்வரூபமெடுத்து "முரளி, நீங்க வரும் வரையில, நானு இந்த ஆத்தங்கரையில உக்காந்து பாடிட்டே இருப்பேன். அந்தக் கீதம் காடு, மலை, மேடு, பள்ளம் எல்லாம் கடந்திட்டு யாழ்ப்பாணத்து விளிம்பில பட்டுத் தெறிச்சு உங்களைச் சீக்கிரமா இங்கிட்டு வர வைச்சிடும். இல்லீங்களா?"

ஏக்கம் தொனிக்க அவள் கூறியது அவன் காதுகளில் ஒலித்துக்கொண்டேயிருந்தது.

ரமணியை நினைத்த மனம் அந்தத் தோட்டப் பாதையின் வளைவில் திரும்பியது. வரிசை வரிசையாகப் பத்துக் குடியிருப்புகளாகப் பிரிக்கப்பட்ட அந்த நீண்ட லயனின் பலகை மறைப்பில்.... பூவின் சிரிப்பாய் ஒரு புன்னகையை உதிர்த்துக் கொண்டு நிற்பவள், வழக்கத்திற்கு மாறாக அந்த அன்பளிப்பைக் கூடத் தரவில்லை அன்று.

"ஏன்?"

குழம்பிப் போனான் முரளி..

"என்ன வந்தது இவளுக்கு?"

காலையில் இருந்தே அவளைக் கவனித்துக் கொண்டு வருகிறான்.

"ராத்திரியெல்லாம் தூங்கலியா ரமணி?"

தலையாட்டினாள்.

"சாப்பிடலையா?"

"இல்லே..." குரல் கனத்தது.

"ஏன்?"

நிமிர்ந்து அவன் கண்களைச் சந்தித்தாள்.

"இனி ஒரு மாதமா உங்களைப் பாக்க முடியாதே! யாழ்ப்பாணம் போயிடுவீங்க...."

அவன் மனமும் அழுதது. அந்தப் பிரிவுக்காக....

ரமணி.... ரமணி....

அவனது ஒவ்வொரு இதயத் துடிப்பும் அவள் பெயரைச் சொல்லியது.

சிறிது இடைவெளியைக் கூடத் தாங்காத மென்மனதின் கரைசல், முரளியின் இரத்த நாளங்கள் எல்லாம் ஊடுருவியது. "ஒரு மாதந்தானே ரமணி... இங்கே இருக்கும் போதும் என்ன? உன்னைச் சந்திக்க முடியுதா? ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு விநாடியும் பயந்து, பயந்துதானே பாக்க முடியுது..."

முரளியைப் பற்றி ஆசைகள் மனதில் தூவானம் போட்ட நாளிலிருந்து ரமணிக்கு அன்புக்கு மேலாக ஒரு பயம் புகுந்து அவளைத் தயங்க வைத்துக் கொண்டேயிருந்தது. அந்தப் பயத்தைப் போக்க முரளி பலதையும் பேசுவான். "நல்லாத்தான் யோசிக்கிறீங்க... வாத்தியார் புத்தியில்ல.... அதுதான் பாடத்துக்கு மேலேயும் படிச்சுக் குடுக்கிறீங்க...." என்று சொல்லி விட்டு, சிறிது யோசித்துப் பின்தொடர்வாள். "நானும் யோசிச்சுக் கிட்டுத்தான் இருக்கேன். பிரச்சினை உங்களோடையும் என்னோடையும் மட்டும் முடியிறதில்லையே...." என்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ரமணி, எங்கடை சமூகம் வழுக்குப் பாதையிலை நிண்டுகொண்டிருக்கு. அடுத்த அடியை நிதானத்தோடை வைக்க வேணும். கொஞ்சம் பதட்டம் இருந்தாலும் சறுக்கிடும். அதுக்காகத்தான் நாங்கள் எங்களை முதல்லை... எங்கடை வீட்டாக்களை... பிறகு சமூகத்தை..."

"எனக்கென்னவோ பயமாயிருக்கு. அந்தளவுக்குச் சக்தி நமக்கிருக்காண்ணு சிலவேளை என்னையே கேட்டுக் கிறேன். தைரியம் மெல்லத் தலைகாட்டுற வேளையில கடந்துபோன காலங்களின் சம்பவங்கள்... பயம்மாயிருக்கு..."

அவள் கண்களை மெல்லத் துடைத்து, தளிர்க்கொடி மேனியை மெல்ல அணைத்து, "இந்தப் பூந்தோட்டச் சொந்தக் காரன் எப்பவும் நான்தான். பயப்படாதை..." என்றான் முரளி.

அவனின் அன்பும் ஆதரவும் அதில் தெரிந்த கூர்மை யான தீர்க்கமும், காய்ந்து தீர்ந்த இலைச் சருகுகள்... அதன்பின் பசுமையை எதிர்நோக்கும் வசந்தத்தின் துளிர்போல அவளின் நிலையை மாற்றியது. களங்கமற்ற வெள்ளை உள்ளத்தை முகம் பிரதிபலிக்க தும்பைப் பூவாகச் சிரித்த படியே விடை கொடுத்தாள் அவள்.

"சீக்கிரம் வந்திடுங்க. அதுவரைக்கும் நீங்க தந்த நினைவுகளோடையே போராடிக்கிட்டிருப்பேன்" தன் பிரிவுக்காக அங்கே ஒருத்தி, வரவுக்காக இங்கே நால்வர் பார்வை... தான் செய்த ஒரு காரியம், ஒரு உத்வேகத்திற்கு... ஒரு மோதலுக்கு வந்துவிட்டதை உணர்ந்தான் அவன். இது அவன் எதிர்பார்த்தது தான். ஆனால் சீக்கிரமாய் அல்ல...

கடமையும் காதலும் இரு கோடுகளாய் எழுந்து நின்று... நீயா, நானா எனும் போது அவை தன் ஆண்மைக்கு விடப்பட்ட சவால்களாகவே தோன்றின முரளிக்கு.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

**– ஆனந்தி**

காலைச் சாப்பாடு முடிந்து. மதியச் சமையல் தொடங்குவதற்கு முன்பாக, மிஞ்சியிருக்கும் இடைவேளைப் பொழுதைத் தனிமையிலேயே கழித்துவிட வேண்டுமென்ற உள்ளார்வமான மனவிருப்புடன், கௌரி வாசலில் வந்து உட்கார்ந்து கொண்டிருந்தாள். பேச்சுக்குத் துணையாக யாரையும் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கிற பழக்கமில்லாமல் தனிமையில் மௌனம் வெறிக்க உட்கார்ந்திருப்பதே அவளுக்குப் பிடிக்கிறது. அது ஒரு அபூர்வ வாழ்க்கை ராகம் போலச் சோகமாகவும், சந்தோஷமாகவும் அவள் மனதை ஆழ்ந்த ரசனைச் சுவடுகளுடன் தொட்டு இழுத்துக் கொண்டிருக்கும்.

தபால்காரன் மணிச்சத்தம் தெருவாசலில் கேட்டதும், “முரளியண்ணா கடிதமாத்தான் இருக்குமெண்டு” நிச்சயப் படுகிற ஒரு நம்பிக்கை உணர்வோடு அவள் வெளியே போய் அதை வாங்கிக் கொண்டு திரும்பி வந்தாள்.

வழக்கமாக அப்புவின் பெயருக்கு வரும் கடிதம் இன்று எதிர்மாறாக அவள் பெயருக்கே வந்திருந்தது. அதை ஒரு தனி விஷேசமாகவும் ஏதோ ஒரு அந்தரங்கத்தைச் சொல்ல அவன் விரும்புகிறானென்றும் மனதில் ஊகித்துக் கொண்டு அதை இரகசியமாய்ப் படித்து முடிப்பதே நல்லதெனக் கருதியவளாய் அறைக்குள் போய் அதைப்பிரித்து வாசிக்கத் தொடங்கினாள்.

வெறும் கடிதப் பெயருக்காக மட்டுமில்லாமல், அவன் உணர்ச்சி மயமாகச் சொல்லி முடித்திருக்கிற உண்மைகள், தங்கள் சொந்த வாழ்க்கையின் இலக்குகளைத் திருப்பி, தங்களைத் தரிசனப்படுத்தவே நிகழ்ந்துள்ளன என்ற நினைப்பு வந்தவுடன், அவளுக்கு வெகுவாக மனம் சிலிர்த்துப் போன மாதிரி இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை எப்படி அப்புவுக்குத் தெரியப்படுத்துவது என்று தான் அவளுக்குப் புரியவில்லை. முரளியண்ணாவைப் பற்றி அவர் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்?

அவர் பெரிதாக நினைத்துக் கொண்டிருக்கிற கடமை ஒவ்வொன்றுக்கும், ஈடுகொடுத்துப் பாரம் சுமக்க வேண்டிய கடமையில் முரளிக்கு என்ன மிஞ்சப் போகிறது? அவன் சுகத்துக்கு ஆசைப்பட்டா இதைச் செய்தான்?

நல்ல வேளை, அக்கடிதம் வந்த சமயம் அப்பு வீட்டில் இருக்காமல் சைக்கிளில் எங்கோ போயிருந்தார். அவர் வருவதற்குள் தன்னைச் சுதாரித்துக் கொண்டு அவரிடம் விடயத்தை வெளியிடுவதற்கான முழுத்திராணியையும் ஏற்படுத்திக் கொண்டு விடலாம் என்ற தீர்மானத்தோடு அறை யினின்றும் வெளிப்பட்ட கௌரி, அடுக்களைக்குள் போய் விடயத்தைக் கூறி ஆச்சியையோ, சுமதியையோ பங்கப்படுத்த விரும்பாமல் இது அப்பு வாயாலேயே எல்லோருக்கும் தெரிய வரட்டும் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு, மீண்டும் வெளி வாசலுக்குப்போய் வராந்தாவின் மூலைத்தூண் ஓரமாகக் குந்தி அமர்ந்தவாறு அப்புவை எதிர்பார்த்துத் தவம் கிடக்கத் தொடங்கினாள்.

அவள் அங்கு வந்து அமர்ந்து அரை மணித்தியாலத் திற்குள்ளே அப்பு திரும்பிவிட்டார். 'கேட்'டைத் தாண்டிச் சைக்கிளை உருட்டித் தள்ளிக் கொண்டு அவர் உள்ளே வரும்போது அவர்மீது கொண்டுள்ள இயல்பான பயத்தோடு மனதில் ஸ்திரம் குலைந்து போனவளாய் கடிதமும் கையுமாக அவரை எதிர்கொள்ள எழுந்து வெளியே போனாள்.

சைக்கிளை முற்றத்து நிழலில் நிறுத்திவிட்டு, உள்ளே வந்த அவர், மனம் தாங்காமல் கொதிக்கிற வாழ்க்கையின் களைப்புகளை ஆற்றுவது போல் நீளமான தொனியில் "ஸ்" என்று பெருமூச்செறிந்தவாறே வாசலில் அவளைக் கண்டவுடன் பார்வையின் கனம் அழுத்த, அவளை வெறித்துக் கொண்டே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆற்றை தபால் வந்திருக்கு, தம்பியின்ரையே? என்னவாம்? காசு, கீசு ஏதாவது வந்ததோ?” என்று கேள்விகளை அடுக்கினார்.

நடுத்தர வர்க்கத்தில் பிறந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு பாமரத் தந்தையின் நிலைமையில் அவர் பெரிதுபடுத்துகிற காசுக்கு முன்னிலையில், முரளியின் உணர்ச்சி நிர்ப்பந்தமான தத்ரூப உண்மை வடிவமும், அந்த உணர்ச்சியின் சிகரத்தில் சிலிர்த்துக் கொண்டிருக்கிற தானும் எவ்வளவு தூரத்துக்கு எடுபடக்கூடும் என்று விளங்காமல், அவள் இன்னும் அதைக் கணிக்கிற நிலையிலேயே சோகம் பிரதி பலித்து நின்று கொண்டிருந்தாள். பிறகு எப்படியோ தன்னைச் சுதாரித்துக் கொண்ட மனத்தோடு அழுத்தமான மெல்லிய குரலில் பேச வாய் திறந்தாள்.

“அண்ணைதான் போட்டிருக்கு, சம்பளம் வர இன்னும் நாள் கிடக்காம். இது வேறை ஒரு முக்கியமான விசயம்” என்றாள்.

அது அவரைச் சமாதானப்படுத்துவது போலவும், அவள் கூற விரும்பும் விடயத்துக்கு ஒரு முன்னறிவிப்புக் கொடுப்பது போலவும் இருந்தது.

“என்ன விஷயம்? தம்பி ஏதாவது சோதினை எடுக் கிறானோ?”

“அப்படி எல்லாம் ஒண்டுமில்லை. எல்லாம் விதி”

“அதென்னடி விதி...”

“அண்ணன்ரை மனம் தன்னிச்சையாய் மாறிப் போயிருக்கு. எங்களுக்கு விரோதமாய் அது பட்டாலும் அவர் வரைக்கும் அது சரிதான். அதுக்குக் காரணம் அவற்றை ஆழ்ந்த மனம். அவற்றை இளமைக்குக் குறிக்கோளாய் ஒரு நல்ல பிள்ளை கிடைச்சிட்டாளாம். இரண்டு பேரும் மாலை மாற்றிக் கொள்ளாத குறைதான். மற்றப்படி எல்லாமே முடிஞ்சுபோச்சு. இதிலை சரி சொல்றதுக்கு நானோ நீங்களோ இல்லை அவை...”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த "அவை" யில் அவள் கொஞ்சம் அழுத்தமாகவே பேசினாள்.

அவர் உணர்ச்சி வசப்பட்டுப் போய்க் கத்தினார்.

"நான் வருத்தக் காறன்ரி. சுமதி வேறை இருக்கிறாள். கொண்ணைக்கு என்ன விசரே?"

"அறுபது வயசிலை நீங்கள் வருத்தக்காறனாய்ப் போனதுக்கு எங்கடை அண்ணன் தன்ரை இளமைப்பருவத்து உணர்ச்சியளை அழிச்சுப் போடவேணுமெண்டு எதிர்பாக்கிறது என்ன நியாயம்? நீங்கள் அவற்றை வயசிலை இப்பிடியே இருந்தனீங்கள்? அவர் ஒண்டும் எங்களை விட்டிட்டு ஓடிப் போகேல்லை. எங்கடை சந்தோஷத்துக்காகவே வாழ்ற அவர், தன்ரை சந்தோஷத்துக்காக இந்த ஒரே ஒரு செயலையாவது செய்யக் குடாதோ? மாத்தளையிலை அவரிட்டைப் படிக்கவந்த ஒரு பிள்ளையிட்டைத் தான் அவருக்கு மனம் லயிச்சுப் போயிருக்கு. இதிலை கூடாதெண்டு வெக்கப்படவும், துக்கப் படவும் சமூக விரோதமாய்க் கணிப்புகளை ஏற்படுத்திக் கொண்டு மனம் கலங்கிப் போறதுக்கும் நாங்கள் ஆர்? இதிலை அண்ணன் சந்தோசப்படுற ஒரு பெரிய காரியம் இருக்கே அவ்வளவும் எங்களுக்குப் போதும்...."

"அவன் தோட்டக்காட்டுக்கு வேலைக்குப் போகேக்கையே நான் நினைச்சனான். அவளவையின்ரை சிரிப்பே ஆளை மயக்கிப் போடும் எண்டு. எல்லாம் போச்சு. இனி எங்களுக்கு என்ன இருக்கு? வெளிலை எப்பிடித் தலைகாட்டப் போறம்.... எல்லாத்தையுமே அவன் உரிஞ்சு போட்டான்..."

அடுக்களைச் சமையலை முடித்துக்கொண்டு ஆச்சியும் சுமதியுமாகக் கதவு மறைவில் நின்றவாறு, அப்புவோடு கௌரி போடும் சண்டையைப் பார்த்துக்கொண்டிருந்து விட்டுப் பிறகு தடம் பிரிந்து உள்ளே வந்த ஆச்சி, அப்புவைச் சாப்பிட எழுப்ப வேண்டுமென்ற கடமை உணர்வு உந்த உள்ளே போய்ச் செம்பை எடுத்துக்கொண்டு திரும்பினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இஞ்சை எழும்பிச் சாப்பிடுங்கோவன்..."

"எனக்கு வேணாம்"

"காலமையும் ஒண்டும் சாப்பிடேல்லை. அதுகளும் சாப்பிடாமல் பாத்துக் கொண்டிருக்குதுகள்... ம்... எழும்பிச் சாப்பிடுங்கோ..." "ஒருக்காச் சொன்னால் உனக்கு விளங்காதே. கொண்டு போடி தண்ணியை... எடுத்து உன்ரை தலையிலை தான் கவிழ்ப்பன்..."

படிப்பறிவில்லாத அவரின் முரட்டுத்தனங்களிலிருந்து எப்படியோ தப்பி உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் அம்மா, இந்த விடயத்திலும் அவருக்கு ஈடுகொடுக்க வேண்டுமென்ற பொறுமையுடனும் விபரீதமாக எதுவும் நடந்துவிடக் கூடாது என்ற பிரார்த்தனையுடனும், அவரோடு பேச இயலாதவளாய் கண்கள் வெறிக்கத் திரும்பி உள்ளே வரும்போது அடுக்களை வாசலில் சுமதி கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்.

அப்பு புரிந்து கொண்டிருக்கிற மாதிரி இல்லாமல் சுமதியின் சுயரூபம் வேறொரு இலக்கில் நிர்த்தாட்சிணியம் கொண்டு விளங்குகிறது என்பதைப் புரிந்து கொள்ள ஆச்சியால் முடியுமோ என்னவோ? கௌரிக்குப் புரிகிறது.

மறுநாள் ஏழுமணி சுமாருக்குக் கௌரி படுக்கையை விட்டெழுந்து பல்துலக்கப் போனாள்.

வெளியே காலை வெய்யில் மங்கலாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அந்தச் சூழ்நிலைக்குப் புலப்படாமல் வீட்டில் ஏற்பட்டுள்ள அந்தகாரம் தன் மனதிலேயே வெறித்துக் கொண்டிருப்பதை அவள் உணராமலில்லை.

இந்த மனவெறிப்புடன் இரவுத்தூக்கம் கெட்டுப் போனதால் கண்ணும் எரிந்தது. அப்பு இன்னும் படுக்கையிலேயே கிடந்தார். ஆச்சி அவருடைய கால் வருடி, வெறுந்தரையில் தூங்கி வழிந்து கொண்டிருந்தாள். இனிப் பார்க்க வேண்டியது சுமதி அக்கா ஒருத்தியைத்தான். அவள் எங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரி வெளியே வந்து கிணற்றடிக்குப் போனாள். சலவைக் கல்லில் சோர்ந்து போய் உட்கார்ந்த அவள், வானத்தை வெறித்துக் கொண்டிருந்தாள்.

"எழும்பக்கா... நேற்று முழுக்கச் சாப்பிடாமல் ஒரே களைப்பா இருக்கு. சமைச்சதெல்லாம் கிடந்து நாறுது. எல்லாத்தையும் என்ன செய்யிறது? கொட்ட வேண்டியது தானே!.... இதுகளை நினைச்சால் மனதுக்கு எவ்வளவு கஷ்டமாயிருக்கு... பறவாயில்லை... இண்டைக்கெண்டாலும் நல்லபடி சாப்பிட்டு முடிய வேணும். வா... கெதிலை சமைப்பம்..!"

"உனக்கு வேணுமெண்டால் போய்ச் சமையன். எனக் கொரு மண்ணும் வேண்டாம்..."

"கடைசியிலை மிஞ்சுமே ஒரு பிடி மண்... அதுகூட வேண்டாமோ?

"மண்ணோ? மனிசனோ? எல்லாம் விட்டுப் போச்சு.... எல்லாரும் சரியான சுயநலம்...!

"நீ ஆரைச் சொல்லுறாய்? முரளி அண்ணாவையோ?"

"அவனைத்தான்...."

"அப்புதான் காசு வேணுமெண்டு அடிச்சுக் கொள்றார். உனக்கு என்ன மனவருத்தம்...."

"உனக்குச் சொல்லத்தான் வேணுமோ?"

"நீ சொல்லாட்டலென்ன? நீங்கள் எங்கை இருக்கிறிய ளெண்டு எனக்குத் தெரியாதோ? எல்லோருக்கும் 'அம்மா மனம்' வந்திடுமே? அப்படியொரு விருட்சம் எங்கை கிடைக்குது? கடவுளே! கடவுளே!"

"சும்மா அலட்டாதை கௌரி. எனக்கு விசராய்க் கிடக்கு. பேசாமல் போ..."

"நான் போறன். ஆனால் ஒண்டு சொல்லுறன். உணர்ச்சி எல்லாருக்கும் பொது. உன்ரை அறிவிலை நீ பேசுற நியாயமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாப்படலாம். அதே மாதிரித்தான் மற்றவைன்ர நிலையும். முரளி அண்ணாவின்ரை நியாயமும் இதுதான். இதிலை உள்ள பிழை சரி எங்களுக்கு எதுக்கு? உண்மையிலை மனசுக்குத் தேவைப்படுறது அன்பு ஒண்டுதான். மனிசற்றை பிழையைப் பொறுத்துப் போறதுக்கும் அதுதான் வழி. இண்டைக்கு நாங்கள் முரளி அண்ணாவை உதாசீனப்படுத்தி விட்டால், சமூகத்திலை வேறை ஆர் அவருக்கு மாலை போடப் போயினம்? நாங்கள் இதுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாய் இருக்க வேண்டாமே?"

"நீ வேணுமெண்டால் இரன். நான் எப்பவும் அப்புவோட தான் இருப்பன்..."

அப்பு உள்ளே வந்து படுக்கையில் விழுகிற சப்தம் தொப்பென்று கேட்கிறது. நெஞ்சைக் குடைகிற மாதிரி இரு முகை வேறு செய்கிறார். இது ஆழமான மன வதைப்புக்களின் எதிரொலி.

எதிராளியைப் பணிய வைத்துப் பலன் சாதிப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருப்பவர் அவர். யாரிடமும் அவர் தலைகுனிந்து போனது கிடையாது. முரளி விடயத்தில் அது மாறிவிடுமா? அவர்தன் குறிக்கோளை அடைந்தே தீருவார்.

இந்த மறுப்புகள் நடுவே, அவனை எதிர்பார்த்து, மாலையும் கையுமாகக் காத்துக் கொண்டிருக்கிறவள் கௌரி ஒருத்திதான். இரண்டு மாலைகள். ஒரு மாலை புதிதாய் வரப்போகிற அண்ணிக்கு...

ரமணியாமே அவள் பெயர். எப்படி இருப்பாளோ தெரிய வில்லை. அண்ணன் அதைப்பற்றி ஒன்றுமே எழுதவில்லை. உள்ளம் மட்டுமே எழுதினான். நான் எப்படித் தேடி அவளைக் கண்டு பிடிக்கப் போகிறேன். மலையென்றால் குளிர் பனி பெய்யுமாமே! அப்படி மனதுக்கும் குளிர்மையாய் இருப்பாளோ! அல்லது மணமற்ற, மனம் வெறுக்கும் காட்டுப்பூ மாதிரி வரண்ட கோலச் சுவடோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

**- மண்டூர் அசோகா**

மெல்ல மெல்லப் பொழுது புலர்ந்து வருவது அறையின் கூரை வழியாக வரும் மெல்லிய வெளிச்சத்திலிருந்து புரிந்தது. சில்லென வந்து உடலை மோதும் குளிர், அதனால் ஏற்படும் உடற் சிலிர்ப்பு.

இரவு முழுவதும் தூக்கமின்றிப் புரண்டு கிடந்த முரளி, அதிகாலைப் போதில் சற்று அயர்ந்த கண்கள் அந்தக் குளிரின் சிலிர்ப்பில் திறந்து கொள்ள மறுபுறம் புரண்டு மனைவியைப் பார்த்தான். எந்தவித சலனமும் இல்லாமல் ஒரு குழந்தையைப் போல மலர்ந்த பூவாய் உறங்கும் மனைவியின் முகம், அதன் களங்கமில்லாத் தூய்மை அந்த மெல்லிய வெளிச்சத்திலும் அவனுக்குத் தெரிந்தது. "இவளுக்குமட்டும் இந்த அலட்டிக் கொள்ளாத மனநிலை எப்படி வாய்த்தது? எத்தனை நிம்மதி யாய், எதுவுமே மனதில் இல்லாத மாதிரி எல்லாவற்றையும் துடைத்துவிட்டுத் தூங்குகிறாள்"

அதிசயமாய் அவளைப் பார்த்துக் கொண்டு கிடந்தவன் கொட்டாவி விட்டுக் கொண்டு மறுபுறம் புரண்டு படுத்தான். முதல் நாள் மாலை நடந்த அந்த நிகழ்ச்சி, அதன் அசிங்கத்தனம் இன்னமும் நெளிகின்ற புழுவாய் அவன் நினைவைக் குடைந்து கொண்டிருந்தது. கூடவே ஒரு வெறுப்பும், "சீ" யெனச் சலித்துப் போகின்ற மாதிரி!

"விட்டுத் தள்ளுங்க அத்தான். இந்தச் சின்ன விசயத்தை யெல்லாம் பெரிசா எடுத்துக்கிட்டு..... அதையெல்லாம் நினைச்சிக் கலங்கிக் கிட்டிருக்க நீங்க சின்னப் புள்ளையா என்ன? ஒரு மாஸ்டரா, லட்சணமா? தைரியத்தோட இருக்கக் கூடாது? எல்லாத்தையும் தூண்ணு உதறித்தள்ளிட்டு?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்றே வழிமறித்துத் தன்னை வார்த்தைகளாற் தாக்கிய அந்தக் கும்பலின் அட்டகாசத்தை வந்ததும் வராததுமாக மனைவியிடம் சொல்லி ஆறுதல் வாரத்தைகளை எதிர்பார்த்த அவனுக்கு அவளுடைய பதில் இது.

'ரமணி, உனக்கு எல்லாமே அற்பம் தானா? கண்ணுக்கெதிரே தெரிகிற எல்லா அநியாயங்களையும் தூவென்று ஊதித்தள்ளிவிட்டு எத்தனை நாளைக்கு வாழ்வது? இந்தப் பிரச்சினைக் கும்பலுக்குள் வாழ என்னால் முடியவில்லையே ரமணி'' அவனுடைய மனம் சகிக்கமாட்டாமல் ஓலமிட்டது.

அவள் இந்தச் சூழலில் பிறந்து லய வாழ்க்கையின் நெருக்கடிகளில் ஊறிப்போய் எல்லாவற்றையும் சாதாரணமாய் ஏற்றுக்கொள்ளப் பழக்கப்பட்டவள். அவன் தன் யாழ்ப் பாணத்துக் கிராமத்தின் சுதந்திரமான வாழ்க்கையை நினைத்துப் பார்த்தான். எத்தனை இனிமை கலந்த சுதந்திரம் அது. மூச்சுமுட்டும் இந்த நெருக்கடியான, வரிசை அறைகளில் அடைபட்டுக் கிடக்கும் வாழ்க்கைக்கும் பரந்த வளவுகளில் சின்னக் குடிசைகளிற் கூட மாற்றாரின் தலையீடின்றி வாழும் வாழ்க்கைக்கும் தான் எத்தனை வேறுபாடுகள்.

அறையினுள்ளே மெல்லிய வெளிச்சம் கோலம் போட ஆரம்பித்திருந்தது. தூக்கம் கலைந்து எழுந்த ரமணி போர்வையை இழுத்து அவனைப் போர்த்திவிட்டு வெளியே சென்றாள். பாவம், அவன் தூங்குகிறான் என்ற எண்ணம் அவளுக்கு. இனி மெல்ல மெல்ல அந்தப் பிராந்தியத்துக்கு உயிர்ப்பு வந்துவிடும்.

அன்று சனிக்கிழமை. பாடசாலைக்கும் போகும் அவசரம் இல்லாததால் அவன் சாவகாசமாகப் படுத்துக் கிடக்கிறான். "பெரிய வாத்தியாரையா இவரு. படிப்பிக்கப் போறேண்ணு வந்து ரமணிய வளைச்சிப் புடிச்சது காணாதெண்ணு இப்ப இன்னொரு கமலிக்கு வலை வீசிறாரு''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பாடசாலையிலிருந்து சற்றுத் தாமதமாக வந்து கொண்டிருக்கையில் அவனை நோக்கி வீசப்பட்ட வார்த்தைகள் இவை. "ஸ்கூளுவிட்டு ஒரு மணித்தியாலத்துக்குப் புறகும் இவருக்கு வேலையிருக்குடா அங்க. இப்ப அந்தக் கமலியோட என்னென்ன சரசம் பண்ணிக்கிட்டு வாறாரோ?"

முரளி இந்த வார்த்தைப் பிரயோகங்களால் திடுக் குற்றுத் திணறிப்போய் நின்றான். அவனுக்கு ஒரு கணத்தில் எல்லாமே புரிந்தது. அந்த வார்த்தை அம்புகளை வீசியவர்கள் யாரென்பதும் புரிந்தது.

அவர்களுக்குப் பதில் சொல்வதா வேண்டாமா எனச் சிந்தித்தவன் அந்தச் சந்தியில் நான்கைந்து பேராய்க் கூடி நின்ற அந்தக் கூட்டத்தையும் அவர்களின் உள்ளே புகைந்து கொண்டிருக்கக் கூடிய பொறாமையையும் மடமையையும் எண்ணி அவர்களது அறியாமைக்காக இரங்கியவனாய்க் குனிந்த தலையுடன் நடக்கிறான்.

கமலி... அக்கிரமங்களில் சிக்கித் தவிக்கிற ஒரு அபலைப் பெண்ணுக்காக இரங்குவதும் அவளுக்கு ஆறுதல் கூறுவதும் கூட இவர்களது பார்வையில் தவறாகத் தெரிகிறதே என்ற வேதனையும் அவனைத் தொடராமலில்லை. அவள் அவனுடைய மாணவி. ஒரு மாணவியின் பிரச்சினைகளை ஆசிரியன் கேட்டறிந்து ஆறுதல்படுத்துவது எந்த வகையில் தவறாயிருக்கு மென்று அவனுக்குப் புரியவில்லை.

வியாழக்கிழமை. முதலாவது பாடவேளை பத்தாம் வகுப்புக்கு அவனுடைய பாடம். நீண்ட நேரமாய் அவன் கவனித்துக் கொண்டிருந்தான். கமலி என்ற அந்த மாணவி மேசை மீது தலை கவிழ்ந்து படுத்துக்கொண்டு மெல்ல விசும்புவது அவனுக்குத் தெரிந்தது. வகுப்பில் மிகவும் புத்திசாலியான பெண் அவள். அடக்கமானவள். அவளுக்கு நல்ல எதிர்காலம் உள்ளதென்று கணித்து வைத்திருந்தான். அவளுடன் பழகக் கிடைத்த சந்தர்ப்பங்களின் மூலமாக அவளுக்குத் தாய் தகப்பன், மூத்த சகோதரர்கள் யாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையென்றும் ஒரே தம்பியுடன் மாமன் வீட்டில் வளர்வ தாகவும் அந்த மாமி கொடுமைக்காரியென்றும் அறிந்து வைத்திருந்தான் முரளி. அத்தோடு அந்த மாமியின் மகன் முறையான வேலுவுக்கு அவளை மனைவியாக்க மாமி முயற்சி செய்வதும் அதைக் கமலி விரும்பவில்லை என்பதும் அவனுக்குத் தெரிந்திருந்தன. அந்த வேலு நல்லவனில்லை என்றும் படிக்காத முரடன், கெட்ட சகவாசங்கள் உடையவன் என்றும் அவள் இவனிடம் சொல்லி அழுதிருக்கிறாள்.

அப்படி அவளுடைய பரிதாபகரமான வாழ்க்கையைப் பற்றி அறிந்திருந்ததால் அவனையறியாமலே ஒருவித அனுதாபம் அவள் மீது ஏற்பட்டிருந்தது.

"இப்போ இவள் ஏன் அழுகிறாள்?" அவனுக்குக் குழப்ப மாயிருந்தது. இரண்டு மூன்று தடவைகள் காரணம் கேட்டும் அறிய முடியாமற் போகவே அவன் பாடத்தை முடித்து விட்டு மற்ற வகுப்புகளுக்குப் போயிருந்தான். மனசுக்குள் கமலி ஏன் அழுகிறாள் என்ற வினா.... அதன் குடைச்சல்; அவனால் பாடங்களில் முழுமையாகக் கவனம் செலுத்திப் படிப்பிக்க முடியாத அவஸ்த்தை.

அவனுடைய அந்த உள்ளக் குமுறலைத் தீர்த்து வைப்பது போல அன்று பாடசாலை முடிந்ததும் அவள் அவனிடம் வருகிறாள். அழுதழுது வீங்கி ஏதோ ஒரு கலவரத் தால் மருட்சியுற்ற கண்கள்..... சிவந்து கிடந்த முகம்... எடுத்த எடுப்பிலேயே எதுவும் பேசிவிட முடியாத தயக்கம். இவற்றை யெல்லாம் சுமந்து கொண்டு ஒரு சகோதரனிடம் அடைக்கலம் புக வரும் தங்கையைப் போல அவன் முன்னால் வந்து நிற்கிறாள்.

அவளாக ஏதாவது சொல்வாள் என எதிர்பார்த்திருந்த முரளி அவளுடைய தயக்கத்தைப் புரிந்தவனாக "என்ன நடந்தது? ஏன் கமலி காலையிலிருந்து அழுகிறாய்?" என்று கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சார் நான் ஸ்கூலுக்கு வர்ர வழியில அந்த வேலுவும் அவனோட கூட்டாளிங்களும் நின்னுக்கிட்டு என்ன வம்பு பேசி முறைச்சாங்க.... நா பதில் சொல்லிக்காம வந்திட்டன். ஸ்கூளு விட்டுவா, உன்னயக் கவனிச்சுக்கிறன் அப்பிடீன்னு வேலு கத்திக்கிட்டிருந்தான் சார். அத்த வேற. படிப்ப உட்டிடு, உன்னைய வேலுவுக்குக் கட்டிக்குடுக்க நாளு பாக்கிறன் எண்டு மிரட்டுறா சார்” மடைதிறந்த வெள்ளமாய் தன் மனதை அழுத்தும் துயரச் சுமையைக் கொட்டி நின்ற அந்தப் பேதைப் பெண்ணுக்காக இரங்கியதும் ஆறுதல் வார்த்தைகள் சொன்னதும் இவர்களைப் பொறுத்தவரையில் பாரிய குற்றங் கள்.

தன்னுடைய இந்தக் குற்றத்தைக் குத்திக் காட்டி அசிங்கப்படுத்தியது அந்த வேலுவின் அடியாட்கள் தான் என்பதை அவன் அறிவான். மறுநாள் வெள்ளிக்கிழமை கமலி பாடசாலைக்கே வரவில்லை. வீட்டில் என்ன நடந்ததென்றும் அவனால் அறிய முடியவில்லை.

“என்னங்க, இன்னும் என்ன தூங்கிக்கிட்டிருக்கீங்க... எழும்புங்க, விடிஞ்சி போச்சி” செல்லமாய் அவன் காதருகே கெஞ்சிப் போர்வையை இழுக்கும் ரமணியின் முகம்... புத்தம் புதுப் பூவொன்று பனியில் குளித்துச் சிலிர்த்து நிற்கும் மதர்ப்போடு அவன் கண்களுக்கு விருந்து படைத்தது.

“அதுக்குள்ள குளிச்சி முடிச்சாச்சா?” அவன் எழுந்து வெளியே வருகிறான். மாத்தளை நகரமே ஒரு மரகதப் போர்வையாய் வியாபித்துக் கிடக்கிறது. குன்றுகளும் அருவி களும் பூக்களும் செடிகளுமாய் மலர்ந்து கிடக்கும் இந்த மண்ணில் வாழ்கின்ற மக்களில் ஒரு பகுதியினர் தங்கள் வாழ்வுக்கான போராட்டங்களால் அறியாமையை வளர்த்துக் கொண்டு... இவர்களிடையே அறிவுத் தெளிவும் அடுத்தவரைப் புரிந்து கொள்கிற மனநிலையும் ஏற்பட்டால் வாழ்க்கையை எவ்வளவு அழகானதாக ஆக்கிக் கொள்ளலாம். நினைவே அவன் மனதில் ஒரு நிறைவைத் தந்தாற் போலிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நான் பொழுதோடயே போய்க் குளிச்சிட்டு வந்திட்டன். நீங்க போய்க் குளிச்சிக்கிட்டு வாங்க. ஒரு நொடியில நான் போய் பால் வாங்கிட்டு வந்திடுறன். சீக்கிரமா வந்திருங்க.” துவாயையும் சோப்பையும் பிரஷ் நிரம்பப் பற்பசையையும் எடுத்து அவனிடம் கொடுத்துவிட்டுப் போத்தலுடன் துள்ளிக் கொண்டு ஓடும் ரமணியைப் பார்த்துக் தனக்குள்ளாகவே சிரித்துக் கொண்டவன் பல்லைத் துலக்கிய படி குழாயடியை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

காரணமில்லாமலே அவனுக்கு வீட்டு நினைவு வந்தது. அங்கென்றால் குளிப்பதற்கும் முகம் கழுவுவதற்கும் குழாயடிக்கு நடக்க வேண்டியிருக்காது. அதிகாலையிலேயே குசினிக்குள் பாத்திரங்கள் கடகடக்கும். சுமதி எழுந்து கிணற்றில் நீரள்ளிப் பாத்திரங்கள் கழுவித் தேநீருடன் வந்து “எழும்புங்கோ அண்ணை தேத்தண்ணி ஆறப்போகுது” என்ற, பள்ளி எழுச்சியுடன் அவன் முன்னால் காத்து நிற்பாள். அவள் முகத்தில் விழிக்காவிட்டால் அவனுக்குப் பொழுது ஓடாது. அவள் கையால் தேநீர் வாங்கிக் குடித்தபின்பு தான் அவனுடைய கருமங்கள் எல்லாம் நிறைவேற்றுவான். வாளி வாளியாய் நீரை அள்ளிச் சொரிவதில், அந்த நீரின் குளிர்ச்சியில் ஊறிப் போவதில் அவனுக்கு ஒரு சுகம். அவன் வீட்டை நினைத்துப் பெருமூச்சு விட்டுத் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டான்.

அந்த அதிகாலையிலும் குழாயடி கலகலப்பா யிருந்தது. பெண்கள் சிலர் வம்பளந்து கொண்டே பாத்திரங் களில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அவன் வந்ததையோ அங்கே காத்து நிற்பதையோ அவர்கள் கண்ட தாகத் தெரியவில்லை. ஊர்க்கதைகள் தாராளமாக அடிபட்டுக் கொண்டிருந்த அவர்களது பேச்சில் தன் பெயரும் இடம் பெற்றதை உணர்ந்து அவன் திடுக்கிட்டான்.

“ஏம்மரகதம் ஒம் மருமகளோட அந்த ரமணியோட புருசன் தொடர்பாமே, லயம் முழுக்கக் கதையாக் கிடக்கு. நீ அவள வேலுவுக்குக் கட்டிக்குடுக்கப் போறன் எண்டு சொல்லித் திரியிறாய்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதையேண்டி கேக்கிறாய், நான் எங்க ஊட்டுக் காரரிட்டச் சொல்லி நாளும் பாத்து வெச்சிருக்க அவள் வேலுவ வேணாமெண்டு போட்டு அந்த வாத்தி பின்னால திரியிறாளாம். படிப்பிக்க வந்து ஒருத்திய மயக்கிப் புடிச்சவன் இப்ப இன்னொருத்தியில கைபோடப் பாக்கிறான். விடுவனாடி நான். அவள ஸ்கூளுக்குப் போகாம நிப்பாட்டிப் போட்டன்."

முரளியின் நெஞ்சில் இடிவிழுந்தாற் போலிருந்தது. "கமலியைப் பாடசாலையால் விலக்கிவிட்டாளா? இந்த அக் கிரமங்களுக்கு விடிவே இல்லையா?" தன் மீது அபாண்டமாய்ப் பழி சுமத்தப்படுகிறது என்பதை விட அந்த அப்பாவிப் பெண்ணுக்காகவே அவன் அதிகமாய் இரங்கினான். அவளுடைய பிரகாசமான எதிர்காலம் பாழாக்கப்படுகிறதே என்று கலங்கிப்போய் நிற்கையில் அந்தப் பெண்கள் அவனைக் கண்டு பரிகாசமாய், வன்மமாய் ஏதேதோ கதைத்து இறுதியில் "இப்பிடியான ஆளுங்களை ஊரைவிட்டே விரட்டியடிக் கோணும்..." என்று முற்றுப்புள்ளி வைத்துச் செல்வதை அவன் கண்ணெதிரில் கண்டும் மௌனியாய் நின்றான்.

சற்று நிதானத்துக்கு வந்தபின் தீயென நெஞ்சைத் தகிக்கும் நினைவுகளை ஆற்றுகிறாற் போல அந்தக் குழாய் நீரில் குளித்து முடித்துவிட்டுத் தன்னுடைய அறையை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

கமலி பாடசாலைக்கு வருவது நின்று போய் நாட்கள் பல கழிந்துவிட்டன. வேலுவை அவளுக்குக் கட்டிவைக்க ஏற்பாடுகள் நடப்பதாகவும் அவள் வேண்டாமென மறுத்து அடம் பிடிப்பதாகவும் அதன் காரணமாய் அவளுடைய அத்தை அவளைக் கொடுமைப்படுத்துவதாகவும் சில மாணவிகள் மூலம் அறிந்து கொண்டான் முரளி. அவள் மறுக்க மறுக்க வேலுவின் ஆத்திரம் முரளியின் மீதே திரும்பிக் கொண்டிருந்தது. எதிர்ப் படுகிற இடங்களிலெல்லாம் அவனுடைய நண்பர்கள் முரளியுடன் வார்த்தைகளால் மோதிக் கொண்டேயிருந்தார்கள். அது போதாதென்று கமலியின் அத்தை வேறு லயம் முழுக்க அவனைப் பற்றி இழிவுபடுத்திப் பேசிக்கொண்டேயிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை விட்டு மிகவும் களைத்துப் போனவனாய் வீடு திரும்பிக் கொண்டிருந்தான் முரளி. காலையில் எதுவும் சாப்பிடாமல் போனதால் பசி அவனை வாட்டிக் கொண்டிருந்தது. அந்தப் பசியையும் விட மனிதிலே புரளும் நினைவுகள் தான் அவனுக்கு அதிக களைப்பைக் கொடுத்துக் கொண்டிருந்தன.

மனைவியின் கைச்சமையலைச் சாப்பிட்டு விட்டு எல்லா நினைவுகளையும் உதறிவிட்டுச் சற்று நேரம் தூங்கி எழ வேண்டும் போலிருந்தது. தூங்க வேண்டும் என்ற நினைவு எழுந்ததும் கால்கள் வேகமாக இயங்கத் தொடங்கின. தூக்கம் தன்னுடைய மனச்சுமையிலிருந்து சிறு பொழுதாவது தன்னை விடுவிக்கும் என நினைத்தான் அவன்.

ஆனால் அந்த நினைப்பிலும் இடி விழுந்தாற் போலிருந் தது. அவனுடைய லயப்பக்கமாய் கேட்டுக் கொண்டிருந்த இரைச்சலிலிருந்து ஏதோ விபரீதம் நடந்து கொண்டிருப்பதை உணர்ந்து கொண்ட முரளி உடலாலும் மனதாலும் மேலும் தளர்ந்து போனான். தானில்லாத நேரம் பார்த்து ரமணியுடன் யாரோ பிரச்சினைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது அவனுக்குப் புரிந்தது.

காலையில் அவன் பாடசாலை புறப்படுகையில் கூடப் பக்கத்து அறைக்காரியுடன் ரமணி ஏதோ தர்க்கப்பட்டுக் கொண்டிருந்தது நினைவுக்கு வந்தது. மனைவியை அதட்டுவது போல "ஏன் ரமணி, விடிஞ்செழும்பினால் இதே வேலையாய்ப் போயிற்றுது. இப்ப என்னத்துக்கு அவங்களோட வாயைக் குடுத்துக் கொண்டு நிக்கிறாய்? என்று கேட்டதற்கு "போன மாதம் குடுத்த பணத்தத் தரச் சொல்லிக் கேட்டால் சண்டைக்கு வாறாள். நான் கடன் குடுத்தவள் வாயை மூடிக்கிட்டிருக்கவா?" என்று அவள் கேட்டதும், தான் சலிப்போடு புறப்பட்டுப் போனதும் நினைவுக்கு வந்தது. இப்போது நடப்பது அதன் தொடர்ச்சியோ என்று எண்ணிக் கொண்டு போனவனை ரமணியின் அழுகைக் குரல் வரவேற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரளியின் ஊகம் பிழைக்கவில்லை. அறை வாசலில் பக்கத்து லயத்தில் குடியிருக்கும் அலமேலு நின்று வசை புராணம் பாடிக் கொண்டிருந்தாள். அவளைச் சுற்றி நான்கைந்து பெண்களும் குழந்தைகளுமாய் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றிருந்தனர். அறையினுள்ளே முழங்கால்களைக் கட்டிக் கொண்டு தலைகவிழ்ந்து விம்மிக் கொண்டிருந்தாள் ரமணி, மனைவியின் இந்த நிலையைப் பார்த்ததும் முரளியால் ஆத்திரத்தை அடக்க முடியவில்லை. என்னதான் நடக்கிற தென்று பார்ப்போம் என நினைத்துக் கொண்டு வெளியே வந்தான். அவனைக் கண்டதும் அலமேலு மேலும் உஷா ரானாள். "பொண்டாட்டிய அடக்கத் தெரியாதவனுகளெல்லாம் என்னத்துக்கு ஆம்பிளைண்ணு இருக்கோணும். வாத்தியாரு பொண்டாட்டின்னு அவளுக்குப் பெரிய எண்ணம், அவரு ஆடுற ஆட்டத்தால சந்தி சிரிச்சிக்கிட்டிருக்கு...."

அவளுடைய வார்த்தைகள் அவனைக் குத்திக் கிழித்தன. அந்த நிலையிலும் முரளி சற்றுப் பொறுமையைக் கடைப்பிடித்தான். "நீங்க ஏன் இப்பிடிச் சத்தம் போட்டுக் கொண்டு ஊரை அழைக்கிறியள்? என்ன குற்றம் செய்ததுக்காக அவளையும் என்னையும் இப்பிடி வாயில வந்தமாதிரிக் கதைக்கிறியள்?" என்று அமைதியாகக் கேட்டான். "ம்க்கும் .... ஒண்டும் தெரியாத மாதிரி நாடகம் நடிக்கிறாரு. கடன்காசக் குடுக்கலைன்னு ஆட்டுக் குட்டிய அவுத்துட்டு எந்தோட்டத்த அழிக்கச் சொல்லி பொண்டாட்டிக்குச் சொல்லிக்குடுத்துட்டுப் போனவரு இப்பவந்து என்ன நடந்திச்சின்னு கேக்கிறாரு"

முரளியால் அதற்கு மேலும் தாங்க முடியவில்லை, "சீ, வாயமூடுங்க. கதைக்கிறதெண்டால் அதுக்கும் ஒரு எல்லை யிருக்கு. இப்பிடி அநியாயமாய்ப் பழிசுமத்திற உங்களுக்கு மூளையெண்டு ஒண்டு இருக்குதோ இல்லையோ தெரியல்ல." என்று தன்னுடைய சலிப்பை வெளியிட்டான். "அம்மாடி..... உனக்கும் உம் பொண்டாட்டிக்கும் தான் பெரிய மூளையிருக்கு. எங்களுக்குக் களி மண்ணுதான் இருக்கு" என்று இன்னும் ஏதோ பேச ஆரம்பித்தாள் அலமேலு. அதற்கிடையில் ரமணி ஓடிவந்து முரளியை உள்ளே இழுத்துச் சென்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேணாம் அத்தான், அந்த மூளை கெட்டவளோட ஒண்ணும் பேசாதீங்க. ஒண்ணுந் தெரியாத ஆட்டுக்குட்டியோட கால ஒடச்சவள் உங்களுக்கும் கைநீட்டுவாள். வாங்க உள்ள" அவர்கள் உள்ளே சென்ற பின்பும் அலமேலுவிடமிருந்து அசிங்கமான வார்த்தைகள் விஷ அம்புகளாய்ப் புறப்பட்டு வந்து கொண்டிருந்தன. தாங்கமாட்டாத துயரத்தோடு கட்டிலிற் குப்புற விழுந்தான் முரளி. ரமணியின் கைகள் ஆதரவுடன் அவன் முதுகு, தோள்கள், தலை என ஊர்ந்து கொண்டிருக்க அவளது கண்ணீர்த்துளிகள் அவன் முதுகில் சூடாய் விழுந்து சிதறிக் கொண்டிருந்தன.

காலொடிந்த ஆட்டுக்குட்டி கொல்லைப் பக்கமாய் அனுங்குவது கேட்டது. அறையினுள்ளே அவனுடைய பெருமூச்சு மட்டும் இடையிடையே கேட்டுக்கொண்டிருந்தது. அவன் ஏதாவது பேசுவான் எனக் காத்துக்கிடந்த ரமணி அவனுடைய மௌனத்தைச் சகிக்க மாட்டாமல் அவன் காதருகே குனிந்து "அத்தான்" என விம்மினாள். அவனிட மிருந்து எதுவிதமான பதிலும் வரவில்லை. அவள் மறுபடியும் அவன் தோளைப் பிடித்து அழுத்தி "என்னாலதானே அத்தான், என்ன நீங்க கட்டிக்கிட்டதால தானே இவங்கட வாயால பேச்சுக் கேக்க வேண்டியாயிருச்சி... நீங்க என்ன விரும்பியிருக்கவே கூடாது." என்று விம்மினாள்.

திடீரென்று அவள் கைகளை உதறிவிட்டு எழுந்தான் முரளி. "இன்னுமொரு தடவை இப்பிடிச் சொன்னியோ, எனக்குப் பொல்லாத கோபம் வரும். தெரியுமா? அதுக்கும் இதுக்கும் ஏன் முடிச்சுப் போடப்பாக்கிறாய்?" என்று ஆத்திரப்பட்டவன் சற்றுத் தணிந்து "ரமணி உனக்கு எத்தினை தடவையள் சொல்லி யிருக்கிறன். இப்பிடியானவங்களோட தொடர்பு வைச்சுச் சண்டைய வலிய வாங்க வேண்டாமெண்டு. என்ர சொல்லுக்கு மதிப்புக் குடுத்திருந்தால் ஏன் இப்பிடியெல்லாம் அசிங்கப்பட வேண்டிவந்திருக்கும்?" என்று கேட்டான், அவள் பரிதாபமாக அவன் முகத்தைப் பார்த்தாள். "நான் சண்டைக்குப் போனன் எண்டா நினைக்கிறீங்க? எப்பவோ குடுத்த பணத்த திருப்பித் தரல்லியேண்ணு காலையில கேட்டதுக்கு அவ சண்டைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தா. நா இவவோட சண்டை புடிக்க வேணாமேண்ணு பேசாம விட்டுட்டேன்" "பின்னே எப்பிடிச் சண்டை நடந்தது இப்ப?" "காலையில ஆட்டுக்குட்டியக் கட்டிவைச்சிட்டுத் தண்ணி எடுக்கப் போயிருந்தன். அதுபாட்டுக்கு கயித்த அறுத்துக்கிட்டு அவ கொல்லைப் பக்கம் நுழைஞ்சி எதையோ கடிச்சிச்சாம். அதுக்குப் போயி ஆட்டுக்குட்டிய அடிஅடின்னு அடிச்சிக் கால ஒடச்சிப்போட்டா. நான் ஏன்னு கேக்கக் கூடாதா?"

ஒரு சின்னக் குழந்தையின் ஆற்றாமையோடு தன்னிடம் நியாயம் கேட்கும் மனைவியை வாரி அணைத்தெடுத்தான் முரளி. "பசிக்கலையா அத்தான்? காலையில கூட சாப்பிடாமப் போனீங்க". அவன் பதில் சொல்வற்கிடையில் காலொடிந்த ஆட்டுக்குட்டி, "ம்மே....ஏ..." என்று "கவனிப்பாரற்று நான் இங்கே கிடக்கிறேன்" என்பது போலக் கதறியது. மனைவியை விட்டு விட்டுக் கொல்லைப் பக்கம் ஓடினான் முரளி. பின்னங்கால் ஒன்றி லிருந்து இரத்தம் வடிய எழுந்து நிற்க முடியாமல் சுவரோர நிழலில் கிடந்து அலறியது அந்த ஆட்டுக்குட்டி. எந்த வேளையிலும் கண்ணீர் வடித்தறியாத முரளி அன்று அந்த ஆட்டுக்குட்டியைப் பார்த்ததும் கண்கலங்கினான்.

அவன் அந்த ஆட்டுக் குட்டிக்காகத்தான் கண் கலங் கினானா, அல்லது வாயில்லாத அந்த ஜீவனை மனிதர் மேல் கொண்ட கோபத்துக்காக அடித்து வதைத்துப் பழிவாங்கிய ஆறறிவு ஜீவன்களுக்காக இரங்கிக் கண் கலங்கினானா என்பதை ரமணியால் அறிந்துகொள்ள முடியவில்லை.

"ஈவிரக்கமில்லாத சனங்க. எப்பவுமே இவங்க இப்பிடித் தான். கோழியோ, நாயோ, பூனையோ எல்லாத்திலையுமே மனிசரோட கோபத்தைக் காமிக்கிறது தான் இவங்களோட பழக்கம்" என்றாள் ரமணி. ஆட்டுக்குட்டியை மெதுவாய்த் தடவிக் கொடுத்துக் காயம்பட்ட இடத்தைத் தேடிக் கொண்டிருந்த முரளி அவளை நிமிர்ந்து பார்த்தான். "உங்கட சமூகத்தில் மட்டும் தான் இந்தப் பழக்கம் எண்டு நினைக்காதை ரமணி. எல்லா மனுசரிட்டையும் இது ஒரு கொடிய வியாதியாப் பரவியிருக்குது. மனுசரோட கோபிச்சுக் கொண்டு அவனவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டைக்கட்டி அடிக்கிறதும் கோழியையும் ஆட்டையும் அடிச்சுக் கொண்டு சாப்பிடுறதும் எல்லாருக்கும் பழக்கமாப் போச்சுது."

கால் காயத்தைக் கண்டு பிடித்துப் பச்சிலைகளையும் பட்டையையும் தட்டிவைத்துக் கட்டி அதனை மெதுவாகத் தூக்கிக் கொண்டுபோய் முன்வாசலில் மரநிழலின் கீழ் கிடத்தியவன் அதற்குக் குழையும் ஓடித்து வந்து போட்டான். அப்போதுதான் அவனுக்குச் சாப்பாட்டு நினைவு வந்தது. வாளித் தண்ணீரில் முகம் கைகால்களைக் கழுவி வந்து பக்கத் திலேயே ரமணியையும் இருக்கச் சொல்லி இரண்டு வாய் சாப்பிட்டு விட்டு எழுந்தான்.

முரளி பழைய உற்சாகம், மகிழ்ச்சி எல்லாவற்றையும் இழந்து வெகு நாட்களாகியிருந்தன. திரும்பிய பக்கமெல்லாம் ஏதாவதொரு பிரச்சினை அவர்களுக்காகக் காத்துக் கிடந்தது. ஆட்டுக் குட்டியின் கால் ஒடிக்கப்பட்ட அன்றிரவு அலமேலுவின் கணவன் தோட்டத்திலிருந்து திரும்பி வந்து புரிந்த அட்டகாசங் களும் ஆர்ப்பாட்டங்களும் முரளியிடம் பெரியதாக்கத்தை ஏற் படுத்தியிருந்தன. ஆட்டுக்குட்டியின் கால் சற்றுக் குணமாகி அது நொண்டி நொண்டி நடக்கத் தொடங்கியிருந்தது. ஆனால் அவன் மனதில் உண்டான காயம் வரவரப் பெருத்து வேதனையை வளர்த்துக் கொண்டிருந்தது.

பாடசாலையிலும் கூட முரளியால் உற்சாகமாகச் செயற்பட முடியவில்லை. பாடசாலை போகிற வழியிலும் வரும் வழியிலும் யாராவது ஒருவரோ இருவரோ ஒரு கூட்டமோ அவனுக்கு எதிரிகளாய் நின்று குத்தல் கதைகளை வீசுவது வழக்கமாய் ஆகியிருந்தது. இந்தத் தாக்கங்களால், அவை ஏற்படுத்திய ரணங்களால்,அவற்றின் வலியால் அவன் உற்சாக மிழந்து போயிருந்தான். இதன் காரணமாய் கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டும் அவனை நோக்கி வீசப்பட்டுக் கொண்டிருந்தது.

"முரளி நானும் தான் பாக்கிறன், கொஞ்ச நாளா நீங்க நல்லாவே இல்லியே, எதையோ பறிகுடுத்த மாதிரி யோசிச்சுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டிருக்கீங்க.... என்ன நடந்திச்சு?. அவனுடைய முக வாட்டத்தையும் சோர்வையும் கவனித்த சக ஆசிரியரான வேலையாவின் விசாரிப்பு! "ஒண்டுமில்லையே, நான் நல்லாத் தானே இருக்கிறன்" அவன் சமாளிக்கப் பார்க்கிறான். மற்றவர் களிடம் தன் வேதனைகளைக் கொட்டி அவர்களின் அனுதா பத்தைப் பெற்று..... பிறகு அந்த அனுதாபமே பரிகசிப்பாய் மாறி.... வேண்டாம். அவன் ஒரு வைராக்கியத்துடன் மறுத்த போதும் அவன் மீது உண்மையான அன்பு கொண்ட, அவன் வேதனைக்கான காரணங்களை ஓரளவு அறிந்து கொண்ட அவர் அவனை விடுவதாக இல்லை. "சொல்லுங்க முரளி,அந்தக் கமலியோட பிரச்சினையா? அவதான் ஸ்கூலுக்கு வாறத நிறுத்திக்கிட்டாளே, இன்னுமேன் அதப்பத்தி யோசிச்சுக் கிட்டிருக்கீங்க? சில சனங்கள் இப்பிடித்தான். நல்ல மனசோட ஆருக்காவது உதவி செய்யப் போனா அதையே தப்பாய் புரிஞ்சிக்கிட்டு வம்பு பேசிக்கிட்டிருப்பாங்க." அவர் அவனைத் தேற்றும் பாவனையில் கூறிய வார்த்தைகள் அவன் வேதனைக்கு ஒத்தடம் கொடுத்தாற் போலிருந்தது.

அவன் அதன் பின் தன் மனதிலிருந்த சுமைகள் அனைத்தையும் அவரிடம் கொட்டித்தீர்த்தான். அந்தச் சூழலில் தான் வாழ்வதில் இருக்கிற கஷ்டங்களை, தொட்டதற்கெல்லாம் சண்டையிலே வந்து நிற்கிற பக்கத்து லயத்துப் பெண்களின் அறியாமைகளை அவர்களோடு சேர்ந்து தன் மனைவியும் அவர்களைப் போலவே ஆகிப் போவாளோ என்றுதான் அஞ்சுவதை......

எல்லாவற்றையும் அனுதாபத்துடன் கேட்டுக் கொண் டிருந்த அந்த ஆசிரியர் தன் அனுபவங்களைக் கொண்டு சில அறிவுரைகளை வழங்கியபின் இறுதியாக ஒரு செய்தியையும் காதோடு சென்னார். "முரளி நீங்க ஸ்கூலில கடமையைச் சரியாச் செய்யிறல்லை எண்ணும் உங்களை இடமாற்றம் செய்யோனும்னும் ஒரு கூட்டம் மேலிடத்துக்கு அறிவிக்கப் போறாதா கதை அடிபட்டிச்சி. எதுக்கும் ஜாக்கிரதையா நடந்துக் குங்க...." முரளி இந்தச் செய்தியால் அவ்வளவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிர்சியடையவில்லை. ஏற்கனவே சாடை மாடையாய் அறிந்து கொண்ட விடயம் தான் அது.

"நான் கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்றால் அதற்கு யார் காரணம்? நியமனம் பெற்று வந்த நாளிலிருந்து திறமைசாலியெனப் பெயரெடுத்த நான் இப்போது என் கடமையிலிருந்து தவறிக் கொண்டிருக்கிறேன் என்றால் அதற்கு என்னைச் சுற்றி நடக்கிற சதிவலைதானே காரணம். எவனையுமே அவனவன் பாட்டில் விட்டுவிட்டுத் தங்களுடைய கடமைகளை மட்டும் ஒழுங்காகச் செய்து கொண்டு வாழ்கின்ற மனிதர்கள், மற்றவரின் வாழ்க்கையில் அநாவசியமாய்த் தலை யிட்டுக் குழப்பத் தெரியாத மனிதர்கள் எங்கேயும் இல்லையா?" அவன் எல்லாவற்றையும் மனதிலேயே சுமந்து கொண்டு பாடசாலைக்குப் போய் வந்து கொண்டிருந்தான். இடையில் கமலியை அந்த வேலுவுக்குக் கட்டாயப்படுத்திக் கட்டிவைத்து விட்டதாக ஒரு செய்தியும் அவன் காதில் வந்து விழுந்தது. ஒரு அப்பாவிப் பெண்ணின் சிறந்த எதிர்காலம் பெற்றோர் இல்லை யென்ற காரணத்தால், தமக்குச் சுமையாகிப் போய்விட்டாளே என்கிற வெறுப்புணர்வால் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டதை அறிந்து அவனால் வேதனைப் படத்தான் முடிந்தது.

அறிவுச் சுடர்விடும் அந்த விழிகள், வாய் திறந்தால் முத்தாக உதிரும் புத்திசாலித்தனமான வார்த்தைகள், எதிர் காலத்தைப் பற்றி மனதிலே சுமந்து கொண்டு திரிந்த கனவுகள்.... எல்லாவற்றுக்கும் மேலாய் அந்தப் பூமாலை போன்ற மென்னுடல் முரட்டு வேலுவின் ஆளுகைக்குள். அந்தப் பூமாலை கிடைத்து விட்ட மகிழ்ச்சியில் அவனுடைய கவனம் இனி முரளியிடமிருந்து விடுபட்டுவிடும்.

"பாவம் அத்தான் அந்தக் கமலி. அந்த வேலுவுக்கு அவளக் கட்டி வெச்சிட்டாங்களாம்" முரளிக்குச் சாப்பாடு பரிமாறிக் கொண்டிருந்த ரமணியின் குரல் கரகரத்தது, "நாம அனுதாபப்பட்டு என்ன செய்ய முடியும்? எல்லாம் அவங்க தலைவிதி" சோற்றைப் பிசைந்த கைவிரல்கள் பிசைந்த படியே இருக்கச் சிந்தனையில் மூழ்கிப் போயிருந்த முரளி சற்றுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமதித்து "உனக்கொரு செய்தி தெரியுமா ரமணி?" என்று கேட்டான். "தெரியல்லையே, என்ன செய்தி" "என்னை இங்கை யிருந்து துரத்திவிட முயற்சியள் நடக்குது" அதைக் கேட்டு அவள் அதிர்ச்சியடையவில்லை "தெருக்கதைதானே அத்தான். அண்டைக்கு இந்த அலமேலுவோட புருஷன் கூட ஏங்காது கேக்க இவனையெல்லாம் தோட்டத்தில இருந்து அடிச்சுக் கலைக்கோணும் அப்பிடீன்னு தன்னோட கூட்டாளிங்களோட பேசிக்கிட்டிருந்ததைக் கேட்டன். விட்டுத் தள்ளுங்க அத்தான் இவங்களால முடியுமா அதுக்கு?"

அவளுடைய அந்த விட்டுத் தள்ளுகிற மனப்பான்மை அங்கேயும் பிரதிபலித்தது. எழுந்து கைகளைக் கழுவிக் கொண்டே "இனியும் என்னால இதையெல்லாம் விட்டுத்தள்ள முடியாது ரமணி" என்று சொல்லிவிட்டுப் படுக்கையில் வந்து விழுந்தான். "அப்பிடீன்னா என்ன செய்யப்போறீங்க?" என்று கேட்டுக் கொண்டே அவன் பின்னால் வந்தாள் ரமணி. அவன் பதில் எதுவும் சொல்லவில்லை. அவனுடைய மனதிலே ஒரு திட்டம் உருவாகிக் கொண்டிருந்தது.

"ஏன் நான் இந்த மாத்தளையை விட்டு என்னுடைய ஊருக்குப் போகக் கூடாது? என்னுடைய சுயநலத்துக்காகக் கைவிட்டுவந்த அம்மா, அப்பா, தங்கைகள்... அடித்தாலும் உதைத்தாலும், அவர்களுடன் வாழ்வதில் ஏன் நான் திருப்தி யடையக்கூடாது" இந்த நினைவே அவனுக்கு ஒரு சுகானுப வத்தைக் கொடுத்தது. அந்த நினைவு விரிந்து விரிந்து யாழ்ப்பாணக் கிராமத்து மண்ணை முத்தமிடத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

**– கோகிலா மகேந்திரன்**

புகைவண்டியின் கண்ணாடிச் சாளரத்தை மெதுவாக உயர்த்தி வெளியே தலையை நீட்டிப் பார்த்தான் முரளி. மழைத்துளி. குழந்தைகளை விரைவில் பிரசவித்துவிடப் போகின்ற வேதனையில் குமுறி வெடித்து, இருண்டு கனத்து கண்நிறைய நீர்முட்டி நின்றாள் மேகத்தாய். அவனுடைய உள்ளமும் அப்படித்தான்....

"துன்பம் வந்து விடுமோ என்ற எண்ணமே அதிக துன்பத்தை உண்டாக்குவது" என்று எங்கோ எப்போதோ வாசித்ததன் சரியான அர்த்தம் இப்போது அவனுக்குத் துல்லிய மாகத் தெரிந்தது.

மலையகத்திலே அவன் மனதைப் பல தடவை துளைத்துப் பிழிந்து எடுத்துவிட்டார்கள் என்றால், யாழ்ப்பாணத் திலாவது....

யாழ்ப்பாணத்தில் கொஞ்சம் அமைதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் அவன் துணிந்து ஏதோ ஒரு வேகத்தில் ரமணியையும் இழுத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டான். அவளும் கூட முன்பின் தெரியாத ஒரு இடத்திற்கு அவனை நம்பி - அவனை மட்டும் முற்றாக நம்பி - எதிர்த்து ஒரு கேள்வி கூடக் கேட்காமல் புறப்பட்டுவிட்டாள்.

அவளை அவன் ஒருமுறை நிமிர்ந்து பார்த்தான். முகத்தில் எந்தவிதச் சலனமுமின்றி உறங்கிப் போயிருந்தாள் அவள். கவலையற்ற அந்தத் தூக்கம், அவன்மீது அவள் கொண்ட நம்பிக்கையின் அடையாளச் சின்னம். அவனால் தூங்க முடியவில்லை. எழுந்து நின்று சோம்பல் முறித்துக் கொண்டவனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஹலோ முரளி, யாழ்ப்பாணம் போறீர் போலை இருக்கு” என்ற குரல் திரும்பிப் பார்க்க வைத்தது.

சிறிய வகுப்பில் அவனுக்குத் தமிழ் கற்பித்த செல்லையா உபாத்தியாயர். அவர் நீண்ட நேரமாக அவனையும் ரமணியையும் கவனித்து வருகிறார் என்பது அவரது அடுத்த கேள்வியில் தெரிந்தது.

“வீட்டிலை அம்மாக்குச் சுகமில்லை என்று கேள்விப் பட்டன். அம்மாக்கு உதவிக்கு ஒரு “சேவன்ற் கேர்ல்” கூட்டிக் கொண்டு போறீர் போலை....”

அவனது இரத்தமெல்லாம் திடீரென்று உறைந்துவிட்டது போன்றதொரு உணர்வில் சில விநாடிகள் கழிந்துபோக....

“இல்லை இல்லை.... அது என்னுடைய மிஸிஸ்...” என்று அவசரமாய்க் குறுக்கிடுகிறான்.

“ஓ... அப்படியா... எப்ப கலியாணம் செய்தனீர்... எனக்குத் தெரியாது...” என்று திகைத்தவர் ரமணியை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தார்.

முரளியின் உள்ளத்தில் ஏற்பட்ட பாரம் திடீரென்று அதிகரித்துவிட்டது போல் அவன் உணர்ந்தான்.

சே! இப்போது என்னதான் நடந்துவிட்டது? மனிதன் இவ்வுலகில் வாழ மட்டும் பிறக்கவில்லை. வாழ்ந்து காட்டவும் பிறந்தவன். ஆம்! நான் வாழ்ந்து காட்ட வேண்டும்.

அவனது சிந்தனைக் கோலங்களை “ஸ்டேசன் வந்திட்டு தாங்க....?” என்று கேட்டுக் கலைத்தாள் ரமணி. இரண்டு கைகளையும் இழுக்கும் பெட்டிகளுடன் மனதின் சுமையையும் தாங்கிக் கொண்டு வீட்டை நோக்கி நடக்கையில் “டாண்... டாண்...ண்....ண்” என்று நிதானித்து ஒலிக்கிற முருகன் கோயில் மணி ஓசையில் ஒரு கணம் லயித்து விடுகிறது மனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது யார்? விடிந்தும் விடியாத இந்த நேரத்தில் "விறுக்" என்று சைக்கிளை ஓட்டிக்கொண்டு? ஓ.... சங்கர்.... சங்கர்தான். அவனைக் காணாத மாதிரிப் போய்விட்டால்.... கரைச்சலில்லை. அவனா விடுகிறவன்?

"ஓம் மச்சான் முரளி! எப்படியடா இருக்கிறாய்? எல்லாம் கேள்விப் பட்டனான்".

ஒரு கணம் ரமணியைத் தலையிலிருந்து கால்வரை நன்றாகப் பார்த்தவன், கொடுப்பில் சிரித்துக் கொண்டு,

"களைச்சுப்போய் வாறாய். எல்லாம் ஆறுதலாக் கதைப்பம்" என்று கூறிவிட்டுச் சைக்கிளை மிதிக்கிறான்.

"உங்க வீட்டாக்களெல்லாம் என்னோட கதைப்பாங்க தானே!" வீட்டை அண்மித்த போதுதான் ஒரு நெருடல் ரமணிக்கு.

"யார் கதைச்சாலென்ன? கதைக்காட்டி என்ன? நான் இருக்கிறன்தானே, பிறகேன் பயப்படுறாய்..." ரமணியை ஆறுதல் படுத்தியவன், தன்னைத்தானே ஆறுதல்படுத்திக் கொள்ளத் தெரியாத ஒரு சுமையுடன் படலையைத் திறக்கிறான்.

முன்வீட்டில் எட்டிப் பார்த்த உபாத்தியாயர் மனைவி "இஞ்சை பாருங்கோவன் முன் வீட்டு முரளி அந்த தோட்டக் காரப் பெட்டையைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறான். ஏன் அவனுக்கு இப்பிடிக் குறுக்காலை புத்தி போனதோ?" என்று சத்தமாக உபாத்தியாயரை அழைப்பது முரளியின் செவிப்பறை மென்சவ்வை இடிபோலத் தாக்குகிறது.

முரளியின் தலைக்கறுப்புத் தூரத்தில் தெரிகிற போதே துள்ளிக் கொண்டு ஓடிவந்து சூட்கேஸை வாங்கிக் கொண்டு "எனக்கு என்னண்ணை கொணந்தனீங்கள்?" என்று கேட்கிற கௌரியை இன்று காணவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குசினிக்குள் இருந்து மெதுவாகத் தலையை நீட்டிப் பார்த்த சுமதி, முரளியின் பின்னால் தயங்கிக் கொண்டிருக்கிற ரமணியைக் கண்டுவிட்டு "எனக்கென்ன?" என்பதுபோல் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் தன் வேலைகளில் ஆழ்ந்துவிட்டாள்.

பெட்டிகளை விறாந்தையில் வைத்துவிட்டு ஆச்சி படுத்திருந்த அறையினுள் மெதுவாக நுழைந்த முரளியைப் பின் தொடர்ந்தாள் ரமணி.

"ஆச்சி இப்ப வருத்தமெல்லாம் எப்பிடியிருக்கு?..."

வாயில் வர மறுத்த வார்த்தைகளை ஒவ்வொன்றாகத் தேடிக் கோத்தெடுப்பதற்குப் பல நிமிடங்கள் எடுக்கின்றன அவனுக்கு.

ஒரு விநாடி திடுக்குற்றுத் திரும்பி எழுந்து உட்கார்ந்த பார்வதியின் பார்வை மூலையில் சென்று ரமணியில் நிலைத்து மீளும்போது... வார்த்தைகளை முந்திக்கொண்டு கண்ணீர் வழிந்தோடுகிறது அத்தாய்க்கு!

"என்ரை வயித்திலை பாலை வாரடா எண்டு சொல்லிவிட்டன்.... நஞ்சை வாத்துப் போட்டு வந்து நிக்கிறியேடா..."

"ஆச்சி...." ஏதோ சொல்ல நினைத்துப் புறப்பட்டவன் இந்தச் சமயத்தில் தான் சொல்லப் போகிற எந்த நியாயமும் நியாயமாக ஏற்றுக் கொள்ளப்படாது இங்கே என்பதைத் தெரிந்தவனாய் "ஆஸ்பத்திரிக்குக் காட்டினனீங்களே...." என்று பழைய விடயத்திற்கே திரும்புகிறான்.

"ஆர் உங்கை கதைக்கிறது? ஓ.... துரை வந்திட்டாரோ?.." இடியாய் முழங்குகிறது அப்புவின் குரல் வெளியே!

"அப்பு! நீங்கள் விளங்காமல் கோவிக்கிறியள்..." தான் அப்புவிடம் சொல்ல வேண்டும் என்று மனதில் பலமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருப்போட்டுப் பார்த்த பதிலை, அவன் தயங்கிச் சொல்ல முதலே,

"எனக்கு ஒரு விளக்கமுந் தேவையில்லை. நீ எக் கேடாவது கெட்டுப்போ!... உன்ரை காயிதம் வந்த அண்டைக்கே... நீ செத்துப்போனாய் எண்டு தலை முழுகிட்டன்...."

அவனிடமிருந்து எந்தப் பதிலையும் எதிர்பார்க்காமல் மருமகள் கறுப்பா, சிவப்பா என்று நிமிர்ந்து கூடப் பார்க்காமல் முற்றத்தில் கிடந்த மண்வெட்டியைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு வயலை நோக்கி விரைகிறார் நமசிவாயத் தார்.

உள்ளே போய், ரமணியை உடுப்பு மாற்றச் செய்து, தானும் சாரத்தைக் கட்டிக்கொண்டு முற்றத்துக்கு வந்தான் முரளி.

"ஏன் அண்ணை.... தண்ணி வேணுமே... ருத்பேஸ்ட் வேணுமே..." என்று இதற்குள் பத்துமுறை கேட்டுவிடும் கௌரி, வாசற்படியில் அமர்ந்து முழங்காலில் ஊன்றிய கைகளில் முகத்தைப் பாரம் கொடுத்தபடி எங்கோ ஒரு திசையில் வெறித்துக் கொண்டிருந்தாள்.

"குதிர் போலை இரண்டு குமர் உன்னை நம்பித்தான் நிக்குது. அதுகளை ஒரு நல்ல வழியிலை அனுப்பிறது உன்ரை பொறுப்பு..." என்று அவன் மாத்தளைக்குச் செல்லும் போது அப்பு சொல்லி அனுப்பியதை மறந்து போய்விட்டவனுக்கு இதுதான் தகுந்த தண்டனை என்று எல்லாருமாய்ச் சேர்ந்து அவனை வதைக்கிறார்களா? அந்தப் பொறுப்பை அவன் மறந்து விட்டானா? இல்லை.. இல்லை... அவன் மறக்கவில்லை... இப்போது கூட அந்தப் பாசப் பின்னலில் இருந்து தன்னை முற்றாக விடுவித்துக்கொள்ள முடியாமல்தானே அவன் ஓடோடி வந்திருக்கிறான்! ஏன் ஒருவரும் அவனைப் புரிந்து கொள்கிறார் களில்லை....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூட்கேசைத் திறந்து கௌரிக்கென வாங்கிக் கொண்டு வந்த பொலியெஸ்டர் துணியை எடுத்துக்கொண்டு அவளைக் கூப்பிடும்போது என்னதான் முயன்றும் பழைய உற்சாகம் வரவில்லை.

துணியை வாங்கிக் கொண்டு, "என்ரை ஆசை அண்ணை" என்று அவன் கைகளைப் பிடித்துக் கூறிச் சிரித்து விட்டு அதைக் கொண்டோடிப்போய் எல்லாரிடமும் காட்டி மகிழும் கௌரி.... இன்று அதை வாங்கி அலுமாரியில் வைத்துவிட்டு ஒன்றுமே பேசாமல் நழுவப் பார்க்கிறாள். "துணி எப்பிடி இருக்குக் கௌரி?.... ரமணிதான் "செலக்ட் பண்ணினது..." அவளைப் பிடித்து நிறுத்துகிறது அவன் குரல்.

அவள் ரமணியைப் பார்த்து, ஒரு சிறிய முறுவல் முகத்தில் படர "நல்லாயிருக்குது" என்று சொல்லிவிட்டு வெளியேறுகிறாள்.

பயணக் களைப்புத் தீரச் சிறிதுநேரம் படுத்து எழும்பும்படி ரமணியிடம் கூறி அவளுக்குப் படுக்கை ஆயத்தம் செய்துவிட்டு விறாந்தைக்கு வரும்போது... ஆச்சி படுத்திருந்த அறையில் பக்கத்து வீட்டு அன்னம்மா மாமியின் குரல் கணீரென்று கேட்கிறது.

"பார்வதி! இனி உன்ரை குமருகள் கரைசேந்த மாதிரித் தான். ஆர் சம்மந்தம் வைக்கப் போயினம்? தோட்டக்காரப் பெட்டை எண்டால்.... என்ன சாதி, என்ன சமயம் எண்டு ஆருக்குத் தெரியும்....?"

ஆச்சிக்குச் சொல்ல வேண்டிய எல்லாவற்றையும் சொல்லிவிட்டு வெளியில் வந்த அன்னம்மா மாமி முற்றத்தில் முரளி நிற்பதைக் கண்டு முகமெல்லாம் பல்லாக,

"எங்கை தம்பி ஆளைக் காணேல்லை?.... ஒருக்காப் பார்த்திட்டு போவம் எண்டு வந்தனான்" என்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்களெல்லாம் வேடிக்கை பாக்கிறதுக்கும் விமர்சனம் செய்யிறதுக்கும் அவளென்ன..." உதடுவரை முட்டிக்கொண்டு வேகமாய் வெளியேறத் துடித்த சொற்களை மிகவும் கஷ்டப் பட்டு விழுங்கிக் கொண்டவன்,... "அவ பயணக் களைப்பிலை நித்திரையாகிட்டா..." என்று மாத்திரம் சுரத்தின்றிப் பதிலளிக் கிறான். "அப்ப... நான் பேந்து வாறன்..." என்று வெளியேறிய அன்னம்மா மாமி முதல் முன்வீட்டு முத்தர் வரை, அன்று பொழுது சாய முதல் ரமணியை வேடிக்கை பார்க்க வந்தவர்கள் ஏராளம்.

பொழுது விடிய முதல் கோப்பிக் கிண்ணமும் கையுமாகத் திருப்பள்ளி எழுச்சி பாடிக்கொண்டு வந்து துயில் எழுப்புகிற சுமதி, இப்போது முரளியையோ ரமணியையோ எழுப்புவ தில்லை. கௌரியும், ஆச்சியும் நாட்கள் நகர, நகர ரமணியுடன் ஓரிரு வார்த்தைகள் கதைக்கத் தொடங்கிவிட்ட போதிலும், அப்புவைப் போலவே சுமதியிடமும் அந்தப் பிடிவாதம் தொடர்ந்தது.

புறக்கணிப்புகளினால் மனம் நொந்த முரளி இரவு முழுவதும் இருமிக் கொண்டே கிடந்தான்.

"பிள்ளை சுமதி அண்ணைக்கு முட்டைக்கோப்பி அடிச்சுக் குடு பாவம்.. ராத்திரியும் இருமிக் கொண்டு கிடந்தான்..."

நமசிவாயத்தார் இப்படிச் சொல்லவுமில்லை. சுமதி கொண்டு வரவுமில்லை. அப்படி என்னதான் பெரிய ஒரு குற்றமாய் அவன் செய்துவிட்டான்?

யாராவது வாய் திறந்து நாலு வார்த்தை அவனைத் திட்டித் தீர்த்திருந்தாலாவது பரவாயில்லைப் போலிருந்தது. எல்லாரும் மனதுக்குள் குமைந்து, மறுகி... மறுகி அந்தப் புழுக்கம்... வெளியே எறித்த கானலைவிட வலியதாய் அவனை அவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன நமசிவாயம்.. உம்மடை மகனும் இப்பிடிப் போற இடத்திலை குடும்பம் வைச்சிடுவன் எண்டு நாங்கள் கனவிலையும் நினைக்கேல்லை. சீ...ச்...சீ இனி உந்தப் பொம் பிளைப் பிள்ளையளை என்னண்டு கரை சேக்கிறது....?" என்று ஒரு நாள் முன்வீட்டு முத்தர் முழங்கியபோது கூட....

"அவனை நம்பி நான் என்ரை பெட்டையளைப் பெறேல்லைக் காணும். அவளவைக்குக் கஞ்சி ஊத்த எனக்குத் தெரியும். ஓ...." என்று கூறிய அப்புவின் குரலில் கடுமை இல்லை. இருந்திருந்தாலாவது அவனுக்கு ஆறுதலாக இருந் திருக்கும். அதில் தொனித்த அந்த வேதனை, அந்த விரக்தி அந்த வெறுமை ... எல்லாவற்றையும் விட அந்த உதாசீனம்... தண்டனைகள் எல்லாவற்றிலும் மிகக் கொடிய தண்டனை இதுதான்.

பகல் முழுவதும்... எந்தவித உணர்வுகளுமற்ற சடப் பொருள் போல உலாவித்திரிந்த ரமணி இரவில் முரளியின் மார்பில் தலையைப் புதைத்துக்கொண்டு மௌனமாக விம்மு வாள். வாயைத் திறந்து எதுவுமே சொல்லாவிட்டாலும் கூட அந்த மௌனகீதத்தின் அர்த்தங்கள் அவனுக்கு நன்றாகப் புரியும். ஆனாலும் "என்ரை குஞ்சு ரமணி... நான் இருக்கேக்கை நீ ஒண்டுக்கும் கவலைப்படக்குடாதடி..." என்று சொல்லி அவளை மெதுவாக அணைத்துக் கொள்வதைத் தவிர வேறு எந்தவிதமான மாற்றத்தையும் அவனால் செய்ய முடிய வில்லை.

ஆச்சியிடம், அப்புவிடம், சுமதியிடம், கௌரியிடம், ரமணியிடம், தன்னிடம், எல்லோரிடமும் - இந்த உலகத்தில் உள்ள எல்லோரிடமும் - வெறுப்பு வெறுப்பாய் வருகிறது முரளிக்கு. இந்த உலகத்தின் மீதே ஒரு வெறுப்பு. உலகத்தை வெறுக்கலாம். ஆனால் உலகமின்றி வாழ முடியாதே! வாழ்க்கை... சே! என்ன வாழ்க்கை இது...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ ஒன்றை இழந்தால்தான் இன்னொன்றின் சுகத்தைப் பெறலாம் என்று சொல்வார்கள். அவன் எதை இழந்து எதைப் பெற்றான்? எல்லாவற்றையும் இழந்து வேதனையை மாத்திரம் பெற்றுக் கொண்டானா? இல்லை. அவன் இப்படி அடிக்கடி மனம் சோர்ந்துபோய் உட்கார்ந்து விடக்கூடாது. சமுதாயத்தில் ஒரு மாற்றத்தைத் துணிந்து ஏற்படுத்தினோம் என்ற திருப்திக்காக... அந்தப் பெருமைக்காக.. அந்த நிறைவுக்காக... அவன் இதையெல்லாம் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். இந்தக் குடும்பம் என்னதான் எட்டி உதைத்தாலும் அவன் புண்பட்டுப் போய்விடக் கூடாது. அவனுடைய தங்கைகளுக்கு வாழ்வுப் பாதை அமைத்துக் கொடுப்பதில் அவன் தன்னால் முடிந்த பங்கைச் செய்யத்தான் வேண்டும்.

சுமதியின் சமையல் வேலைகளிலும் ஆச்சியைக் கவனிப்பதிலும் வலிந்து போய் உதவி செய்யும்படி ரமணியிடம் கூற வேண்டும். அவன் போராடிப் பார்க்கத்தான் போகிறான். பல திடமான தீர்மானங்களை மனதில் வளர்த்துக் கொண்ட முரளிக்கு அன்றைய இரவு ஆழ்ந்த அமைதியான உறக்கத்தைக் கொடுத்து மகிழ்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

**– அருண் விஜயராணி**

பொழுது விடிந்துவிட்டது. முருகன் ஆலயமணி டாண்... டாண்... என ஒலித்து முரளியை எழும்பும்படி உலுப்பிக் கொண்டிருந்தது. கண்ணை மூடி அந்த இசையினை ஆழ்ந்து அனுபவித்தவனது கண்களில் இருந்து நீர்த்துளிகள் பொல பொலவென உதிர்ந்தன.

மாத்தளையில் வேலை கிடைக்க முன்பு, இந்தக் காலைப் பொழுதை எவ்வளவு இனிமையுடன் அநுபவித்திருக்கிறான். பொலபொலவெனப் புலரும் பொழுதினூடே எழும்பித் தோட்டத்தை வலம்வந்து, பனித்துளியில் குளித்துச் சிலிர்த்துப் பளபளக்கும் இலைகளைத் தடவி, ஒன்றன்பின் ஒன்றாகப் பறக்கும் காகங்கள் வானத்தில் மறையும் வரை பார்வையை நிலைக்கவிட்டு, இன்னும் கூ.....கூ..... எனத் தன் பேடையைச் செல்லமாக அழைக்க ஆரம்பித்து, அதற்குப் பதில் வராமல் போகவே, பதில் தர மாட்டாயா, மாட்டாயா எனக் கோபமாகக் கத்தும் குயிலின் அந்தச் செல்லமான சிணுங்கலை மனம் சிரிக்க ரசித்து - எங்கே போய்விட்டது அந்த உற்சாக மெல்லாம்? வேலை கிடைக்க முன்பு எத்தனை கனவுகள்? ஆசைகள்? அது கிடைத்த பின்பு அதனைத் தொடர்ந்து எத்தனை வேதனைகள்? வாழ்க்கையில் அவனால் மட்டும் ஏன் எதையுமே அனுபவிக்க முடியாமல்....

இவர்கள் எல்லோரும் ஒதுக்கும் அளவுக்கு, அவ்வளவு பெரிய குற்றமா அவன் செய்துவிட்டான்?

போனவருடம் கந்தப்பரின் மகன் வெள்ளைக்காரப் பெட்டை ஒன்றைக் கூட்டிக்கொண்டு வந்தபோது யாராவது ஒருவர் வாய் திறந்தார்களா? பணக்காரன் என்றால் அவன் செய்வது எல்லாம் சரி, கொஞ்சம் வசதி இல்லாவிட்டால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் செய்கின்ற காரியங்கள் எல்லாமே பிழை, பிழையாக.... சே... என்ன மனிதர்கள்!

மனதில் ஆத்திரம் நுரைத்துத் தள்ளியது முரளிக்கு. "ஏன் நான் அவர்களையெல்லாம் நோக வேணும்? என்னுடைய குடும்பத்தினரே என்னை உணர்ந்து கொள்ளாத போது...."

அவன் ரமணியைக் கூட்டிக் கொண்டு வந்த நாளிலிருந்து அப்புவும் சுமதியும் அவனுடன் முகம் கொடுத்துக் கதைப் பதில்லையே!

"டேய்..! ரமணியின் வயசு தானேடா... சுமதிக்கும்... இல்லை ஒன்றிரண்டு அதிகம்! அவளுக்கு வாழ்வு குடுக்க நினைச்சனீ... சுமதியை நினைச்சுப் பாத்தியா முட்டாள்? கலியாணம் யாருக்கு அவசரமா இருந்தது? உனக்கா? அவளுக்கா?"

அப்புவின் ஆவேசமும் கிண்டலும், அந்தக் கண்கள் அவனைப் பார்த்து உமிழும் வெறுப்பும், ரமணியைக் கண்டு விட்டால், வெறுப்புடன் நகரும் கௌரவத் திமிரும்... "அப்பு... நீங்கள் ஆத்திரப்படுறதிலை நியாயம் இருக்கு. ஆனா... எதுக்காக... என்ன சந்தர்ப்பத்திலை அவளைக் கூட்டிக் கொண்டு வந்தன் என்பதை மட்டும் ஏன் யோசிச்சுப்பாக்க மறுக்கிறியள்?"

அவர்தான் தன் வெறுப்பை எல்லாம் கண்களாலேயே கொட்டித் தீர்க்கிறார் என்றால் இந்தச் சுமதி படுத்தும் பாடு! ஒரு பெண்ணால்கூட இன்னொரு பெண்ணின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்றால்....

கௌரியிடமாவது வெற்றி அடைய வேண்டும் என்பதே அவனது மனப்போராட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கள் குடும்பம் ரமணியை முன்னின்று சந்தோஷமாக ஏற்றுக் கொண்டால் ஊரார் ஒரு வார்த்தை மேலே பேசுவார் களா? சமூகம் என்றது யார்? நாங்கள் தானே அந்தச் சமூகம்?"

மனதில் ஏதோ நினைவு வந்தவள் போல் கௌரி சட்டென்று சம்பல் அரைத்துக் கொண்டிருக்கும் ரமணியை நிமிர்ந்து பார்த்தாள்.

"சதா கவலையும் சிந்தனையுமாக... இந்த ரமணிதான் முன்பைவிட எவ்வளவு தூரம் இப்போது மெலிந்துவிட்டாள்! ஏதோ இரண்டு மூன்று தடவை முரளி அண்ணா ரமணியை வெளியில் கூட்டிக்கொண்டு போய்ப்பட்ட அவமானத்தில் இப்போதெல்லாம் அவளை வெளியில் அழைத்துச் செல்வ தில்லை. ஏன் அண்ணா கூட அதிகம் வெளியில் போகாமல் வீட்டில் தானே இருக்கிறார்?"

"கௌரி, உங்கண்ணா, இப்போதெல்லாம் எங்கூடச் சரியாக் கதைக்கிறதேயில்ல. அவரும் கூட என்னைக் கூட்டிட்டு வந்தது தப்புன்னு நினைக்க ஆரம்பிச்சிட்டாரோ....?"

நேற்று முன்னிரவில் கண்ணீர் மல்க ரமணி கலங்கிய போது கௌரிதான் அவளைத் தேற்ற வேண்டியிருந்தது.

"அப்பிடி எல்லாம் மூளையைப் போட்டுக் குழப்பாதேங்கோ ரமணி.... அண்ணா எங்களைப் பற்றி எல்லாம் யோசிக்காமல் உங்களை அவசரப்பட்டு இஞ்சை கூட்டிக்கொண்டு வந்தது பிழைதான்... ஆனால்.... அதுக்காக"

"அவரை ஒண்ணும் சொல்லாதீங்க கௌரி.... எல்லாத் தப்புக்கும் காரணம் நான்தான். ஆனா.... உங்கண்ணாவும் என்னை வெறுக்க ஆரம்பிச்சிட்டால்...?"

மேலே பேச முடியாமல் விம்மியவளைக் கௌரி தோள்களில் தட்டி ஆறுதல் படுத்தினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ரமணி.... சுமதியக்காவுக்கு வந்த கலியாணப் பேச் செல்லாம் அப்பிடியே தடைப்பட்டுப் போனதாலைதான் அப்பு உங்களிலையும் அண்ணாவிலையும் கோவமா இருக்கிறார். சுமதியக்காவுக்கு மட்டும் கலியாணம் நடந்திட்டா.... அதுக்குப் பிறகு நானும் ஆச்சியும் அப்புவை எப்பிடியோ சமாதானப்படுத்தி உங்களையும் எங்களோடை சேத்துக்கொண்டிடுவம். அது வரைக்கும் கொஞ்சம் பொறுமையா இருங்கோ...."

அவளது சமாதானப் பேச்சுக்களைக் கேட்டு நேற்று ரமணி எப்படி மகிழ்ந்து போனாள்.

பாரத்தில் சரியும் மரக்கறிக் கூடையை அப்படியும் இப்படியும் உற்சாகமாக ஆட்டியபடி நடந்து கொண்டிருந்தான் முரளி. அவனையும் அறியாமல் வாய் ஒரு சினிமாப் பாடலை "ஹம்மிங்" செய்தது.

சென்ற ஒரு கிழமையாகத்தான் இந்த உற்சாகம். நமசிவாயத்தின் நண்பர் நித்தியானந்தன் வந்த நேரம் நல்ல நேரமாகத்தான் இருக்க வேண்டும். மளமளவென்று காரியங்கள் நடந்தேறின.

மாப்பிள்ளை வெளிநாட்டில் வேலை பார்ப்பவன். தாய், தகப்பன் கொழும்பில் இருக்கிறார்கள். இவர்களைப் பற்றிச் சொன்னவுடன் அவர்களுக்குப் பிடித்துக் கொண்டது. சீதனம் எல்லாம் முற்றாகி, இன்று அவர்கள் சுமதியைப் பெண் பார்க்க வருகிறார்கள்.

"என்ரை தங்கச்சி சுமதியையா? அவைக்குப் பிடிக் காமலா? இந்தக் கலியாணம் மட்டும் நடந்திட்டால் போதும். என்னையும் ரமணியையும் பற்றிக் கதைக்கிற இந்த ஊராக்கள் வாயை மூடிடுவினம் பாருங்கோடா, எல்லாரும் உங்களைப் போல இல்லை. நீங்கள் ஒதுக்கிவிட்ட எங்கடை குடும்பத்துப் பிள்ளை எப்பிடி வாழப் போறாள்.... பாருங்கோ! இந்தக் காட்டு மிராண்டியள் எல்லாம் கண்ணைத் தூக்கிச் செருகிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவுக்கு... சுமதியின்ரை கலியாணத்தை ஜாம் ஜாம் எண்டு நடத்த வேணும்...."

மனம் என்னென்னவோ எல்லாம் நினைத்துச் சிறகடித்துப் பறந்தது. அவனது அப்பாகூட இப்போது எவ்வளவோ கடு கடுப்பைக் குறைத்துக் கொண்டுவிட்டார். அவனிடம் எதையும் கலந்தாலோசிக்காவிட்டாலும், அவனைக் கண்டால் பார்வை யில் உமிழும் வெறுப்பைக் குறைத்துக் கொண்டு விட்டாரே! அது போதாதா? சுமதி மட்டும் என்ன? ரமணி அவளைச் சீண்டிக் கேலி செய்யும் போதெல்லாம் முகம் சிவக்கின்றாளே தவிர கொஞ்சமாவது எதிர்த்துக் கதைத்தாளா? மனதளவில் அவள் நினைத்தபடி கௌரவமான வாழ்க்கை கிடைத்துவிட்டதுதான் அதற்கெல்லாம் காரணமா?

ஞாபகமாகச் சுமதிக்கு வாங்கிய மல்லிகை மாலை 'ஷேட் பொக்கட்டில்' பத்திரமாக இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டான்.

ரமணிக்கும் மல்லிகை மாலை என்றால் கொள்ளை ஆசை தான். அங்கு இருக்கும் பொழுது தலை நிறையப் பூ வைத்துத் தழையத் தழையச் சேலை கட்டிக் கொண்டு அவள் நடக்கும் அழகே ஒரு தனி. பாவம்! இங்கு வந்த நாள் தொடக்கம் அவள் தன்னை அலங்கரித்துக் கொள்வதுகூட இல்லை. அவளுக்கும் சேர்த்து இன்னும் இரண்டு முழம் வாங்கியிருக்கலாமோ?

ஒரு கணம் யோசித்தவன் பின் அந்தச் சிந்தனைகளைக் களைந்துவிட்டு வேகமாக நடந்தான். சுமதியின் கல்யாணம் முறையாக நடக்கட்டும். பின்பு இரண்டு முழம் என்ன பத்து முழம் வாங்கிவந்து ரமணியை அழகுபடுத்தலாம்.

"ஐயோ, ரமணி என்னை விடுங்கோ. அவர் பொம்பிளை பாக்க மட்டுந்தான் வாறார். கலியாணப் பொம்பிளை மாதிரி ஆக்கிறியள் என்னை...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கடை சுமதி எவ்வளவு அழகுன்னு மாப்பிள்ளைக்குக் காட்ட வேண்டாமா?"

"ரமணி... சுமதி அக்காவை மேக்கப் இல்லாமல் பாத் தாலும் மாப்பிளை மயங்கிடுவார்".

கிண்டல்களும் சிரிப்பொலிகளும் நிறைந்து வழியும் அறையினுள், மல்லிகை மாலையுடன் நுழைந்த முரளி அப்படியே திகைத்து நின்றுவிட்டான். இது சுமதிதானா?

அவனுடைய தங்கை சுமதிதானா? இவ்வளவு அழகாகவா? ரமணியின் கைவண்ணத்தில் பொலிவுற்று நிற்கும் சுமதியைக் கண்ணை இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்த முரளியைத் தாயின் குரல் இந்த உலகிற்கு அழைத்து வந்தது.

"முரளி... முரளி..."

"கௌரி இந்தா... இந்த மாலையைச் சுமதியின்ரை தலையிலை வைச்சிட்டு நீங்களும் போய் வெளிக்கிடுங்கோ.. அவை கெதியிலை வந்திடுவினம்...."

அவசரமாகக் கூறி முடித்தவன், தாயார் பார்வதி இருந்த முன் ஹோலை நோக்கி நடந்தான்.

"ஆச்சி.... கூப்பிட்டனீங்களோ?"

ஏதோ சொல்ல வாய் எடுத்து, பின் அப்படி ஒரு பெரு மூச்சு விட்டு, அங்கும் இங்கும் கண்ணைச் சுழற்றி, அவன் பார்வையைத் தவிர்த்து.... முரளிக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆச்சி என்ன சொல்ல நினைக்கிறாள்? ஒரு வேளை இவ்வளவு நாட்களும் படுக்கையில் இருந்துவிட்டு, இப்போது அதிக நேரம் கதிரையில் இருப்பது உடம்புக்கு முடியாமல் இருக்கிறதோ... அதைச் சொல்லத்தான் பயப்படுகிறாளா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆச்சி.... உடம்பிலை ஏதும் செய்யுதோ?"

"இல்லை முரளி..."

"அப்பிடியெண்டால்...."

"முரளி, சுமதியின்ரை அலுவல் தடங்கல் இல்லாமல் முடியவேணுமெண்டுதான் இதைச் சொல்லுறன்...."

"சொல்லுங்கோ...."

"அவை வந்து போகும் மட்டும் ரமணியை வெளியிலை வரவேண்டாமெண்டு சொல்லு... கௌரியைத் தங்கச்சி எண்டு சொல்லலாம்..... ரமணியை....?"

"ஆச்சி!...."

"அவசரப்படாதை முரளி. ரமணியைப் பற்றிச் சொன்னால் எல்லாமே பூதம் மாதிரி வெளிக்கிட்டிடும். அதுதான் அப்பு சொன்னார்...."

முரளி அமைதியாக வெளியேறினான்.

மாப்பிள்ளை வீட்டாருக்குச் சுமதியை நன்றாகப் பிடித்துக் கொண்டது. இன்னும் ஒரு கிழமையில் எழுத்துக்கு நாள் குறிக்க வருவதாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள்.

அன்று நடந்தவற்றை மீண்டும் மீண்டும் மனதில் அசை போட்ட வண்ணம் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள் சுமதி.

அவளுக்குப் பிடித்த சினிமா நடிகர் மாதிரி அவர் எவ்வளவு அழகு? அந்த அலட்சியமான பார்வை வெள்ளை வெளேர் என்ற நிறம்! அவளைப் பார்த்தவுடனேயே "எனக்குப் பிடிச்சிருக்கு" என்று சொல்லி மற்றவர்களைக் கொல்லென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிக்க வைத்த அந்தத் தைரியம்.... நான் அதிஷ்டசாலிதான், அதிஷ்டசாலிதான் என்று அவள் மனதைக் கும்மாளமிட வைத்தது.

"இன்னும் ஒரு கிழமையில் வருவதாகச் சொன்னார்களே. அதுவரைக்கும் யாழ்ப்பாணத்திலை நிண்டால், யாராவது அண்ணாவின் விசயத்தைப் பற்றி எழுதி அல்லது சொல்லி... இந்தக் கல்யாணத்தைக் குழப்பி விடுவினமோ? சீச்சீ... அப்பிடி ஒண்டும் நடக்காது. இந்த ஊர் ஆக்களைப் போல அவை விவேகமில்லாதவையா இருக்கமாட்டினம்... கடவுளே இந்தத் திருமணத்தை எப்பிடியும் முடிச்சுவை... என்னாலை அவரை மறக்க ஏலாது...."

"ஒரு நாள் அவரைப் பாத்திட்டு அவரை மறக்க முடியாதவள் போலை கிடந்து வேதனைப்படுறனே... அவரைப் பாத்தே என்ரை மனம் இப்பிடித் துடிக்கும் எண்டால், அவரோடை பழகினாப் பிறகு....."

ஒரு முறை பரிவோடு அவர்களைப் பற்றிச் சிந்தித்தாள். மறுகணம் இனிய கனவுகளோடு நித்திரையாகிப் போனாள்.

நாட்கள் மிக வேகமாகப் பறந்தன. வீட்டில் உள்ள ஒவ்வொருவரும் தத்தமக்குள்ளே சுமதியின் கல்யாணத்தைப் பற்றிய இனிய கனவுலகில் திளைத்துக் கொண்டிருந்தாலும் பார்வதி மட்டும் ஒரு கிழமையில் வருவதாகச் சொன்னவர்கள் ஏன் இன்னமும் வரவில்லை என்று யோசித்தபடி இருந்தாள். சுமதியைப் பெண் பார்க்க வந்த சமயம், அந்த ஓரிரு நாட்களில் அங்கும் இங்குமெனக் கொஞ்சம் கூடுதலாகவே நடமாடி விட்டது வேறு நெஞ்சைக் கொஞ்சம் அதிகமாகவே வலிக்கச் செய்தது.

"நித்தியானந்தனைக் காண விடியவெள்ளனவே போனவர், ஏன் இவ்வளவு நேரம் மினக்கெடுறார்?...."

பார்வதி யோசித்து முடிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கை அவன் முரளி!... அவன் இந்த வீட்டிலை இருக்கு மட்டும் ஒரு அலுவலும் சரியா நடக்காது..."

"ஏன் கத்திக் கொண்டு வாறியள்? என்ன நடந்தது?" பார்வதி நெஞ்சை அழுத்திப் பிடித்த வண்ணம் நமசி வாயத்தைக் கேட்டாள்.

"வேறை என்ன நடக்கும்? மாப்பிள்ளை வீட்டாருக்கு ஆரோ முரளின்ரை விஷயத்தைப் பற்றி வடிவா எழுதிப் போட்டினம்".

"நித்தியானந்தன் முதலே... அவைக்கு... முரளி கலியாணம் கட்டிட்டான் எண்டு சொன்னவர்தானே!"

"தாய் தகப்பன்ரை சம்மதம் இல்லாமல்.... ஒருத்தியைக் கூட்டிக் கொண்டு வந்து வீட்டை வச்சிருந்தால்... அது கலியாணமோ எண்டு நித்தியானந்தனையும் பேசிப்போட்டு... நேற்றிரவே அவையள் கொழும்புக்கு றயில் ஏறிட்டினமாம்...."

"அப்படி எண்டால்.....?" மேலே சிந்திக்க முடியாமல் பார்வதிக்கு கண்ணை இருட்டிக் கொண்டுவர அப்படியே கட்டிலில் மயங்கி விழுந்து விட்டாள் அவள்!

வியர்வை வழிய, வழிய மருத்துவரைக் கூட்டிக் கொண்டு வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்த முரளியின் மனம் நெருப்பாய்க் கொதித்தது.

"சீ...! எங்குமே மனிதர்கள் ஒரே மாதிரித்தானா? வெளி நாட்டில் வேலை பார்ப்பவன்.... எத்தனையோ விதமான திருமணங்களைக் கண்டிருக்கக் கூடியவன்.... பண்பாக... விவேகமாக... நடந்து கொள்வான் என எதிர்பார்த்தேனே! கடவுளே! எவ்வளவு பெரிய முட்டாள் நான்! ஏன் இப்படி ஒன்றன்பின் ஒன்றாகச் சோதனைகளைக் கொடுத்து எங்களை யெல்லாம் வாட்டுகிறாய்? ஆச்சிக்கு ஒன்று நடந்து விட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எப்படி இந்த வீட்டார் முகத்தில் விழிக்க முடியும்? தன் கல்யாணம் குழம்பிவிட்டதை அறிந்ததும் கட்டிலில் விழுந்து விம்மி விம்மி அழுதாளே சுமதி.... அவளை எப்படித் தேற்றப் போகிறேன்? சுமதியைப் பார்த்தவுடன் பட்டென்று "பிடிச்சிருக்கு" என்று கூறி அவள் மனதில் ஆசைகளை வளர்த்தவன் எவ்வளவு இலேசாக அதை மிதித்துவிட்டுப் புகையிரதத்தில் ஏறி விட்டான்!"

அலை பாயும் சிந்தனைக் கொத்துகளோடு, "டொக்டரை" அழைத்து வந்தவன், வீட்டினுள் இருந்து வந்த குரல் கேட்டு அப்படியே விக்கித்து நின்று விட்டான்.

"ஆச்சி.... எங்கடை வாழ்க்கைக்கு மண் போட்ட அண்ணா, இப்ப உங்களையும் சாக்காட்டிப் போட்டார்.... ஐயோ..."

சந்தேகமில்லை. அது சுமதியின் குரல்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

**– தேவமனோகரி**

தாயின் மேல் விழுந்து கதறி அழும் சகோதரிகளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் முரளி. இதயத்தின் வேதனைகள் ரணமாய் வலித்த போதும் அந்த ரணத்திலே வேல் பாய்வது போல் சுமதியின் வார்த்தைகள் தைத்த போதும் அவனால் அழமுடியவில்லை. அவன் தனக்குள்ளேயே நொருங்கிக் கொண்டிருந்தான்.

"சுமதி!" என்ன வார்த்தையம்மா சொல்லிவிட்டாய்? உன் வார்த்தைகளின் அக்கினியை உன்னால் புரிந்து கொள்ள முடிகிறதா? உங்கள் எல்லோரையுமே நான் எவ்வளவு தூரம் நேசிக்கின்றேன்! அந்த நெஞ்சை இந்த வார்த்தைகளால் கருக்கி விட்டாயே! ஆச்சியின் மேல் உயிரையே வைத்திருந் தவன் நான். நானா ஆச்சியைக் கொன்றேன்? ஆச்சி! நீ என்னத் தவிக்கவிட்டது மட்டுமல்லாமல் பழிகாரனுமாக்கிவிட்டாயே! உன் இழப்பையே என்னால் தாங்க முடியவில்லை. உன் மறைவுக்கு நான்தான் காரணம் என்ற பழியை எப்படித் தாங்கப் போகிறேன்?"

தனக்குள்ளேயே ஊமையாய் அழுது கொண்டிருந்தது அவனது நெஞ்சம். வேதனைகள் இதயத்தை விறாண்டிய போது, "ஒருவேளை இந்தக் குடும்பத்தின் துயரங்களுக்கு நான் தான் காரணமோ?" என்ற கேள்வி அவனது அந்தராத்மாவிற்குள் எழும்பாமல் இல்லை.

தனக்குள்ளேயே துவண்டு கொண்டிருந்தவன் மெதுவாக வெளியே வந்து வராந்தாவின் தூணில் சாய்ந்து கொண்டான்.

ஆத்திரமும் அழுகையுமாகக் குமுறிக் கொண்டிருந்த நமசிவாயத்தைச் சமாதானப்படுத்தி, அவரை நிதானத்துக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வருகிறார் உறவினர் தர்மலிங்கம். தன்னை ஒருவாறு கட்டுப்படுத்திக் கொண்டு, சொல்லி அனுப்ப வேண்டியவர்களின் பெயர்களை ஒவ்வொன்றாகச் சொல்ல ஆரம்பித்தார். இடை யிடையே அவர் தவறவிட்ட பெயர்களைத் தர்மலிங்கம் நினைவுபடுத்த, உறவினர் நண்பர்களின் பெயர்ப்பட்டியல் நீளுகிறது.

எல்லாவற்றையும் எழுதி முடித்து மெதுவாகச் செருமிக் கொண்டே, "வந்து... உன்ரை மருமோளின்ரை ஆக்களுக்கும் சொல்லத்தானே வேணும்..." என்று தயங்கிக் கொண்டே இழுத்தவர் வார்த்தைகளை முடிக்கவில்லை. அங்கே எரிமலை ஒன்று பெரிதாக வெடிக்கிறது!.

"என்ன சொன்னனி? எண்ட மருமோளோ? எனக்கு அப்பிடி ஒருத்தரும் இல்லை. கண்ட, கண்டதுகளை எல்லாம் இழுத்துக் கொண்டு வந்தால் அதுகளெல்லாம் என்ரை மருமோளாகி விடுமோ? ஆரைப் பாத்து உந்தக் கேள்வியைக் கேக்கிறாய்?"

வார்த்தைகள் அனலாய்க் கொட்டுகின்றன. தனக் குள்ளேயே குமுறிக் கொண்டிருந்த முரளி திடுக்கிட்டு நிமிருகிறான். அவரின் வார்த்தைகள் அவனுள் சுவாலையை எழுப்புகிறது. வேதனை வீம்பாக மாறுகிறது. முகம் சிவக்க அவர்கள் அருகில் சென்றவன் அழுத்தமாக....

"அப்பு! ரமணியின்ரை ஆக்களுக்கும் அறிவிச்சு விடுங்கோ...!

"என்னடா சொன்னனீ!" நமசிவாயத்தின் குரல் ஆத்திரத் தால் உயருகிறது.

"ஓமப்பு! அவைக்கும் சொல்லி அனுப்பிறதுதான் முறை. அவையும் வரட்டும். வரவேணும்...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெரிய முறை சொல்ல வந்திட்டார்; நீ செய்ததெல்லாம் முறையோடையோ செய்தனி? எல்லாம் முறை கெட்டுச் செய்துபோட்டு, இப்பதானோ முறை சொல்லிறாய்...?"

"அப்பு! உங்களின்ரை விருப்பம் இல்லாமை கலியாணம் செய்தனானே ஒழிய, நான் ஒண்டும் முறைகெட்டு நடக்கேல்லை. ஒரு பொம்பிளைப் பிள்ளைக்குத் துரோகம் செய்யப்பிடாதெண்டு ரமணியைக் கட்டினனான். நீங்கள் கொஞ்சம் மனிசத்தன்மையா யோசிச்சா என்னிலை பிழை இல்லை எண்டு உங்களுக்கே நல்லா விளங்கும்".

"ஓமடா! நான் மனிசத்தன்மை இல்லாதவன்தான். நீ தான் பெரீய மனிசத்தன்மை உள்ளவன். பாத்தியே இப்ப, உன்ரை மனிசத்தன்மையை! உன்னோடை பிறந்ததுகள் வாழ வழியில் லாமல் இருக்குதுகள். உன்னைப் பெத்தவள் ஒரேயடியாப் போய்ச் சேந்திட்டாள். இவ்வளவும் செய்துபோட்டு, எனக்கு முன்னாலை நிண்டு கதைக்கிறியே! உனக்கு வெக்கமில்லை? எவளையோ இழுத்துக் கொண்டு வந்திட்டு என்னையுமெல்லே உறவு கொண்டாடட்டாம்..."

அவரின் வார்த்தைகள் நெற்றிப் பொட்டில் வந்து தாக்கத் துடித்துப் போனான் முரளி. அந்த வார்த்தைகளின் வெம்மை கிளறிவிட்ட வேதனை ஆத்திரமாக மாற....

"நானொண்டும் அவளை இழுத்துக் கொண்டு வரேல்லை. முறையாக் கலியாணம் கட்டித்தான் கூட்டிக்கொண்டு வந்தனான். அவளுக்கும் கௌரவமான குடும்பம் இருக்கு. சொந்தக்காரர் எல்லாம் இருக்கினம் எண்டதைக் காட்டவாவது ரமணியின்ரை ஆக்கள் வரத்தான் வேணும். நான் அவையளுக்குச் சொல்லி அனுப்பத்தான் போறன்"

"என்ன திமிர் இருந்தா... இப்பிடிப் பேசுவாய் நீ! இந்த வீட்டுக்கை உன்னையும் அவளையும் விட்டதுதான் பிழையாப் போச்சு. அண்டைக்கு உன்னைப் பெத்தவளின்ரை கண்ணீருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக விட்டனான். உள்ளுக்கு விட்டதாலை அவையோடை கொண்டாட்டமும் நடத்துவன் எண்டு நினைச்சியோ!"

"இஞ்சை பாருங்கோ அப்பு! நானும் ரமணியும் இந்தச் செத்த வீட்டிலை இருக்கிறதெண்டா... ரமணியின்ரை ஆக்களுக்குச் சொல்லி அனுப்ப வேணும். இல்லையெண்டால் நான் இப்பவே வெளிக்கிடப் போறன்...."

"போடா வெளியாலை!... ஏன் இன்னும் இஞ்சை நிக்கிறாய்....?"

"அண்ணை என்ன இது? அப்பு! என்னப்பு இது! என்ன கதை கதைக்கிறியள்? இப்ப உங்கள் இரண்டு பேருக்கும் உங்கடை உங்கடை கௌரவப் பிரச்சினைதான் பெரிசாப் போயிட்டுதே ஒழிய, ஆச்சியின்ரை நினைவு கொஞ்சமும் இல்லை. அவவின்ரை நினைவு துளியாவது இருந்தா... அவன்ரை சவத்தை வைச்சுக் கொண்டு இப்பிடிக் கதைப் பியளே! அவ வாழ்ந்தது முழுக்க எங்களுக்காகத்தான். அவ இருக்கும் வரை அவவுக்கெண்டு ஒண்டுமே செய்யேல்லை. இனிச் செத்தபிறகாவது அவவின்ரை கடைசி ஊர்வலத்தை அவவுக்காகச் செய்யுங்கோ.... அதையும் உங்கடை உங்கடை சுயநலத்துக்காகப் பலியாக்காதேங்கோ...." கௌரியின் வார்த்தைகள் விம்மலோடு வெளி வருகின்றன.

அவளுடைய கதறல் அவர்களை நிதானத்துக்குக் கொண்டு வருகிறது. தன்னுடைய அவசரத்திற்கும் ஆத்திரத் திற்கும் தன்னையே நொந்து கொண்ட முரளி, மெதுவாகக் கௌரி அருகில் சென்று அவள் கரங்களைப் பிடித்தபடி "கௌரி, நான் ஒரு நிமிஷத்திலை நிதானத்தை இழந்திட்டன். ரமணி என்ரை மனுசி எண்டதை ஏற்காமைக் கேவலமாகக் கதைக்க என்னாலை... தாங்கேலாமல் போச்சுது! அவளை நான் கௌரவமாகக் கலியாணம் செய்தனான். அவளுக்கும் கௌரவமான குடும்பம் இருக்கெண்டதைக் காட்டத்தான் அவளின்ரை இனசனத்தைக் கூப்பிடச் சொன்னனான். அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தா.... அதுக்குப் பிறகு இந்த ஊராக்கள் இப்பிடிக் கேவலாமாக் கதைக்கிறதை விடுவினம் எண்டு நினைச்சன்...."

அந்த மனிதக் கூட்டத்திற்குள் தனித்து விடப்பட்டவளாய், ஒரு மூலையில் ஒதுங்கிப்போய் மறைந்திருந்தாள் ரமணி. செத்தவீட்டிற்கு வந்தவர்கள் ஒவ்வொருவரினதும் பார்வையில் பட்டு, சுடப்பட்டு அனலாய்த் தவித்துக் கொண்டிருந்தாள். வெறுப்பும் வெம்மையும் நிறைந்த அந்தப் புழுக்கத்திலிருந்து தப்பியோட வேண்டும் போலிருந்தது.

அந்த வேதனையிலும் முரளியைப் பார்க்க வேண்டும், அவன் மனநிலையைப் புரிந்து கொண்டு ஆறுதல் படுத்த வேண்டும் போல இருந்தது. அவனுக்குத் தாயின் மேலிருந்த அன்பின் ஆழம் அவளுக்குத் தெரியும். எத்தனையோ முறை அவளோடு கதைக்கும் போதெல்லாம், "ஆச்சி... ஆச்சி...." என்று உணர்ச்சியோடு கதை சொல்லியிருப்பான். அவளைத் திருமணம் செய்து இந்த ஊருக்குக் கூட்டி வரும்போதுகூட "ரமணி" எல்லாரும் இந்தக் கலியாணத்தை எதிர்க்கலாம். ஆனா.... ஆச்சி ஒண்டுமே சொல்லமாட்டா... தனக்குள்ளை ஏமாற்றமா இருந்தாக்கூட..... என்ரை சந்தோஷத்துக்காக உன்னையும் சந்தோஷமா எற்றுக் கொள்ளுவா...! அவன்ரை மனம் அப்பிடிப்பட்டது. அந்த மனதுக்கு ஆரிலையும் அன்பு காட்டத்தான் தெரியுமே ஒழிய வெறுக்கத் தெரியாது..." இப்படியிப்படி எவ்வளவோ சொன்னான்.

தாயின் மேல் அவ்வளவு அன்பு வைத்திருந்த அவன் இதயம் எப்படித் துடிக்கும்?

"ஓ! முரளி, நீங்க எவ்வளவு நம்பிக்கையோடை வந்தீங்க? இப்ப அந்த நம்பிக்கையின்ரை அத்திவாரமே நொருங்கிப் போயிடுச்சே! உங்களால எப்பிடி இதைத் தாங்கிக்க முடிஞ்சுது? ஆச்சி எண்ட அன்புருவம் மட்டுமில்லை... எங்க வாழ்க்கையில... சமூகச் சூட்டில இருந்து ஒதுங்கிக்கிட வசதிப்பண்ணக் கூடியதா இருந்த ஒரே ஒரு நிழல் மரமும் சரிஞ்சிட்டுதே!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் நெஞ்சங்களில் கனலேற்றி, வீட்டின் தாயையும் பயணம் அனுப்பியாயிற்று. வீட்டில் இப்போது வெறுமை... வெறுமை!

எதிரே சூன்யமாக, கேள்விக்குறியாகத் தெரிந்த எதிர்காலம் அவளைப் பயமுறுத்தியது. அந்தப் பயத்துடனேயே அவள் முகம் சுருங்கிப் போய் ஒரு வாரம் கழிந்துவிட்டது. வந்த அவள் வீட்டாரும் போய்விட்டார்கள்.

வீடே வெறுமைப்பட்டுக் கிடக்கிறது.

ரமணியின் கண்ணில் ஊற்றெடுக்கும் அருவியைத் துடைத்து விடுகிறான் முரளி.

"இனி நிரந்தரமா அழத்தானே வேணும்" என்றுவிட்டு மாமாவையும், மச்சாள் சுமதியையும் அர்த்தத்தோடு பார்க்கிறாள் ரமணி.

'அண்ணை இனியும் இங்கை இருந்தா அண்ணியைச் சாகடிச்சுப் போடுவினம். "ட்ரான்ஸ்பர்" எடுத்துக்கொண்டு வாங்கோ ஊர்பேர் தெரியாத ஊருக்கு! நானும் உங்களோடை வாறன்! இந்த உலகம் இவைக்குத்தான் சரி' என்றபடி கௌரி தகப்பனையும் தமக்கையையும் சுட்டுகிறாள்.

இந்தச் சமூக வலையை விட்டு மூவரும் புறப்படும் நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. புதிய பயணத்தில் மூவரின் கவனமும்.... அது நிச்சயமாக ஏணியை நோக்கித்தான் இருந்தது.

சுமதியும் தகப்பனும் இன்னும் அழுது கொண்டிருந் தார்கள்.

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யாழ்ப்பாணத்துக் கிராமியச் சூழலுடன் தொடங்கிய கதை மலையகத் தோட்டச் சூழலுடன் பொருந்தி வளர்ந்து திரும்ப யாழ்ப்பாணச் சூழலில் சுழன்று நிறைவுபடுத்தப்படுகின்றது. இல்லையில்லை.தொடர்ச்சிப்படுத்தப் படுகின்றது . இன்றைய காலத்து இலத்திரனியல் சாதனங்கள் எதுவும் இல்லாத, கடிதப் பரிவர்த்தனை மட்டுமே கைகொடுத்த ஒரு காலத்தின் சாதனையாக இப்படைப்பு அமைந்துள்ளது .

கணேச ஐயர் சௌந்தரராஜன்







9 786245 407033

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org